56--59
829

திராவிட நாடு

3.6.51

மலர் 9 இதழ் 50

JL
V2ll N42D
N51.9.50
85536

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 JUL 1951
MADRAS

REGD. No. M 4642

# திராவிட நாடு

இலங்கை 15 சதம் | விலை அணா 2

மலர் 9 | 3-6-51 | இதழ் 50

## தேரோட்டம்

★

[அண்ணல்]

"லோகம் வரவர கெட்டுண்டே போறது. காலா காலத்திலே நடக்கவேண்டிய கார்யாதிகளெல்லாம் நடப்பதே இல்லை. நாச காரியங்களிலே, மனுஷா, ஆசையைச் செலுத்த ஆரம்பிச்சுட்டா! ஒரு கட்டுப்பாடு இல்லே — அவனவன் தன்னிஷ்டம் போல கூத்தாடுறான்; எடுத்த காரியத்தை ஒழுங்காச்செய்துமுடிக்கணுமேங்கிற எண்ணம் மங்கிண்டே போறது"

"எதைப்பத்திச் சொல்றேள்?"

"ஊர் உலகம் போற போக்கைப் பத்தித்தான். முன்பெல்லாம் உத்சவான்னு, எவ்வளவு ஜனங்க கூடுவா; வீதியிலே பெருமாள் எழுந்தருளி வந்தா, எப்படியிருக்கும் கூட்டம்?........ஊம் — என்ன பார்க்கிறேள்"

"ஆத்திலே ஒருத்தருமில்லையோ, கொஞ்சம் தீர்த்தம் வேணும்"

"ஆத்துக்காரி சினிமாவுக்குப் போயிருக்கா. ஏதோ புதுப் படமாம். நேக்கும் ஆசைதான்! எங்கே விடுறது இந்த கோயில் காரியம். தேரோட்டம் தொடங்கியதிலேருந்துதான், ஒரே தொந்திரவாயிருக்கே!"

"ஆமாம். இன்னிக்குக்கூட, வடம் அறுந்துபோச்சாமே. ஆறு பேருக்கு நல்ல அடியாமே......"

"அதையேன் கேட்கிறேள். [illegible]விக்கூத்து. தேர்மேலே உட்கார்ந்துண்டிருந்தேன் — நம்ம பக்கத்து வீட்டு பட்டாச்சாரியாரோடு பேசிண்டு. 'ஐயோ!'ன்னு ஒரு சப்தம். தேர், திடீர்ன்னு அசைந்துச்சு. பதறிட்டோம் — இரண்டு பேரும். பார்த்தா மளமளன்னு, ஒருத்தன்மேலே ஒருத்தன் விழுறான்க. ஒரே கூச்சல் 'வடம் அறுந்து போச்சு! அறுந்துபோச்சுன்னு!'"

"பிறகு......?"

"பிறகு என்ன! தேர்லேருந்து நாங்க இறங்கபட்டபாடு பெருமாளுக்குத்தான் தெரியும். நல்லவேளை போலீஸ்காரா வந்தா......"

"ஏன், இப்படி வடம் அறுகனும். முந்தாநாள் வேறே அறுந்தாச்சு. நேற்று தேர் ஓடலே. பிறகு இன்னிக்குப் போனு, இன்னைக்கும் அறுது......"

"அதைத்தான் சொல்லவந்தேன். தேவாளுக்கு தெரியாதது இல்லே! உலகம் கெட்டுப் போச்சு. சேவா உணர்ச்சி மறைஞ்சு போயிட்டுது! எவனுக்காவது இதயசுத்தம் இருந்தாத்தானே. தேரோட்டம், பகவான் காரியம். அதை நடத்திவைக்கணும்கிற எண்ணத்தோடா வர்ருன்க, தேரிழுக்க. அந்த நினைவோடே வந்தா, தேர் ஒரு நாளிலே ஓடிவந்துடாது. பக்தி, பகவத் காரியங்கிற சிரத்தை, எல்லாம் மறந்துண்டு வர்றது. இகலோக இச்சைகளிலே பிரியம் வெச்சுட்டா. தேவா, தீர்த்தம் கேட்டேள் இல்லே!"

"சிரமம் வேண்டாம், நான் வர்றேன். அதோ, உங்காத்துலேகூட வந்துட்டாப்பலே இருக்கு, சினிமாவிலிருந்து"

* * *

வடம் அறுந்தது! தேர்மீது அமர்ந்துவந்த பட்டாச்சாரி தேர் அசைந்தபோது தனக்கேற்பட்ட பயங்கரத்தைச்சொன்னார், பக்கத்து வீட்டுக்காரரிடம். அதோடு, உலகத்தில் சேவா உணர்ச்சியும், பக்தி சிரத்தையும் குறைந்ததுபற்றியும் வேதனைப்பட்டார். ஆனால் அவரது 'சகதர்மணி'யோ தேரோட்டத்திருவிழாவுக்குச் செல்லவில்லை. பெருமாளைச் சேவிக்கப் போகவில்லை; சினிமாவுக்குச் சென்றிருந்தாள்!

தேர், சந்தியிலே நின்றதற்குக் காரணம் சேவா உணர்ச்சி மங்கிவிட்டது — தேரிழுப்போரிடையிலே பக்தியார்வம் இல்லை. இது, பட்டாச்சாரியாருடைய வேதனை. அவரோ, தேர் இழுத்தவரல்ல. தேர்மீது 'பகவானுக்கு'ப் பக்கத்தில் இருந்தவர். எனினும் வேதனைப்பட்டார், தேர் நிலைக்குவந்து சேரவில்லையே என்று [illegible]

85536



லையே, ஏன்.....தான் ஆனால் 'பக்தி' யால் உந்தப்பட்டு, பகவானே! பாவி யென்னைக்காப்பாற்று, என்று ப்ஜித்துக்கொண்டே சென்று, தேர்வடம் தாங்கி, வியர்வை வெள்ளமாக, வெய்யில் கொளுத்த, அதையும் பொருட்படுத்தாது, தேர் இழுத்தவன் வீட்டிலே என்ன நடந்திருக்கும், வடம் அறுந்த அன்றைய தினம்!

* * *

"பாலூட்டிச் சீராட்டி வளர்த்தேனே, மகனே! பத்துமாதம் சுமந்து பெற்ற பாவி வயிறு எரியுதேடா! நீ படுமோசம் செய்துவிட்டுப்போய்விட்டாயே. ஐயய்யோ மகனே! அநியாயமாய்மாண்டாயே!'

"ஐயோ, அத்தான்! ஆசை முகம் காட்டி, என்னை அன்போடு அழைப்பீர்களே! இப்படி அலங்கோலம் செய்துவிட்டீர்களே. ஐயய்யோ, அத்தான்!!"

"அப்பா! அப்பா!......என்னைப் பாருப்பா. எம்பா, பேசமாட்டேங்கிறே......"

தாயின் கண்களிலே அருவி! மனைவி கதறும் கோரம்! குழந்தை, தன் மழலைமொழியால், ஆசைத் தந்தையை அழைத்து, பதில் கிடைக்காததால் அழுது நிற்கும் பரிதாபம்!

வேதனை, அந்த வீட்டிலே கரைபுரண்டோடும்! விழிகள் கண்ணீரைச் சொரியும்! வீழ்ந்த வாலிபன் இரத்தத்தை மனைவியின் கண்ணீர் கழுவும்! தாயின் அழுகை அந்த ஏழை 'பக்தனின்' நாமத்தை அழிக்கும்! இரத்த வெள்ளம், அந்த வீட்டிலே! அங்கே எழும்பும் 'ஐய்யோ' என்ற அலறல்—அழுகுரல்!

அவனது நெஞ்சிலே ஏற்பட்ட காயம்! ஒடிந்துதொங்கும் கால்கைகள்! நொறுங்கிப்போன மண்டை! உடைந்துபோன எலும்புகள்! அந்தக் கோரத்தைக் கண்டு, பலர் திடுக்கிட்டுத் திரும்பும் காட்சி!

எவ்வளவு வேதனையாக இருக்கும், வடம் அறுந்ததால் மாண்டவன் வீடும், அடிபட்டு கைகால் போனோரின் இல்லங்களும்.

கடந்த 25, 27 தேதிகளில் காஞ்சி வரதராஜப் பெருமாள் தேர் வடம், இரண்டு முறை அறுந்தபோது இருவர் மாண்டனராம்; பலர் படுகாயமாம். இந்த நிகழ்ச்சிகளால் எழும்பிய பரிதாபம்! கூக்குரல்! கண்ணீர்! பயங்கரமான நிகழ்ச்சி— கேட்டால் இதயங்கள் வெடிக்கும்.

* * *

வடம் அறுந்தது! வாசுகியைக் கயிறாகக் கொண்டு, மகாமேரு மலையை மத்தாக வைத்து, திருப்பாற்கடலைக் கடைந்த பெம்மான் மகாவிஷ்ணுவின் பிரதிபிம்பம் கஞ்சி வரதர், சந்தியிலே, தவித்தார்! அவரது திருச்சேவைக்கு வந்தோரோ, காலிழந்து, கையொடிந்து, எலும்பு நொறுங்கி, மார்புவீங்கி, உயிரிழந்து போயினர்! சேவா உணர்ச்சியோடு வந்தோர்தாம் இவர்கள். சேவா உணர்ச்சிக்குக் கிடைத்த, பரிசு இது!

ஆனால் தேர்மீதிருந்து சிறிது அசைந்ததால் திடுக்கிட்ட பகவானின் பக்கத்திலிருக்கும் பாக்யத்தைப் பரம்பரை பரம்பரையாக அனுபவிப்பவர்களோ, 'சேவா உணர்ச்சி இல்லாததால் வந்தவினை' என்று சொல்லத் தவறவில்லை.

* * *

இந்த வேதனையை நினைவூட்டுவதுபோல, கடந்த வெள்ளியன்று ஷில்லாங் என்ற இடத்திலே பேசியிருக்கிறார், நமது மாகாணக் கவர்னர்களிலே ஒருவரான ஜயராம்தாஸ் தௌலத்ராம்—தபால் தந்தி சம்பந்தமான, கண்காட்சியொன்றைத் திறந்துவைக்கும் போது.

"பொதுமக்களுக்காகப் பணி புரியும் அதிகாரிகள் சேவா உணர்ச்சியோடு,பாடுபடவேண்டும். அப்பொழுதுதான் எல்லாக் காரியங்களும் சரிவர நடக்க முடியும்,"

இந்தக் கருத்தைக் கூறியபோது, கனம் கவர்னர், கதையொன்றையும் தெரிவித்திருக்கிறார். சிறு வகுப்பிலே நாம் படித்ததுதான்!

தபால் சேவகன் ஒருவன், அவன் தபால்பையோடு, ஓடிக்கொண்டிருந்தான். 'எதிரே புலி வரும்' என்று பலர் எச்சரித்தனர். அவன் அஞ்சவில்லை. கர்மமே கண்ணாயினான். புலி வந்தது. ஓடவில்லை. புலி பாய்ந்தது — அவன் ஓடவில்லை. தப்ப முயலவில்லை. ஆனால் புலி கடித்தது. அப்போதும் தபால் பையின்மீது கொண்ட கவனத்தைவிடாது, தனக்குப் பின்னே வந்துகொண்டிருந்த ஜனக்கூட்டத்தை நோக்கிவீசினான்.

இந்தக் கதையைக் கூறி, கஷ்டம் வந்தால்கூட, கடமையிலிருந்து சிறிதும் தவறக்கூடாது என்று, எடுத்துக் காட்டியுள்ளார்.

நல்ல அறவுரை, இது! கஷ்டம் வந்தபோதுகூட, அந்த சேவகன், தன் சேவா உணர்ச்சியைப்பெரிதாக எண்ணினான். அவனது கடமையார்வம்; களிகொள்ளக் கூடியதுதான். ஆனால், கவர்னர் கூறியிருக்கிறார் என்னும்போதுதான் நமது கவனமும் சிந்தையும், வேறுபக்கம்; திரும்புகிறது.

கவர்னர் மட்டுமல்ல, டில்லி சர்க்கார் கூட, மே 27 அன்று, தமது அதிகாரிகளுக்கு, சேவா உணர்ச்சி, சம்பந்தமாக ஒரு சுற்றறிக்கை விடுத்திருக்கிறது.

"ஒவ்வொரு ரெவின்யூ அதிகாரியும், தான் ஒரு பொதுஜன சேவகன் என்ற முறையில், சர்க்காருக்கு மட்டுமின்றி, மக்களுக்கும் சேவை புரிபவராகக் கருதவேண்டும்."

டில்லி சர்க்காரின் உத்திரவு, சர்க்கார் அதிகாரிகளின் சேவாஉணர்ச்சி எப்படியிருக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறது.

இந்த அறவுரை அதிகாரிகளால் அலட்சியப்படுத்தக்கூடாத ஒன்றுதான்—அவசியமானதுங்கூட.

இந்த இரண்டு அறவுரைகளும் பிறந்த இதே வாரத்தில், கோவை மாவட்டத்தில், கஞ்சித் தொட்டிகள் நோக்கி மக்கள் திரளுவதைக் கண்ணாரக் காணும் நமது மாகாண முதலமைச்சர், வேறு ஒரு அறவுரை விடுத்துள்ளார். இது, சர்க்கார் அதிகாரிகளுக்கல்ல; பொதுமக்களுக்கு.

"சர்க்காரையே மக்கள் எதற்கும் நம்புதல் ஆகாது. நாட்டுக்கு நம்மாலான கைங்கர்யத்தைச் செய்வோம் என்கிற சேவா உணர்ச்சி, மக்களிடம் குறையக்கூடாது — வளர வேண்டும்."

இந்த அறவுரையும் தேவையற்றதல்ல. கவர்னரும், மத்யசர்க்காரும், மாகாண முதலமைச்சரும், சேவா உணர்ச்சி, அதிகாரிகளிடமும், சர்க்கார் ஊழியர்களிடமும், பொதுமக்களிடமும் அதிகரிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.



இந்த அறவுரைகள், வரவேற்கக் கூடியவைதான். சேவா உணர்ச்சி கூடாதென்றோ, ஆகாதென்றோ யாரும் கூறமுடியாது.

மலையுச்சி நோக்கி, தலையிலே பளு தாங்கி, செல்லுகிறான் ஒருவன்! பளுவை, எப்படியும்கொண்டு போய்ச் சேர்த்திடவேண்டும், என்ற கடமைப் பொறுப்பு அவனிடம் இருந்தால்தான், சுமை அங்கு சென்று சேர முடியும். 'நமக்கென்ன' என்று, பாதிவழியிலேயே பளுவைப் போட்டால், அது பாதகமானது மட்டுமல்ல; அவனது சேவையை எவரும் விரும்பார். அதுபோலவே, எவரெவரிடம், எந்தெந்தக் காரியங்கள், ஒப்புவிக்கப் பட்டனவோ, அவையனைத்தையும் செய்து முடிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடும் ஆசையும் இருக்கத்தான் வேண்டும்.

ஏர் பிடிக்கும் உழவன், 'நமக்கென்ன' என்று இருந்தால், கழனி காலியாகத்தான் கிடக்கும்! ஆலையிலே உழைப்பவன் அலட்சியம் காட்டினால், இயந்திரம் இயங்காது. விமானி, தன் சேவையின் சிறப்பை, மறந்தால் விபத்துத்தான் நேரும். அவரவர், தங்கள் தங்களது பணிகளைச் செவ்வனே செய்து முடிக்கத்தான் வேண்டும்.

சேவாஉணர்ச்சி,வளர்ந்தால்தான், பரஸ்பரம் மனித சமுதாயம் வாழ முடியும்.

தேர் சந்தியிலே நின்றதுக்குக் காரணம், மக்களிடம் சேவா உணர்ச்சி இல்லாததால்தான், என்று பட்டாச்சாரியார்வேதனைப்பட்டார். ஆனால் தேரிழுத்தவரோ, சேவா உணர்ச்சியுடன் சேவை செய்ததும், கிடைத்த பலனைப் பாரீர்! என்று தமது முகத்தையும் நெஞ்சையும், ஒடிந்த காலையும் உடைந்த மண்டையையும் காட்டுவர்.

தேரிழுத்தவருக்கோ வேதனை— வடம் அறுந்ததால். ஆனால் தேர் மேலிருந்தவருக்கோ — ஆத்திரம், தேர் ஓடாததால்.

வேதனை விளைந்ததற்குக் காரணம் வடம் சரியில்லாமல், அறுந்ததால் வந்தவிபத்து.

அதாவது, கொடுக்கப்பட்ட வேலையைச் செய்யச் சென்றோர் வசம், பழுதான வடத்தைத் தந்ததால் இக்கேடு சேர்ந்தது—தேரும் சந்தியிலே நின்றது.

தேர் இழுப்பது-அவசியமானதா, பத்தாவுண்டு சாமிச்சிலையை பதினாயிரம் பவுண்டு தேரில் வைத்து பல்லாயிரம் மக்கள் ஏன் இழுக்கவேண்டும்?—இது தேவையா — என்பது, வேறு கேள்வி.

ஏடாகப்பிக்கையல்லவா, இது. சாதாரண வாகனத்தில் கொண்டு போகக்கூடிய 'சட்டிலை' பிரமாண்டமான தேரொன்றில் வைத்து, இழுத்து, ஏன் அனாவசியமாக வேதனைப்படவேண்டும் — இது அர்த்தமற்றதுதானே, என்பது வேறு விஷயம்.

விஷயம் வேறாயிருந்தாலும், அதனால் வந்த விளையைப் பார்க்கும் போது, ஒரு பாடம் விளங்கும் சேவா உணர்ச்சி சம்பந்தமாக.

இருட்டு நேரம். கையிலே கன்னக்கோல்தாங்கி வெளியிலே புறப்படுகிறான் கள்ளன். அலைந்து திரிகிறான் — ஒரு வீட்டுக்குள் நுழைகிறான் ஆனால் அகப்பட்டுக்கொள்கிறான், போலீசார்வசம்.

அக்கள்வனின் கதிபற்றி கேள்விப்படும், கள்வர்கள் தலைவன், 'அவனிடம் சேவா உணர்ச்சிஇல்லை. இருந்தால் எப்படியும் தப்பியிருக்கலாம்' என்று கூறினால் என்ன நினைப்பர்!—கேட்போர்.

திருட்டு—பாதகமான காரியமல்லவா? அதில் அவனை ஈடுபடுத்தியதே பாபமாயிற்றே! இருந்தும் அவனுக்கு கடமைப்பொறுப்பில்லையென்று சொல்கிறாயே — என்றே, கேட்பர்.

காரணம், ஈடுபடும்காரியங்களிலே சமுதாயத்துக்கு நலன் தருவது; நலன் தராததோடு கேடு பயக்குவது, என இருவகைகள் உண்டு.

ஏர் உழுவது, பார் திருத்தும் செயல்! இருட்டுகிற நேரத்திலே களவாடுவது, சமுதாயம் வெறுக்கும் காரியம்!

ஆகவே, சேவா உணர்ச்சியை மதிப்பிட, செய்யும் தொழில் நல்லதா, கெட்டதா என்பதும், கவனிக்கப்பட வேண்டும்.

அதே நேரத்தில், சேவா உணர்ச்சி பற்றிக் கூறுவோர், சேவா உணர்ச்சிக் கொண்டோராகவும் இருக்கவேண்டும்.

சகதர்மணியைச் சினிமாவுக்கு அனுப்பிவிட்டு, பெருமாளைச்சேவிப்போர் குறைந்துவிட்டனர் என்று வேதனைப்படும் பட்டாச்சாரிகள்— சேவையின் சிறப்பைக் குறித்துப் பேசினால்!

தேரின் வடத்தைத் தொட்டுக்கூடப் பாராது, வடத்தை யிழுத்தோரிடையிலே கட்டுப்பாடு இல்லை, ஆகவே வடம் அறுந்தது, என்று விளக்கம் பேசினால்!

இதைப் போலத்தான், கவர்னரும், மத்ய சர்க்காரும், மாகாண முதலமைச்சரும் பேசியிருக்கிறார்கள்.

அதிகாரிகளுக்கும், சர்க்கார் ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும், சேவா உணர்ச்சி குறித்து போதனை புரிந்திருக்கிறார்கள்.

அறவுரை தந்த அந்த மூவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள்— காங்கிரஸ் ஆட்சியாளர்கள்.

சேவா உணர்ச்சியின் அவசியம் குறித்து வலியுறுத்தியிருக்கிறார்கள் தமது சிப்பந்திகளுக்கும், ஊழியர்களுக்கும், மக்களுக்கும். ஆனால் அவர்கள் வலியுறுத்தும் சேவா உணர்ச்சி அவர்களிடம் இருக்கிறதா!

எடுத்த காரியத்தை, எத்தகைய இடர் வரினும் முடித்தே ஆகவேண்டும்—புலி தடுத்தும் தயங்காத தபால் சேவகன்போல, என்ற கடமை யார்வம், அவர்களிடம் உண்டா? மக்களோடு சேவையார்வத்துடன் பழகவேண்டும் என்ற தாக்கீது பிறப்பித்துள்ளனர்—மத்ய சர்க்கார். இது வேண்டிய ஒன்றுதான். ஆனால் இந்த மனோபாவம், மத்யசர்க்கார் மந்திரிமார்களிடம் காணக் கிடைக்கிறதா? மாகாண முதலமைச்சர் பொதுமக்களிடம் சேவா உணர்ச்சியை எதிர்பார்க்கிறார்—நியாயமானதுதான். ஆனால், அது, அவரிடம் இருக்கிறதா?

சேவா உணர்ச்சி குறித்துப் பேசுபவர்கள், அதிகாரம் பெற்றோர் என்பது மட்டுமல்ல; மாதா மாதம் ஆயிரக் கணக்கில் சம்பளம் பெறும் அந்தஸ்தும் கொண்டவர்கள். வருமானமும் அதிகாரமும் அதிகம்— ஆயினும் அவர்கள் சேவா உணர்ச்சி, போதனை அளவில் நிற்கிறது. ஒட்டிய வயிறும், எண்ணெயில்லாத் தலையும், இடிந்த குடிசையுமாக நிற்கும்

ஏழை மக்களுக்கு 'சேவா உணர்ச்சி' குறித்துப் பேசுகின்றனர்.

போதனை புரிவோரிடம், பொறுப்பு இல்லை; பிறருடைய வேதனையின் மீது தங்களது வாழ்க்கை மாளிகையை அமைத்துக் கொண்டவர்கள் அவர்கள். ஆகவே, சேவா உணர்ச்சிபற்றி செல்லுமிடந்தோறும் எடுத்துச் சொல்லத் தயங்குவதில்லை.

அதிலும், அவர்கள் அமர்ந்திருக்கும் ஆட்சித் தேர்—பிரம்மாண்டமானது. இந்திய உபகண்டத்துக்கு அமைத்திருக்கும் அரசியலமைப்பு மிக மிகப் பளுவானது.

தேரோட்டம் நடத்தும் தெய்வ பக்தர்கள், சிறிய சிலைக்காக, மிகப் பெரிய தேரை அமைத்து, வீதிகளிலே இழுக்க பல்லாயிரக்கணக்கான மக்களைத் தேடிப் பிடிக்கிறார்கள்.

அதேபோலத்தான், அலைந்து குலைகிறார்கள், மிகப் பெரிய பரந்த உபகண்டத்துக்கு ஒரே ஒரு ஆட்சித் தேரை அமைத்துக்கொண்டு, அதை நடத்திச் செல்லவேண்டும் என்ற வெறியோடு நடக்கும், இவர்கள்.

உலகளந்த பெருமாளை, உயரமான தேரிலே வைத்து, இழுத்துச் செல்லவேண்டுமென்பது, வீண் பெருமையின் விளைவு; வேண்டாத மூடநம்பிக்கை.

அதேபோல, பல கோடி மக்கள் வாழும் இந்திய உபகண்டத்தை நிர்வகிக்க பெரிய சர்க்கார் அமைத்துக்கொண்டு, அதை எப்படியாவது நடத்திச் செல்லவேண்டுமெனத் துடிப்பது, அர்த்தமற்றது — அவசியமில்லாதது.

இருந்தும் வீண் ஜம்பத்துக்காக, 'இந்தியா பெரிய நாடு' என்று கூறிக் கொள்வதற்காக, பெரிதான ஆட்சித் தேர் ஒன்றை அமைத்துக் கொண்டு, அதன் உச்சியில் உட்காரும் பாக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டு, அதை இழுத்துச் செல்வோரை நோக்கி, 'சேவ—போதனை' செய்கிறார்கள் — பட்டாச்சாரிகள் போல.

தேர் மிகப் பெரிது — ஆகவே, இழுப்போர், அதிகம் தேவைப்படுகிறது.

ஆட்சித் தேர், மிகவும் அகண்டிருக்கிறது. எனவே, ஆள்வோர், அடிக்கடி 'கட்டுப்பாடு' குறித்து, போதனை செய்யவேண்டியதாகிறது.

தேர் பெரிதானதால், அதை இழுக்க வேண்டிய, வடம், அடிக்கடி பழுதுபடுகிறது — இவர்களின் டில்லி ஆட்சியிலே அடிக்கடி அலங்கோலங்கள் ஏற்படுவதுபோல.

வடம் அறுகிறது — வாடுகின்றனர், இழுப்போர். வேதனைப்படுகின்றனர் பசி, பட்டினி, இல்லாமை முதலியவைகளால்.

ஆனால், இந்த வேதனையைப் போக்கும் சூட்சுமத்தை உணர்ந்து, நடக்க வேண்டியவர்களோ, 'சேவா உணர்ச்சி' பற்றிப் போதனை புரிகிறார்கள்—சினிமாவுக்கு மனைவியைப் போகச் சொல்லிவிட்டு.

தேரோட்டம்—ஒரு வீண் விழா. எனினும் வீண் பெருமைக்காக, அதில் ஈடுபடுவதால் பயன், எவருக்கும் ஏற்படாது. அழுகுரலும், 'ஐயோ மாண்டாயோ!' என்ற கூச்சலும்தான் எழும்பும். இதை, இரண்டு தேரோட்டிகளும் உணர வேண்டும்—வாழ்வு, மலர; வேதனை நீங்க.

✲

# ★ சுகவாழ்வு மலர ★

— M. N. மீ —

காங்கிரஸ், ஆட்சிபீடமேறிய பிறகு, நாட்டின் பொருளாதாரம், புயலில் சிக்கிய குடிசையாகி விட்டது. இந்திய பூபாகத்தின் ஏகச்சக்ராதிபதிகளாக விளங்கும், மத்யசர்க்காரில் மட்டுமின்றி, மாகாண சர்க்கார்களும், பொருளாதாரச் சீர்குலைவால் திண்டாடித் தவிக்கிறார்கள்.

எங்கு திரும்பினும் 'இல்லை' என்ற கூக்குரல், 'பசிபசி' என்ற பரிதாப அலறல், உண்ண உணவில்லாத கோளாறு, உடுக்க உடையில்லாத அவலம்—இவை, நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்ததின், காட்சிகள்.

இந்தக் கேவலம், காங்கிரஸ் ராஜ்யாதிபதிகளின், நான்கு ஆண்டு, ஆட்சிக்காலத்திலேதான் அதிகமாகியிருக்கிறது. சுதந்திரம் பெற்ற பிறகே இந்தத் துயரச்சம்பவங்கள், தொடர்கதையாகியிருக்கின்றன.

மனிதனின் அடிப்படைத்தேவைகள் இரண்டு. ஒன்று உணவு, இரண்டாவது உடை. இந்த இரு விஷயங்களும், இன்று பெரிய பிரச்னைகளாகிவிட்டன.

உணவும் உடையும், இன்று பிரம்மாண்டமான பிரச்னைகள்.

உணவு உற்பத்திப் பெருக்குத் திட்டம் (Grow more good) பல்லாண்டுகளாக அமுல் நடத்தப்பட்டு வருகிறது. இருந்தும், உணவு, இல்லாத கேவலம் உண்டாகியிருக்கிறது.

ஆட்சிபீடம் ஏறிய சுயராஜ்யக்காரர்களுக்கு செல்வாக்கு இருந்தது, மக்கள் மன்றத்தில், எனினும், செல்வாக்கு செல்லாக்காசாகி விட்டதே தவிர, பயன் ஏற்படவில்லை.

திட்டங்கள் கைவசமிருந்தும், செல்வாக்கு பெருமிதமாக இருந்தும், மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. மாருக, பெரும் பிரச்னைகளாகிவிட்டன.

இந்தக் காட்சியைக் காணும் போதுதான், இன்றைய ஆளவந்தார், எதிர்க்கட்சிகளின் ஏளனத்துக்கும் ஏசலுக்கும் உள்ளாகிறார்கள்.

இந்தப் பரிதாபநிலையைச் சுட்டிக் காட்டுகின்றனர், பலர்.

இந்திய பூபாகம்—ஒரு விவசாய நாடு. எனவே, இதன் பொருளாதாரம் விவசாய வளர்ச்சியைப் பொருத்ததேயாகும். ஆனால் விவசாயத்துறையோ, நாலாண்டு ஆட்சியில் வளரவில்லை; அழிந்திருக்கிறது.

இந்த அழிவை, நினைப்பதுகூட இல்லை, இங்குள்ள மாபெரும் காங்கிரஸ் தலைவர்கள்.

உணவுத் திண்டாட்டம் ஏற்பட்டு விட்டது என்றால், அதன் உண்மை நிலையை அறிய முயல்வதில்லை.

அறிந்து, அதைப் போக்குவதற்கான ஏற்பாடுகள் என்னென்ன

12-ம் பக்கம் பார்க்க



# மலைத் தொட்டில் ★ ★ மாசே-துங் வசம்!

—✕—

கடந்த புதன்கிழமை, அகில உலகத்தையும், ஆசியாக்கண்டத்துச் சிறு நாடான திபேத்மீது, கவனங் கொள்ளச் செய்திருக்கிறது.

செஞ்சீனு, திபேத்துடன் செய்து கொண்டுள்ள, ஒரு ஒப்பந்தமூலம் தனது ராஜதந்திரத்தை, வெளிப்படுத்தியிருக்கிறது. மாசே—துங் பேச்சும், சீனசர்க்கார் நடவடிக்கைகளும், முதலாளித்துவ வல்லரசுகளைத் திகைக்கச் செய்யும் இந்த நேரத்திலே, திபேத், ஒரு கிடைக்காமலியாகியிருக்கிறது, அமெரிக்க வல்லரசுக்கு.

திபேத் சர்க்காரும், சீன அரசாங்கமும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். அதன்படி, சீனுவுக்குக் கட்டுப்பட்ட, ஒரு நாடாக இருக்க, திபேத் சம்மதித்து விட்டது.

திபேத் — மத்திய ஆசியாவின் தெற்குப் பகுதியிலே, அமைந்திருக்கும், சிறு நாடு. ஐந்துலட்சம் சதுரமைல் பரப்புள்ள அங்கே முப்பது லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். தெற்கே நேபாளமும், மேற்கே இந்திய யூனியனும், கிழக்கே பூடானும், வடக்கே சீனுவும், அந்தச் சிறு நாட்டின் எல்லைகள். சிந்துநதியும், பிரமபுத்திரா நதித்தீரமும், தாலாட்டப் பெற்று தத்தி விளையாடுவது, அந்த 'மலைத்தொட்டிலில்' தான். சீனுவைக் களஞ்சியமாக்கும் யாங்க்டிசிகியாங் ஆறும், அங்கே தான் அரும்புகிறது. உப்பு ஏரிகளும் கம்பளந்தரும் ஆட்டு மந்தைகளும் நிறைந்து விளங்கும் அத்திரு பூமி —உலகுக்கு ஒரு இருட்டு மண்டபம். நாகரீக ஒளி கிடைக்கப் பெருத, துர்ப்பாக்கிய தேசம் அது.

மூடநம்பிக்கையும், பழைமைப் பாசமும், இந்திய நாட்டைப் போலவே, அங்கும் தன் கோரத் தாண்டவத்தை நடத்துகின்றன.

இந்துமதம் அங்கு இல்லை; எனினும், புதிதாகச் சென்ற புத்தர் கொள்கைகள், அங்கு புதுயுகத்தை மலர்விக்கவில்லை; அங்கு நிலவிய பழைமையோடு கலந்துவிட்டது.

எனினும், புத்தமதம்தான், மக்களுடைய மதம். ஆனால், புத்தரின் பொன்மொழிகள் அங்கு ஒலிக்கவில்லை. புத்தரின் கோட்பாடுகளை விட, புத்தரின் சிலைக்கே, அதிக மதிப்புத்தரத் துவங்கி, அதையே வளர்த்தும் விட்டனர். ஆகவே, இந்த நம்பிக்கையை அஸ்திவாரமாகக் கொண்ட, புத்த மதத் தலைவர்களே, திபேத் பூமியின் வாழ்வை நிர்ணயிக்கும் தலைவர்களாக இருக்கிறார்கள்.

'கர்மம்' 'தலைவிதி' 'சகுனம்' 'ஜாதகம்' முதலாய அத்தனை மூடநம்பிக்கைகளும், அங்கு உண்டு, இந்தியாவைவிட, அதிகமான அளவிலே. குழந்தை பிறந்தால், குதூகலம் கொள்வரல்லவா தாய்தந்தையர்! அங்கோ, 'பாபம்—பாபம்' என்று பரிதாபப்படுவார்களாம் — வேண்டுமென்றல்ல. அப்படிப் பரிதாபப்படுவது, ஒரு சடங்காம், அவர்கள் மத முறைப்படி.

'என் குழந்தை' 'எனது செல்வன்' என்று கூறிக்கொள்வதிலே, சாதாரணமாக எந்தப் பெற்றோரும் பெருமிதமும் பூரிப்புமே அடைவர். ஆனால், அங்குள்ளோரோ, தங்கட்குப் பிறந்த குழந்தைகளைக்கூட, 'தங்களுடையது' என்று சொல்ல மாட்டார்களாம்—வேண்டுமென்று அல்ல; அப்படிச் சொல்வது கூடாது என்று அவர்கள் மத முறை கூறுகிறது.

"முற்பிறப்பில் யாரோ, எங்கோ, ஏதோ, தீவினை செய்திருக்கிறான். அந்தக் கர்மவினை, மீண்டும் பிறப்பு

(7-ம் பக்கம் பார்க்க)

11-ம் பக்கத் தொடர்ச்சி

அஸ்ஸாம் மாகாணத்தின் முக்கிய விளைபொருளான தேயிலைக் காடுகள், நாகர் குன்றுகளில் அதிகம் இருக்கின்றன. அங்கே, தேயிலைத் தோட்டத்தில், பாடுபடுவோரில் பெரும்பாலானோரும், நாக மக்கள் தான். நாகர்கள், இந்திய பூர்வீகக் குடிகளில் ஒருபான்மையினர், என்றுங் கூறப்படுகிறார்கள். இவர்களுடைய தொகை, ஒரு இலட்சம் கூட இருக்காது.

அவர்கள் தங்களுக்கோர் தனி நாடு தேவையென, முழக்கமிடுகிறார்கள்.

அவர்கள் கோருவது, அஸ்ஸாம் மாகாணத்திலே ஒரு சிறு ஜில்லா. அது, நாகாஸ்தானுக ஆகவேண்டும் என்று அறைகூவல் விடுக்கிறார்கள்.

இந்திய சர்க்கார் தங்களது கோரிக்கையை அலட்சியம் செய்யலாம், ஆனால் தான் அதுகண்டு அஞ்சப்போவதில்லையென நாகர் தலைவர் பிஜோ கர்ஜனையிடுகிறார். தமது கட்சியின் சார்பில் பொதுவாக்கெடுக்கப் போவதாகவும், அதன் முடிவுப்படி நடக்கப்போவதாகவும், இந்திய சர்க்காரை எச்சரித்துள்ளார்.

இந்தத் தகவலை, இங்கு சீறிடும் கூட்டத்தின், திருப்பார்வைக்குச் சமர்ப்பிக்கிறோம். பரந்த தாயகத்தைக் காட்டி, இது வாழ்வு பெற, நம்மை நாமே ஆண்டு கொள்ள வேண்டாமா, என்று கேட்கும் நம்மைப் பார்த்து கேலியும் கண்டனமும் கிளப்புகின்றனர்!

சுமார் ஐந்துகோடி மக்களைக் கொண்ட பரந்தபூமி, தனிநாடாக வேண்டுமென்றால், சந்தேகமும் சஞ்சலமும் கிளம்புகிறது இவர்களுக்கு! "பிரிவினை மனப்பான்மையை வளரவிடக்கூடாது. நசுக்க வேண்டும்" என, அம்புவீச்சும், அடக்குமுறைப் பேச்சுமாகக் கொக்கரிக்கின்றனர்.

அவர்களது பார்வைக்கு, நாகாஸ்தான் முழக்கத்தை வைக்கிறோம்.

பிரமபுத்திராநதி தீரத்தவர்கள் 'பிரிந்தே போவோம். பிறர் தயவு தேவையில்லை' என்கின்றனர். அவர்கள் சிலர்; ஆயினும் தனிநாடு வேண்டும் எமது உரிமைகளைத் தட்டிப் பறிப்போர் எவராயினும் அவர்களை வெட்டி யொடுக்குவோம் என்று வீரகீதம் எழுப்புகின்றனர்.

காவிரிக்கரை கீதம் கசக்கிறது என்று கூறும், இங்குள்ளோருக்கு, பிரமபுத்திர முழக்கம், எரிச்சலைத் தான் தரும். ஆனால், வாழ்விழந்த மக்களின் இதயகீதம், எரிச்சலால் அணையாது; அடங்காது.

—✲—

திராவிட நாடு

ஞாயிறு] 3—6—51 [காஞ்சி

# நல்லதல்ல

★

மனிதர்களிலே விசித்திரமான சுபாவம் கொண்டோர் உண்டு. ஆசையும் நேசமும் கொண்டு 'ஆகா, அவரைப்போல உண்டோ' என்று புகழ்வர். அருமை பற்றிய அந்தாதி, சிறப்பு பற்றி சிந்து, புகழ் பற்றிய போற்றுதலோடு, பாராட்டுவர்.

ஆனால், அவ்வளவு அருமை பெருமையுடன் கொண்டாடப்பட்டவர், தமக்குப் பிடிக்காத காரியம் எதிலாவது ஈடுபட்டு விட்டால், உடனே, புகழ் ஏசலாக மாறும்; அன்பு, ஆத்திரமாக மாறும்; கோபங் கொள்வர், 'என்ன தெரியும் அவனுக்கு' என்று எரிச்சலோடு பேசுவர்.

இதயத்திலே தெளிவற்றதன்மை, சுயநல ஆசை — இந்த இரண்டும் கொண்ட சுபாவமே, இதற்குக் காரணமாகும்.

இந்த ரகத்திலே, 'தான் முதலிடம் வகிக்கும் நிலையை, தேசிய இதழாம் 'இந்து'. தெரிவிக்கிறது. தனது 31-ந் தேதிய தலையங்கம் மூலம்.

'மனிதர்களிலே மாணிக்கம்', 'தன்னலமற்ற தியாகி', 'அறிவுக் களஞ்சியம்' என்றெல்லாம் யாரைப் பற்றிப் போற்றிப் புகழ்ந்ததோ, அந்த நேருவைப் பற்றி, இந்தியப் பிரதமர் பண்டித நேரு குறித்து, ஆவேச உணர்ச்சியோடு தலையங்கம் ஒன்று தீட்டியிருக்கிறது, அடாணாவில் துவங்கி முகாரியில் முடிப்பது போல.

"பண்டித நேருவின் பெருந்தன்மையையும், எடுத்ததை முடிக்கும் ஆர்வத்தையும், இந்த நாட்டில் யாரும் சந்தேகப்பட முடியாது" என்று தன் தலையங்கத்தைத் துவங்கும், "இந்து", படிப்படியாக அவர் மீது தன் ஆத்திரப் பாய்ச்சலைக் காட்டியிருக்கிறது. வேறு எதைப் பற்றியும் அல்ல; இந்திய அரசியலமைப்பு சட்டத்தில், சமநீதி உரிமை, சம்பந்தமாக திருத்தம் செய்வதை ஆதரித்து, அவர் பேசியிருக்கிறாரல்லவா! அதைப் பற்றித்தான்.

நாடு, அவர்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்குதகந்தவாறு, அவர் நடந்துகொள்ளவில்லையாம்—இந்தக் குற்றச்சாட்டை மறைமுகமாக அவர்மீது வீசுகிறது. அதே நேரத்தில், சமநீதி உரிமை சம்பந்தமாக பேசும்போது, "செய்யப்படும் திருத்தம், ஏற்பட்டுவிட்ட பிழையை நீக்குவதற்காகும். இந்தப் பிழைக்கான பொறுப்பு முழுமையும் நானே ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்று, அவர் வெளியிட்டாரல்லவா இந்திய சட்டசபையில் அதையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

இந்துவின் பேனா, நேருவைப் போற்றி எழுதியதைத்தான் நாம் கண்டிருக்கிறோம்.

ஆனால், சமநீதி சம்பந்தமாக, ஏதோ ஆதரித்துப் பேசினாரென்றதும், இப்போது ஆத்திரம் எழுத்தாக மாறியிருக்கிறது.

நேருவின் பேச்சுபற்றி, இன்னொரு ஆங்கில இதழான 'மெயில்' "வடநாட்டின் ஆதிக்கத்தை எதிர்த்துப் பிரிந்து போகவேண்டுமென்னும் திராவிடஸ்தான் கோரிக்கை" நேருவுடைய உள்ளத்தில், இத்தகைய சூழ்நிலையைச் சிருஷ்டித்திருக்கலாம் என்று தீட்டுகிறது.

நேரு, மேற்படி திருத்தத்தை ஆதரித்துப் பேசியதற்குக் காரணம் எதுவானாலும், அவர் சமநீதி சம்பந்தமாக வெளியிட்ட கருத்துக்கள் தரும் நல்லெண்ணத்தை, எவரும் மறுக்கமுடியாது.

சமூகநீதிக் கோரிக்கை, நாம் எதிர்பார்க்கும் அளவில், நிறைவேற்றப்படுமா, இத்திருத்தத்தின் மூலம், என்ற ஐயம், நமது இதயத்தில் எழும்பிக்கொண்டேயிருந்தாலும், நேருவின் பேச்சு, புதுத் தெம்பைத் தரும் நிலையிலேயே இருக்கிறது.

ஆனால் 'இந்து' பாய்கிறது. 'தனது' மக்களின் ஆதிபத்யம் நீடிக்கும் வழி அடைக்கப்படுவது கண்டதும், ஆத்திரக்கனலைக் கக்குகிறது. தங்களது ஏகபோகத் தலைவர் என்று போற்றித் துதித்த பண்டித நேருமீது பழியையும் பரிகாசத்தையும் அள்ளி வீசுகிறது.

"இந்து"வின் பாதை, நாம் அறியாததல்ல; பெயருக்கேற்றவாறே, அதன் பித்தலாட்டமும் இருந்து வருவது, வீழ்ந்துபட்ட சமுதாயம் உணர்ந்ததுதான். எனினும், உரிமைகளைப்பற்றி முழக்கமிடுவதும், அதே நேரத்தில் பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கையில் புயலை உண்டாக்குவதும், வெறியர்கள் செயலாகும். விவேகம் வேண்டப்படும், இந்த நேரத்தில், தனது சுயநல வாய்க்கால் பாதிக்கப்படும் என்றதும், போற்றியவரையே தூற்றுகிறது.

"இந்து"வின் கோலம், ஆதிக்க வெறியின், உச்சத்தைக் காட்டும் காட்சி. நேரு, நமக்கு நன்மை செய்பவர் என்று நாம் நம்புபவர்களல்ல; நம்பவும் முடியாது. ஆனாலும், ஏதோ ஒரு சூழ்நிலை, அவரை, இந்த வழியைத்தவிர வேறு வழியில்லை, என்ற மனோபாவத்தை அவருக்குத் தந்திருக்கிறது.

'இந்து' வின் கூட்டம், நேருவின் அணைப்பைப் பெற்றவர்கள் மட்டுமல்ல; 'இந்து'வின் துணையாசிரியர்களாகப் பதவி வகிக்கும், இருவருடைய தகப்பனார்கள், நேருவின் சகாக்களாக, மத்ய சர்க்காரில் வீற்றிருக்கிறார்கள்.

அவ்வளவு தொடர்பு இருக்கிறது, 'இந்து'வுக்கு.

இருந்தும், "இந்து" பாய்கிறது. பாய்ச்சல், ஆதிக்க வெறியின் விளைவு. ஆதிக்கவெறி நல்லதல்ல—ஆபத்தைத்தரும். இதை, இந்துக் கூட்டம், உணர்வது நல்லது; வளரும் உரிமைக் குரலின்முன் தூசு போல், ஆகாமல், தன்னைக் காத்துக் கொள்ள.

---

கோலார்
தங்கவயலில்
(K G F.)
10—6—51 அன்று
அண்ணாதுரை
பேசுவார்
(A) தி. மு. க. கிளை



5-ம் பக்கத் தொடர்ச்சி

எடுத்திருக்கிறான். ஆகவே, இதில் நமக்கென்ன தொடர்பு இருக்கிறது?" — இப்படி, அவர்கள், பழைமை, சொல்கிறது.

குழந்தையில் மட்டுமல்ல, கடைசி வரையில், திபேத் மக்கள் கையாளும் பழக்க வழக்கங்கள், பழைமை முறைகள், கேட்க கேட்க விசித்திரமாயிருக்கும்.

புத்தர் போதனைகள் கூடவா, இவ்வளவு சீர்குலைய வேண்டும் என்ற கேள்வி கூடப் பிறக்கும்! அத்தகைய பூமி, அது. அதைப் பற்றி நமது குடியரசுத் தலைவர் பிரசாத் கடந்த நவம்பரில் இந்திய சட்ட சபையை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில், "திபேத்துக்கும் இந்தியாவுக்கு மிடையே பூகோள, வியாபார ரீதியில் மட்டுமல்ல, கலாச்சார ரீதியிலும் தொடர்பு உண்டு" என்று பெருமிதத்தோடு வெளியிட்டார். கலாச்சாரம் என்று, இங்கு போலவே அங்கும், வாலாட்டி அடிக்கும் மூடநம்பிக்கைகளைப் பற்றிச் சொன்னரோ, என்னவோ! ஆனால், ஒன்று மட்டும் உண்மை, பழைமை அங்கே மாறாது, மறையாது, பெரும்பாலானோரிடையிலே ஆட்சி செலுத்தி வருகிறது.

அதனால்தான், அவர்களை ஆளும் வர்க்கத்தினரும், மத பக்திகொண்ட 'லாமா'க்களாகவே இருக்கிறார்கள்.

புதிதாக செஞ்சீனா, செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தத்தில்கூட 'திபேத் மக்களின் மத விஷயத்தில் தலையிடுவதில்லை — மட ஸ்தாபனங்களில் பூர்ண சுதந்திரம் உண்டு' என்று, வாக்குதரப்பட்டிருக்கிறது.

சீனா, கம்யூனிசக்கொள்கையால், ஆளப்படும் நாடு. அந்த சர்க்கார், திபேத்துக்கு, இந்த வாக்குறுதியைத் தந்துள்ளது.

அதோடு, திபேத்துக்கு சுதந்திர சுயாட்சி உண்டு, தங்கள் காரியங்களை சுதந்திரமாகச் செய்யும் உரிமை உண்டு, தங்கள் அரசாங்கத்தை வழக்கம்போல நடத்தும் உரிமை உண்டு — ஆனால், அத்தனையையும் சீனாஎன்கிற தாய்க்குக் கட்டுப்பட்ட மகள் போலவே, அநுபவிக்கவேண்டும் என்பதாகக் கூறி, சீன சர்க்கார், இப்புது ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறார்கள்.

இராணுவப் பரிபாலனம் எம்மிடம் இருக்கவேண்டும், உங்களுக்கு ஆபத்து வந்தால் நாங்களே தடுப்போம், அதற்கான செலவை சீனாவே ஏற்றுக்கொள்ளும், என்றெல்லாம் அந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது. எனினும்மறுப்போ, எதிர்ப்போ கூறாமல் திபேத் ஒப்புக்கொண்டுவிட்டது.

திபேத், இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்ட சம்பவமும், இந்த உடன்பாட்டை நிறைவேற்றிக்கொள்ள மாசே-துங் கையாண்ட முறையும், மிக மிகக் குறிப்பிடக் கூடியன.

ஏனெனில், பிரசாத், கடந்த நவம்பரில் திபேத்பற்றி இந்திய சட்ட சபையில் வெளியிட்ட போது, திபேத்தும் செஞ்சீனாவும், கீரியும் பாம்பும் போலிருந்தன. திபேத் மீது, சீனா படையெடுத்திருந்தது. அப்படையெடுப்பை ஆட்சேபித்து, திபேத், ஐக்கிய நாடுகள் சபைக்கு, புகார் செய்தது. அதோடு, 'இந்தியா' தலையிடவேண்டும்.' எங்களுரிமையில் சீனா தலைதலையிடுவது, ஆசியாவுக்கே ஆபத்து' என்று, இந்திய சர்க்காரையும் வேண்டிற்று.

இந்தியா 'ஆசியஜோதி' அல்லவா! ஆகவே, சீனாவின் போக்கை மறைமுகமாக, நேரு போன்றோர், கண்டித்தனர். ஆனால், கண்டனத்தை சீனா மதிக்காததோடு 'கண்டனம் கூறுவது தவறு' என்றும் கண்டித்தது.

ஏனெனில், திபேத், பல்லாண்டுக் காலமாக சீனாவின் பராமரிப்பிலிருந்த தேசமாகும். 1720 முதல், சீனாவின் பிடிப்பு, திபேத்திலிருந்தது. 1908 வரை, சீனாவின் பிரதிநிதிகள், அங்கே ராஜ்யாதிகாரிகளாக வீற்றிருந்தனர். 1908ல், பிரிட்டன், இந்தியா, ரஷ்யா முதலான நாடுகள் கூட, 'சீனாவுக்குக் கட்டுப்பட்டதே திபேத்' என்று, பகிரங்கமாக ஒப்புக் கொண்டதோடு, சீனாவுக்கு ஆளும் உரிமை உண்டு என்றுகூடத் தெரிவித்திருந்தனர். ஆனால் 1911ல் சீனாவில் மறுமலர்ச்சி ஏற்பட்டு, புரட்சி விளைந்தபோது, திபேத், தன் தொடர்பைத் துண்டித்துக் கொண்டாலும், சீனாவின் நேசமும், அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளின் எதிரொலிகளும், திபேத்துக்கு ஏற்படாமலில்லை.

பிறகு, இந்த நிலையில் சீனாவை ஆண்ட சியாங்கேய்ஷேக் சர்க்காரால், மீண்டும் திபேத்தைக் கட்டுப்படுத்த இயலாமற்போயிற்று.

ஆனால், சீனா, கம்யூனிஸ்டுகள் வசமானபிறகு, அவர்கள் திபேத் மீது அதிகம் செலுத்தவேண்டியவர்களானார்கள்.

காரணம், இந்தியாவின் எல்லை

பார்த்தசாரதி டுடோரியல் காலேஜ்
திருச்சிராப்பள்ளி
காலேஜ் திறக்கும் தேதி 4—6—1951
ஒவ்வொரு மாணவருக்கும்
வெற்றிக்கு உத்திரவாதம்
எஸ். எஸ். எல். ஸி., மெட்ரிகுலேஷன், இண்டர்மீடியட்., பி. ஏ. பி. எஸ்ஸி., பி. காம், ஆனர்ஸ், (எல்லா பிரிவுகளுக்கும் பாடங்களுக்கும்) வகுப்புகளுக்கு போதனை உண்டு.
எஸ். எஸ். எல். ஸியில் பெண்களுக்குத் தனி வகுப்பு.
உடனே சேர்ந்து உங்கள் வெற்றியை யடையுங்கள்
விசாரணை ஆபீஸ்:
29, நந்தி கோவில் தெரு,
தெப்பக்குளம் போஸ்ட்,
திருச்சி.
பி. வி. பார்த்தசாரதி
பிரின்ஸிபால்
A.

யென்பதால்மட்டுமல்ல.

திபேத்தை, கேந்திரமாக வைத்துக்கொண்டு, அமெரிக்க வல்லரசு, தன்தந்திர வேலைகளைச் செய்யலாம் என்கிற சந்தேகம் ஏற்பட்டது.

அந்தச் சந்தேகத்தை வலியுறுத்துவதுபோல, திபேத்பற்றி, முதலாளித்துவ நாடுகள் அடிக்கடி பேசவும் துவங்கின.

எனவே, மாசே-துங் சர்க்கார், திபேத்தை வளைத்துக்கொள்ளத் துவங்கினர், தமது படைகள்மூலம்.

படையெடுப்பைக் கண்டதும் திபேத் சர்க்கார், ஐ. நா. சபைமுன் புகார் செய்தது. அந்தப் புகாருக்கு அமெரிக்காவும், பிரிட்டனும் ஆதரவளித்தன.

அதிலும் திபேத் சர்க்கார் தலைவரான டலாய்—லாமா, பிரிட்டிஷார் இந்தியாவில் ஆட்சி செலுத்தியபோது, அவர்களுக்கு நண்பராயிருந்தவர்.

ஆகவே, மேற்கத்திய நாடுகள், திபேத் பிரச்னையைப் பெரிதாக்கி, சீனாமீது மற்றொரு 'ஆக்கிரமிப்புக் குற்றம்' சுமத்தத் தயாராயினர்.

ஆனால் சீனசர்க்காரின் ராஜதந்திரமோ, இத்தகைய சூழ்நிலை ஏற்படாமல் தடுத்ததோடன்றி, திபேத்தையும் அவர்கள் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறது.

எனவே, முதலாளித்துவ வல்லரசுகள் ஏமாந்துவிட்டன.

கம்யூனிச ராஜதந்திரம், ஆசியாவில் மற்றொரு வெற்றியையும் பெற்றுவிட்டது.

ஏனெனில் திபேத்தில், இந்தியாவிலுள்ள ஐக்கிய மாகாண ஆலைகளுக்குத் தேவையான கம்பளம் உற்பத்தியாகிறது. இங்கு, கம்பளத் தொழில் சரிவர நடைபெற, திபேத் தேசத்துக் கம்பளம், மிக மிக அவசியம். ஆகவே, இந்தியா, சீனாவை இந்த விஷயத்தில், எதிர்பார்க்கத்தான்வேண்டும். இதன்மூலம், சீனாவுக்கு, மேலும் வலிமை வளர்கிறது.

'ரஷ்யா தனது அணுசக்தி ஆராய்ச்சிச்சாலைகளில் ஒன்றை மத்திய ஆசியாவில் ஏற்படுத்தமுயன்று வருகிறது. அநேகமாக, வடக்குத் திபேத்தில் அமைக்கப்படலாம்' என்பதுபோன்ற செய்திகளும், இந்த நேரத்தில் கூறப்படுகின்றன.

இது உண்மையானால், ஆசியாவின் முக்கிய பாதுகாப்பு இடமாக, கம்யூனிசநாடுகளுக்கு, திபேத் ஏற்படக்கூடும்.

திபேத்—ஒருமலைத் தொட்டில்; பாதுகாப்பான பிரதேசம்.

அதை, சாமார்த்தியமாக, மீண்டும் தன் கைக்குள் கொண்டுவந்துவிட்டது செஞ்சீனா.

இது, அகிலஉலக வல்லரசுகளின் கவனத்தையும் கவர்ந்ததில், அர்த்தமில்லாமலில்லை.

★

# மாநில மாநாடு

மாநில மாநாட்டிலே, அமைக்கப்படவிருக்கும் பகுத்தறிவுக் கண்காட்சியில் வைக்கப்படுவதற்காக, ஓவியங்களும், பொன்மொழிகளும் தீட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் துறையில் பயிற்சியும், தி. மு. கழகப் பற்றும் உள்ள தோழர்கள், இந்தப் பணியாற்ற முன்வரும்படி கேட்டுக் கொள்கிறேன். ஊதியம் கிடையாது. காஞ்சீபுரத்தில் தங்கியிருந்து, இந்தப் பணியாற்றுவதற்காக, சாப்பாடு, இட வசதி செய்துதரப்படும். விருப்பமுள்ள தோழர்கள், தங்கள் ஊர், தி. மு. கழகச் செயலாளரின் அறிமுகக் கடிதத்துடன், காஞ்சிபுரம் திராவிடநாடு நிலையத்துக்கு, உடனே எழுதக் கோருகிறேன்.

★

மாநில மாநாட்டில், கொடிவணக்க மேடையில், பெரிய தனிக் கொடியைச் சுற்றி, ஒவ்வொரு கிளைக் கழகத்தின் கொடியும், நாட்டிக் காட்ட' ஏற்பாடாகி வருகிறது. ஆகவே, ஒவ்வொரு, தி. மு. க. கிளைக் கழகமும், இதற்கென, கொடி கைத்தறித் துணியில் தயாரித்து, மாநாட்டிலே கொண்டுவர வேண்டுகிறோம். கொடி 2'—4' அளவில் இருக்கலாம். கொடியின்மீது தங்கள் ஊர்ப் பெயர் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். மாநாட்டுத் தேதி அறிவித்தான பிறகு, அவசர அவசரமாகக் காரியத்தைத் துவக்காமல், முன்கூட்டியே, இந்த ஏற்பாட்டைச் செய்துவிடக் கோருகிறேன்.

★

மாநில மாநாட்டில் செயலாளர் அறிக்கை வெளியிட வேண்டி இருப்பதால், தி. மு. கழகம் துவக்கப்பட்டது முதல், தங்கள் ஊரில், நடத்தப்பட்ட கூட்டங்களில், நான் கலந்துகொண்ட கூட்டத்தைப்பற்றிய செய்தியை, உடனடியாக, காஞ்சிபுரம், திராவிடநாடு நிலையத்துக்கு அனுப்பித்தரக் கேட்டுக்கொள்கிறேன். செய்திகளைத் தொகுத்து அறிக்கை தயாரிக்க வேண்டி இருப்பதால், ஒரு கிழமைக்குள், செய்தியை அனுப்பி வைக்கக் கோருகிறேன்.

இடம்:—
நாள்:—
தலைவர்:—
பேச்சாளர்:—

என்ற செய்திமட்டும் அனுப்பினால் போதும், உடனடியாகக் கவனிக்கவும்.

அன்பன்
அண்ணாதுரை.

## நெசவாளர் அறப்போர்

சென்னையில், கைத்தறி நெசவாளரின் அறப்போர் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆண்களும், பெண்களுமாகத் தினசரி அணிவகுத்து, சர்க்கார் காரியாலயம் நோக்கிப் புறப்படுவதும், அவர்களைத் தடுத்துப் போலீசார் கைது செய்வதும், தினசரி நடைபெறுகிறது. காங்கிரஸ் ஆட்சியின் கொடுமை குறித்துத் தினசரி, பேசாதோரில்லை.



தொடர் கதை

# யாத்திரை

தில்லை-வில்லாளன்

1

பத்மாவுக்கு

## சுந்தரம்

[ஓடிய கதை:— சுந்தரம், தன் காதலி பத்மாவுக்கு தன் உள்ளத்தில் புதைந்துகிடந்த எண்ணங்களை எடுத்துச் சொல்லி வருகிறான். பத்மா, அன்றொருநாள், அவன் எழுதிய 'அவள்' நாடகத்திற்கு வந்திருந்தாள். அந் நாடகத்தைப்பற்றி விளக்குகிறான். அவன் காதலால் துடித்த துடிப்புகளைப் படம் பிடிக்கிறான், பத்மாவின் கடிதம் அவனை ஏமாற்றத்தில் ஆழ்த்தி விடுகிறது.........]

கடமையாம், கடமை! எனக்கும் தெரியும் பத்மா, கடமையென்ற மூன்றெழுத்துக்களாலான வார்த்தை, அகராதியில் உண்டென்ற உண்மை! என்ன கடமை வந்து உன்னைத் தடுத்துவிட்டது—எனக்கு விளங்கச்சொல், பார்க்கலாம், காதலைத் தடுக்கிற கடமை எதுவானாலும் அது கடமையல்ல,-அதுமடமை! இனி எழுதாதே, என்னோடு பேசாதே...... என்று சொல்லி விட்டாய். அது மட்டுமல்ல, கல்லூரியிலும், வீட்டிலும் தங்களால் தொல்லை...... என்று கூறிவிட்டாய். இருப்பினும் என் இதயச் சிலை எனக்குப் போட்ட தடையுத்தரவை மீறுகின்றேன், அவள் என் மனதிற்கு ஊரடங்கும் சட்டம் போட்டாள். அது வெற்றி பெறவில்லை-புரட்சி செய்யும் எண்ணங்களை எந்தப் பிரிவின் மீது குற்றஞ்சாட்டி எந்த நீதிக் கூடாரத்தில் நிறுத்துவது? ஆகவேதான் இதைக் கடைசியாக எழுதுகிறேன். இனி என்னிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவேண்டாம்.

காதல் வேறு, கடமை வேறு என்று நினைத்திருந்தால் அந்த முடிவை மாற்றிக்கொள் பத்மா. கடமைகளிலே ஒன்று காதல்-மனித சாதிக்கு மகாவல்லமை வாய்ந்த இயற்கை ஏற்படுத்திய தவிர்க்க முடியாத கடமைகளிலே, காதலுக்கு இடம் உண்டு என்பது மட்டுமல்ல, முக்கிய இடம் உண்டு! காதலையும் கடமையையும் கீரியும் பாம்புமாக்கி விட்டாய் நீ. புலியும் மானும் என்று நிரூபிக்கிறாய் நீ. எலியும் பூனையும் என்று இயம்பிவிட்டாய் நீ. அது தவறு, பத்மா! காதலும் கடமையும் ஒன்றிலே ஒன்று அடங்கியுள்ள உன்னதமான இரண்டு பொன்னான ஏற்பாடுகள்! தண்ணீரும், தண்மையும் போல, பாலும், அதன் வெண்மையும் போல, இசையும், இனிமையும் போல, மலரும் மணமும் போல, இலையும் பசுமையும் போல... ... கடமையும், காதலும்!

ஆனால் ஒரு உண்மை—பத்மா' அதை மறுக்க முடியாதுதான்.

அதோ பார், பத்மா, வளைந்து தெரியும் வான்முகட்டை — அந்த, அடிவானத்தில் வர்ணங்கள் செய்யும் ஜாலவேடிக்கைகளை! அதுதான் காதல். நாம் நிற்கிற பூமிதான் கடமை என்கிற வழுக்கு நிலம். இதிலே நடந்து அந்த அடிவானத்தைத் தொட்டுவிடும் பந்தயத்திலே பல காளையரை, கன்னியரை நிறுத்தி விடுகிறோம். அவர்கள் கடமையிலும் வழுக்கி விழுகிறார்கள். காதலையும் எட்டிப் பிடிப்பதில்லை!

கடமை, காதலை மறுக்கச் சொல்கிறது என்கிறாய். அதே கடமை, என்னை, உன்னை மறக்கச் சொல்லவில்லையே...என்ன செய்வது? மழை, நாடகம் நடத்துகின்ற நல்லாப் பிள்ளைக்கு நடுக்கத்தையும், வயலோரத்திலே வரண்டு கிடக்கும் நிலத்தைப் பார்த்து ஏங்கி நிற்கும் வாதப்பனுக்கு புன்சிரிப்பையும் தருகிறது! ஏன்? என் கடமை எனக்குத் தெரியும். பெற்றவர்கள் வார்த்தைகளை நான் எப்படி மீறமுடியும் என்பாய். இன்று சமூகத்தில் ஆண்கள் எதையும் துணிந்து செய்யும் ஆற்றலும், வாய்ப்பும் பெற்றிருக்கிறார்கள். பெண்கள் அப்படியல்ல...! ஆண்கள் வடாமல்லிகளாக இருக்கிறார்கள். பெண்கள் தொட்டால்சிணுங்கிகளாக வாழ்கிறார்கள்......என்று சாமதானம் கூறுவாய். அதட்டும் தந்தையும், அழுகிற தாயுமே பல முற்போக்கு உள்ளங்களை முடக்கு வாத நோய்க்குள் சிக்க வைக்கிறார்கள். சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு, தாயுருவிலும், தந்தை வடிவிலும் வரலாம். எதிர்க்கும் நெஞ்சுத் துணிவு வேண்டும். நீ எண்ணுகின்ற எண்ணங்களுக்கு உண்மையிலே மதிப்பு தருகிறாய் என்றால் மிரட்டுதலுக்கும், கெஞ்சுதலுக்கும் அடங்கிவிடக்கூடாது.

எனக்குமட்டும் கடமை யில்லையென்று கருதாதே. கடமையின் அழைப்புகளை நான் எப்பொழுதும் அலட்சியப்படுத்தியதில்லை. ஆனால் என் கடமை என்றும் என் வாழ்விற்குப் படுகுழி பறிப்பதாக அமைந்ததில்லை. மனிதனுக்குக் கடமைகளை மனிதனேதான் வகுத்தான். அந்த ஆதி மனிதன் அவன் காலத்திற்கு ஏற்ற முறையில் சில கட்டு திட்டங்களை ஏற்படுத்தினான். காலத்திற்குக் காலம் அந்த அமைப்பு கலைக்கப்பட்டு குலைக்கப்பட்டு புது வடிவம் பெற்று வந்திருக்கிறது. தந்தையும், தாயும் முன்னறி தெய்வம், தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை; தந்தை சொற் கேள்...... என்றெல்லாம் நானும் படித்திருக்கிறேன், என்னைச் சுற்றியுள்ளவர்கள் பட்டும் சாதி வேலியைத் தாண்டிட அனுமதிக்கமாட்டார்கள்தான், சனாதனக் கோட்டையை விட்டோட சம்மதம் தரமாட்டார்கள் தான்......அதற்காக அடங்கிவிட்

டால்? சீர்திருத்தம் முளைக்குமா? புதுமை வளருமா?

கடமையென்ற செந்தணலிலே காதல் உணவு சமைக்கப்பட வேண்டும்! இது ஏன் உனக்குத் தெரியவில்லை?

கடமை ஒரு ஊற்று — அதிலிருந்து பெருகிவரும் நீர்தான் காதல்! பத்மா, என் கட்சிக்கு வலுவுதேட இப்படியெல்லாம் பேசுகிறேன் என்று எண்ணி, உண்மையை உணர மறுக்காதே!

நான் ஒரு கனவு கண்டேன்...

கனவைச் சொல்கிறேன்...கவனமாகக் கேள். என் படுக்கையிலிருந்து திடீரென்று விழித்துக் கொண்டேன். ஒரே ஒளி வெள்ளம் ......அதில் ஒரு பொன்னவிர்மேனியாள் தோன்றினள். அவள் என்னைப் பார்த்தாள் அன்போடு. நான் வணங்கினேன்.

"மனிதனே........" என்றாள் அவள்.

"அப்பொழுது அம்மையே, தாங்கள் தேவலோகவாசியோ? என்றேன் நான்.

"ஆம்......" என்றாள். பிறகு...

"வா, என்னுடன்......". என்று அவளது துவளும் மெல்லிய கரத்தால் என் கரத்தைப்பிடித்து இழுத்தாள். அவள் நடந்தாள். நானும் நடந்தேன்!

"எங்கே போகிறோம், தாயே..." என்றேன்.

"அதோ, அந்த அடிவானத்திற்கு யாத்திரை கிளம்புகிறோம்"

"அடிவானத்திற்கு யாத்திரை போகமுடியுமா? என்போன்ற மனிதர்களால்?"

"முடியும், முயன்றால்—!"

"வானுலக மக்களுக்காக?"

"அப்படியொரு உலகம் உண்டா?"

"அதற்கு தாங்கள்தான் விடை சொல்ல வேண்டும்"

"வையத்து வாழ்வாங்கு வாழ்வார் தெய்வத்துள் வைக்கப்படும் என்று சொல்கிறார்கள் உங்கள் உலக வள்ளுவர் பொன்னுரை என்ற. அந்தக் கூட்டத்திலே சேர்ந்தவள் தான் நான்"

மேலும் நடந்தோம். மௌனம் நிலவியது.

"தொடுவானத்திற்கு, என்று போய்ச்சேர்வது? எப்பொழுது நம் பிரயாணம் முடிவது?"

"அவசரப்படாதே.... பொறுமை வேண்டும்"

"அங்கே எதற்காகப் போகிறோம்?"

"பூவுலகில் தங்கள் கடமைகளை நிறைவேற்றுகிறவர்களின் பெயர் பட்டியல் புத்தகம் அங்கே இருக்கிறது. அதனைக் காட்டுவதற்காகவே அழைத்துச் செல்கிறேன்"

"அதில் என் பெயர் இருக்காதே!"

"ஏன்?"......"

"காதலின் வெற்றிக்கு உழைத்த அளவு, 'கடமை நிறைவேற்றத்தில் கவலை செலுத்தவில்லை."

"தேடிப் பார்ப்போம்"

சென்றுகொண்டிருந்தாள். நானும் பின்தொடர்ந்தேன். அந்தப் பொன்னேட்டைப் புரட்டினள். முதல் பக்கம்......முதல் வரி....... என்ன ஆச்சர்யம்! என்கடமையைத் தவறவொட்டாமல் நிறைவேற்றுகிறவனும்.........எப்படியோ? உன்னைப்பற்றியும் கேட்க வேண்டும் என்று எண்ணினேன். தேவியைத் தேடினேன்: மறைந்துவிட்டாள். என் கனவும் கலைந்துவிட்டது.

பத்மா, உன்னைமறந்துவிட்டேன் என்றே நினைத்துக்கொள். நீ கூறுகிறபடி நான் தொல்லை தரமாட்டேன். நான் உன்னை அடைந்துள்ளத்தனையோ, நாட்களாகிவிட்டனவே. எப்பொழுதும் உன்னுடன்தானிருக்கிறேன், உரையாடுகிறேன், இரவு நெடுநேரம்வரை! பிறகும் என்னைவிட்டுப் போவதில்லை. கூப்பிட்டவுடன் ஏன் என்ற குரல் காட்டி என்னிடம் ஓடோடி வருகிறாய்......ஆம், பத்மா எனக்குப் பித்து பிடிக்கவில்லை. 'மஜ்னு'வாகவில்லை. 'ஸ்குரு லூஸ்' என்றும் கேலி பேசிவிடாதே சட்டென்று! நல்ல நிலையிலிருந்தே சொல்கிறேன்.

பத்மா, உன் நினைவு வருகிறபொழுதெல்லாம் என் பேனாவை எடுப்பேன். உடனே பத்மாவிடம் நான் பேசுவேன்—அவள் என்னோடு பேசுவாள்! இலக்கிய நாலேனி வழியாக என்னிடம் வந்து விடுகிறாள். என் கழுத்து ஒரு வானவில்—நீ நிற்கிற இடமோ அடிவானம்! வானவில் வழியாக அடிவானத்திற்கு யாத்திரை கிளம்பி வந்து நான் அடைவேன். ஆகவே, நான் உன்னை இழக்கவில்லை, இழக்க விரும்பவுமில்லை. நீ என்னைத் தள்ளிவிட்டதாக நன்றாக, உறுதியாக, திடமாக எண்ணிக்கொள். எனக்கு அது பற்றிய கவலை துளியும் இல்லை.

தசரதன் என்றோஒருநாள், நீரத்திலே நீர் முகர்ந்துகொண்டிருந்த சிறுவனை யானையென்று அம்பெய்து கொன்றுவிட்டானாம். அந்த சிறுவனின் பெற்றோர்கள் அவனை நீயும் எங்களைப்போல புத்திரசோகத்தால் சாவாய் என்று சாபமிட்டு மடிந்தார்களாம். அப்படியே எனக்குயாரோ ஒரு பெண் ஏக்கத்தாலேயே உன் வாழ்வு குலையும் என்று எனக்குத் தெரியாத பிறவிகளில் சாபமிட்டு விட்டாள் போலிருக்கிறது! ஏனெனில், பத்மா, என் ஆயுளில் உன்னை மறக்க முடியாதே!

உனக்கு எந்தத் தொல்லையும் வராது. அப்படி வந்தால் அதற்காக என் உயிரையும் பணயம் வைத்துப் போராடுவேன். என் இதயத்தை இரும்பாக்கி இதோ எழுதிவிட்டேன், கடைசிக் கண்ணீர்த் துளியின் துணைகொண்டு! உன்னை மிரட்டும் தந்தைக்கும், அழுது தடுக்கும் அன்னைக்கும் காட்டிவிடு. இனி எந்தத் தொடர்பும் கொள்ளமாட்டேன், கடந்த கால நிகழ்ச்சிகள் என் மனதின் பேயாட்டம் என்ற கருத்தில்! இனி என் வாழ்க்கை யாத்திரை, உன் நல் வாழ்வைக் கருதித்தான்!

உணர்ச்சிக்கு முன் இலக்கணம் மண்டியிடும்—காதலுக்கு முன் சுமை மண்டியிடுவதைப் போல! மறந்துவிடு, மன்னித்துவிடு, பத்மா! ஆனால் நீ மட்டும் என்னைவிட்டுப் போகவில்லை என்பதை உணர்ந்துகொள்!

(தொடரும்)



# பிரமநதி பிரதேசத்திலே!

"எங்களுக்கோர் தனிநாடுதேவை நாங்கள் இனியும் இந்திய சர்க்காருடன் இணைந்திருக்க விரும்பவில்லை"

"ஏன் அப்படி?"

"ஏனா? நாங்கள் ஓர் தனிக்கூட்டம். எங்களை, நாங்களே ஆண்டுகொள்ள முடியும். விரோதிகள் எங்களுக்குச் சிறுதுரும்புகள். நாங்கள் வாழும் மலைக்குன்றுகளை அண்டமுடியாத சாமான்யமாக இயலாது இயற்கை எங்களை வாழ்விக்கும்தாய்! இந்நிலையில் எதற்காக இந்திய சர்க்காரிடம் மண்டியிட்டுக்கிடக்கவேண்டும்"

"அப்படியென்றால் இந்திய சர்க்காரை, உங்கள் விரோதி யென்று கருதுகிறீர்கள். அப்படித்தானே?"

"மோசமான அபிப்பிராயம், இது எங்களுக்கு வேண்டியதைப் பெற நாங்கள் விரும்புவதற்குப் பெயரா, விரோதம்? இந்தியாவுடன்இணைந்து கிடக்க விரும்பவில்லையே தவிர, நட்போடுவாழ நாங்கள்தயங்கோம்"

"அப்படியென்றால்........."

"இந்திய சர்க்காரின் சட்டதிட்டங்களை இனிமேல் மதியோம். அவர்களது ஆட்சி இங்கு நடைபெற, எங்கள் ஒத்துழைப்பை நாங்கள் தரமாட்டோம்."

"உங்களது மக்கள், இந்தக் கருத்தை ஏற்கிறார்களா?"

"பொதுவாக எல்லோரும் இந்தக் கருத்தை ஏற்கவே செய்கிறார்கள். நாகஸ்தான் வேண்டுமென்பதே நாகர்களின் இலட்சியம்."

"நாகஸ்தான் பெற்று, நீங்கள் பிரிந்து செல்ல, இந்திய சர்க்கார் அனுமதிக்குமா?"

"அதுயார் எங்களை அனுமதிக்க. அல்லது, நாங்கள்தான் ஏன், அதன், அனுமதியைக் கேட்டுக் கிடக்கவேண்டும்."

"வேடிக்கையாயிருக்கிறதே!"

"வேடிக்கையல்ல. வேதனைப் படும் மக்களின் முடிவு இது".

"என்னதான் செய்யப்போகிறீர்கள்?"

"எங்களுடைய கோரிக்கை நாகஸ்தான் வேண்டுமென்பது. நாகஸ்தான்; இந்திய யூனியனுக்குக் கட்டுப்படாததாக இருக்கவேண்டும். அப்போதுதான் எங்களை நாங்களே கவனித்துக்கொள்ளமுடியும். இந்த எண்ணத்தை எங்கள் மக்களிடையில் பரப்பி வருகிறோம். இந்திய யூனியனிலிருந்து பிரிந்து தனிநாடு அமைக்கலாதா என்பது குறித்து எங்கள் மக்களுடைய ஏகோபித்த அபிப்பிராயத்தைப் பெற, விரைவில் பொது வாக்கெடுப்பு நடத்தப்போகிறோம்"

* * *

அஸ்ஸாம் மாகாணத்தில், பர்மாவுக்கு ஓரத்தில்; மலைப் பிராந்தியங்களில் வசிக்கும் நாகக் குடிகள், தனிநாடு வேண்டுமென, முழக்கமிடத் துவங்கியுள்ளனர்.

இந்தத் தகவலை, இந்திய சட்டசபையின் அஸ்ஸாம் பிரதிநிதியான குலாதார் சாலிகா என்பவர், வெளியிட்டுள்ளார். தான், நாக மக்கள் தலைவரான பிஜோவைச் சந்தித்ததாகவும், அவருடன் உரையாடியதாகவும், அவர் இந்திய சர்க்காருக்குத் தெரிவித்துள்ளார்.

நாம், மேலே தீட்டியிருப்பது அந்த இருவரும் சந்தித்தபோது நடந்திருக்கக்கூடிய உரையாடலாகும்.

நாகர்கள், மிகவும் சிறுபான்மையினரென்றாலும், அவர்கள் மத்தியில் எழும்பியிருக்கும் இந்தச் சுதந்திர தாகத்தை இந்திய சர்க்கார் அலட்சியப்படுத்தக் கூடாதென்றும், அவர்களது இலட்சியங்களைப் புரிந்து கொள்ள முனைய வேண்டுமென்றும், தோழர் சாலிகா, இந்திய அரசியலார்க்கு வலியுறுத்தியுள்ளார்.

தோழர் சாலிகா, நாகஸ்தான் கோரிக்கையை ஆதரிப்பவரல்ல; காங்கிரஸ்காரர். ஆயினும், நாகர் மக்களின், பிடிவாத குணத்தையும், வீரத்தையும் நன்றாக அறிந்தவர்.

நாகர்கள், நாகரீக முதிர்ச்சியடையாத மக்களாயினும், வீரத்திலும் தீரத்திலும் குறிப்பிடத் தக்க, மலை சாதியினராகும்.

அவர்களை ஒன்று திரட்டி பிஜோ (Phizo) என்பவர், நாகர் தேசீய கவுன்சில் என்கிற இயக்கத்தை நடத்திவருகிறார்,

மேற்படி கவுன்சில், விரைவில் நாகஸ்தான் பெறுவதற்கான மும்முரமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென, அண்மையில் முடிவு செய்திருக்கிறது. அந்த முடிவுகளில் ஒன்று, 'பொதுஜன வாக்கெடுத்து, தாங்களாகவே இந்திய யூனியனிலிருந்து பிரிந்து நாகஸ்தான் அமைத்துக்கொள்வது' என்பதாகும்.

இதன்படி, விரைவில் பொது வாக்கெடுப்பும் நடைபெறப் போகிறதாம்.

அந்தப் பொது வாக்கெடுப்பின் பார்வையாளராக இருக்கும்படி, தோழர் சாலிகாவை சந்தித்தபோது நாகர் தலைவர் கூறினாராம். அப்போதுதான், தனது மக்களின் உண்மையான சுதந்திர தாகத்தை, தங்களை எதிரியாகக் கருதுவோர், உணரமுடியும் என்ற நோக்கத்துடன்.

ஆனால், சாலிகா, நாகர் தலைவரை 'டில்லிக்கு வாருங்கள். நமது தலைவர்களாம் நேரு முதலியோரைக் காணுங்கள்' என்று வேண்டிக்கொண்டு, நாகஸ்தான் கோருவது நல்லதல்ல என்று தெரிவித்தாராம்.

காங்கிரஸ் பிரமுகரான சாலிகாவின் வேண்டுகோளை நாகர் குலத் தலைவர் மறுத்துவிட்டாராம்—எந்த விதப் பதிலும் அனுப்பாமல்.

நாகர் கவுன்சில் முடிவுப்படி, விரைவில் பொது வாக்கெடுப்பு நடத்தவும், வேலைகள் நடைபெற்றுக் கொண்டுள்ளனவாம்.

சுமார் 70-லட்சம் மக்களைக் கொண்ட அஸ்ஸாம் மாகாணத்தில் நாகர்கள் வாழும் பிராந்தியமான நாகா — குன்றுகள் (Naga Hills) ஒரு ஜில்லாவாக, அமைந்திருக்கின்றது.

இப்போது, இந்த ஜில்லாவை தனி நாடாக்கி வாழவேண்டுமென்பதே, நாகர்கள் கட்சியின் முரசொலியாகும். நாகர்களின் ஜில்லா, அஸ்ஸாமுக்கும் பர்மிய எல்லைக்கும் இடையிலே இருக்கிறது. அதோடு,

5-ம் பக்கம் பார்க்க

4-ம் பக்கத் தொடர்ச்சி

செய்வது என்பது குறித்து, ஆலோசிப்பதில்லை.

ஆனால், அதற்குப் பதில், "பஞ்சத்தை எதிர்ப்போம்," "உணவுப் பிரச்னையை ஒரு போர்க்கால பிரச்னையாகக் கருதுவோம்" என்று முழக்கமிடுகின்றனர். அண்மையில் பிரதமர் நேரு, உணவுப் பிரச்னை குறித்து பேசுகையில், இதைத்தான் வெளியிட்டுள்ளார். இத்தோடு நின்றுவிடுவதில்லை, மக்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது குறித்தும் போதிக்கத் துவங்கிவிடுகிறார்கள்.

உணவுப் பிரச்னையைச் சமாளிக்க புத்தி கூர்மையோ, பொறுப்போ இல்லாவிடினும், 'மகாஜனங்களே! ஒருவேளை உணவை ஒழியுங்கள்! கொஞ்சமாகச்சாப்பிடுங்கள்!' என்று அறைகூவல் விடுக்கின்றனர்.

அதுமட்டுமல்ல, இவ்வளவு பெரிய திண்டாட்டம் ஏற்பட்ட தெவ்விதம், இதைப் போக்குவது எப்படி என்று ஆலோசனைகள் பெறுவதற்குப் பதில், மக்களின் கவனத்தை மாற்று வழிகளில் திருப்பிவிடுகின்றனர்.

"உணவுப் பஞ்சம் ஏன் ஏற்பட்டது தெரியுமோ? நமது பாரத நாட்டை இரண்டாகப் பிரித்ததால் தான்"

"அது மட்டுமல்ல, பூகம்பம் ஏற்பட்டது, வெள்ளங்கள் அடித்துக் கொண்டு போயின, மழையே பெய்யவில்லை......"

"இயற்கை நம்மை மோசம் செய்துவிட்டது"

இவைகளையே திருப்பித் திருப்பி பாடுகின்றனர். ஆனால் இவர்கள் கூறுமளவுக்கு, இவைகள் அல்ல காரணம். ஏனெனில், பிரிவினைக்கு முன் எந்தெந்த பாகங்கள் முக்கிய நெற்களஞ்சியங்கள் என்று புகழப்பட்டனவோ, அவை அப்படியே இருக்கத்தான் இருக்கின்றன. அது போல பூகம்பம், பருவக் கோளாறு முதலியவை பாதித்தது உண்மையென்றாலும், உணவுப் பஞ்சத்துக்கு, அவைகளே முக்கிய காரணங்கள் அல்ல.

இயற்கை நிகழ்ச்சிகளுக்கு, வந்த சுதந்திரத்தின்மீது, அப்படி யொன்றும் கடுங்கோபம் வந்துவிடவில்லை.

வழக்கம்போலத்தான், அவைகள், தங்களது நாச வேலைகளைச் செய்கின்றன; அதிகமாக ஒன்றும் ஆகிவிடவில்லை.

எனினும், மக்களின் கோபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள, இவைகளைக் காரணமாகக்காட்டுகின்றனர், காங்கிரஸ்காரர்கள்.

ஆனால், உணவுத் திண்டாட்டத்துக்குள்ள முக்கியமான காரணங்கள்.

* மற்ற உற்பத்திப்பொருள்களுக்கு கிடைக்குமளவு விலை, உணவுத் தானயங்களை விற்றால் கிடைப்பதில்லை. நெல் விளைவிப்பதற்குப் பதில் கரும்போ, சணலோ, புகையிலையோ அல்லது பருத்தியோ போட்டால் அதிக இலாபம் கிடைக்கிறது.

* உழுது வாழும் விவசாயி வீட்டுக்கான பொருள்களை வாங்க, மிகவும் திண்டாடுகிறான். நெல்லை குறைந்த விலைக்கு விற்றுவிட்டு, தேவையான வேறு பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்குகிறான். ஆகவே, அவன் வாழ்க்கை சுமுகமாக நடைபெற அதிகப் பணம் தேவைப்படுகிறது. அதனால், அதிகப் பணம் வரும் வகைகளிலேயே சிரத்தை செலுத்துகிறான்.

* ஆகவே, நெல்விளையும் பல இடங்களில், வேறுபொருள்கள் உற்பத்தியாகின்றன. இதனால் உணவு உற்பத்தி குறைந்தது.

இந்தக் காரணங்களோடு, இந்தியாவில் நிலவும் நிலப் பிரபுத்துவ முறை, விவசாயத்தில் பழைமை நீடிப்பது முதலானவைகளும், காரணமாகக் கூறலாம்.

ஆனால் ஆளவந்தாரோ, இதுபற்றிச் சிந்திப்பதில்லை. வெறும், வீர முழக்கங்களாலேயே, காலத்தைக் கழித்து விடலாமென எண்ணுகின்றனர்.

உணவு உற்பத்தித் திட்டம் போன்ற பல திட்டங்கள் போட்டு, விவசாயிகளுக்கு விதை, விவசாயக் கருவிகள் முதலானவைகளை வழங்க திட்டம் தீட்டினர் சர்க்கார்.

ஆனால் இத்திட்டத்தால் ஏழை விவசாயிகள் பலன் பெறவில்லை. நிலப் பிரபுக்கள், தங்கள் செல்வாக்கு மூலம், அத்திட்டங்களால் பயன் பெற்றார்கள்.

ஆகவே, உணவுத் திண்டாட்டம் ஒழியவேண்டுமானால், விவசாயியின் வேதனை நீங்கும் வழிகளைக் காண வேண்டும். உற்சாகத்தோடு, அவன் உழைக்கும் நிலை மலரவேண்டும். சர்க்கார், வீர கர்ஜனைகள் எழுப்புவதை விடுத்து, புதிது புதிதாக திட்டங்கள் தீட்டுவதை நிறுத்திக் கொண்டு, தங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டும்.

உணவுப் பொருளின் விலைக்கும், ஏனைய உற்பத்திப் பொருள்களின் விலைகளுக்குமிடையே அதிக பாரபட்சம் இருக்கக்கூடாது.

இந்திய மக்களில் பெரும்பாலானோர், விவசாயிகள். அவர்களில் விவசாயத்துக்குத் தேவையானோர் போக, எஞ்சி நிற்போருக்கான தொழில் வசதிகளைச் செய்து தர வேண்டும்.

அதாவது, கைத்தறி, வீடு கட்டுதல் போன்ற விவசாயியின் தேவைகளை முடித்துத் தரும் தொழில்களில் பழக்கவேண்டும். ஒவ்வொரு குடியானவக் குடும்பத்திலிருந்து; ஒரு நபராவது, இத்தொழில்களில் ஈடுபடவேண்டும். அவர்கள் ஈடுபடும் வகையில், சர்க்கார் கூட்டுறவுக் கைத்தொழில்களை (Co-operative industry) ஏற்படுத்தித் தரவேண்டும். அப்போது தான் விவசாய மக்களின் வேதனை குறையும்; ஏழ்மை மறையும்; பொருளாதாரம் சீர்படும். மக்கள் மறுமலர்ச்சி பெற்று வருகிறார்கள், மறுமலர்ச்சியின் குரலை, ஆளும் பெருமை பெற்றோர், புறக்கணித்தல் ஆகாது.

Edited Printed & Published by C. N. Annadurai M A at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram

6 JUL 1951
MADRAS

REGD. No. M

# திராவிடநாடு

இலங்கை 15 சதம் | விலை அணா 2

மலர் 9 | 10–6–51 | இதழ் 51

# சந்தர்ப்பஸ்தான்!

மூன்று மணி நேரம்,

ஜீவ மரணப் போராட்டம் நடந்தது,

போர்! போர்!! பயங்கரப் போர்!!!

அடித்தனர், மடல் கெடுத்தனர்! முகத்திடித்தனர், குடலெடுத்தனர்! இடுப்பொடித்தனர்! சிரம் உடைத்தனர்! பொடி பொடித்தனர்! வசை துடைத்தனர்! உயிர் குடித்து, பழி முடித்து வழி நடந்தனர்!

மூன்றேமணி நேரத்தில், மனோன்மணியத் தமிழிலே வருணிக்க வேண்டிய அளவு போர் நடந்து விட்டது!

மே-23ம் நாள் பகல் 1-மணிக்குத் தொடங்கிய போர்; மாலை 4-மணி வரை தொடர்ந்து நடந்தது, நிற்கவே இல்லை!

போர், யார் யாருக்கும்? ஆம், கேட்பீர்கள்.

பாகிஸ்தானுக்கும், பக்டூனிஸ்தானைச் சேர்ந்தவர்களுக்கும் தான் போர் நடந்தது!

பக்டூனிஸ்தான்—எங்கிருக்கிறது? உருவிலே இருந்தாலும், உருவிலே, அது தெரிய ஆரம்பித்தது மட்டுமல்ல, போர் புரியவும் துணிந்துவிட்டது.

இந்தப் போர் பற்றி, காபூல் ரேடியோ, கதறியபொழுது கருத்துள்ளோர் காதுகளைத் தீட்டித்தான் கேட்டிருப்பர்.

பக்டூனிஸ்தான் மொக்கு – இருந்தும் மணம் பரப்புகிறது! அதுவும் புரட்சி வாடையை வீசுகிறது!

பக்டூனிஸ்தான் வளர்ந்திடும் தளிர்—துளிர் தளிராகி; இன்னும் இலையாகாத நிலையிலேயே இத்தகைய போரிடக் கூடிய அளவிற்கு வளர்ந்து வலிமை பெற்றுமிருக்கிறது!

பாகிஸ்தானுக்கும், பக்டூனிஸ்தானுக்கும்—போர் ஏற்படவேண்டிய காரணம் என்ன? ஏதாவது பகையா, வெறுப்பா, விரோதமா என்றால் இல்லை. ஆனாலும், பாகிஸ்தானிலிருந்து பிரிந்து வாழ — எனினும் பிளந்து போக அல்ல — முயற்சி செய்கிறார்கள். அதனால் தான் போர்!

பக்டூனிஸ்தானின் பிறப்பை முன்னரே எடுத்துக் காட்டியுள்ளோம்.

இந்தப் பிரிவினை கிளர்ச்சிக்கு, இந்திய ஆட்சியினர் ஆதரவு காட்டுகின்றனர்! பிரிவினையே கூடாது என்று பேசி, பிறகு தோற்றுப் போன காங்கிரசாட்சியிலே, பாகிஸ்தானிலே பிரிவினை வேண்டிடும் கிளர்ச்சிக்கு இந்தியாவில் பிரசாரம் நடைபெற இடந்தருகிறார்கள்! இப்படிக் குற்றம் காட்டியுள்ளது, பாகிஸ்தான் சர்க்கார்.

வெறும் குற்றஞ்சாட்டல்ல — ஆதாரத்தோடு!

புதுடில்லியிலுள்ள ஆப்கனிஸ்தானீகர் சர்தார் நஜிபுல்லகான் மேவால், டில்லி ரேடியோநிலையத்திலிருந்து பேசும்பொழுது, பாகிஸ்தானிலுள்ள தங்கள் பக்டூன் சகோதரர்களின் நிலைமை மோசமாக இருக்கிறதென்று கூறினர்.

இதனை எடுத்துக் காட்டியுள்ளது பாகிஸ்தான்.

இந்தப் பிரசாரத்திற்கு இடம் அளித்தது குற்றம். அதுவும் சர்வதேச சட்டத்திற்கு விரோதமானது என்று பேசியுள்ளது.

குற்றமா, குற்றமில்லையா என்பதல்ல நமது கவலை. பாகிஸ்தானிலே பிரிவினைக் கிளர்ச்சி என்றால் இவர்கள் ஆதரிக்கிறார்கள். அதற்கு தூபமிடவும், தூண்டிவிடவும் கூடத் தயங்குவதில்லை.

ரேடியோமட்டுமல்ல, பிரசார பீரங்கிகள் எல்லாவற்றையும் திருப்பி விடுகிறார்கள்.

பக்டூனிஸ்தானைப்பற்றி, இந்திய பத்திரிகைகளில் ஏராளமான செய்திகள் வருகின்றன. அவைகளைத் தடுக்கவேண்டும்என்று பாகிஸ்தான் கேட்டபொழுது, பிரதமர் நேரு, பத்திரிகை சுதந்திரத்தில் நாங்கள்

தலையிட முடியாது என்று கூறிவிட்டார்.

பாகிஸ்தான் கூடாதென்று கூறிய கோமான்களே — பக்டூனிஸ்தானுக்கு ஆதரவு காட்டுகின்றனர்.

அதற்கு ஏற்ற விளக்கங்கள், வியாக்கியானங்கள் வித விதமாகப் பேசுகின்றனர்.

அடுத்தவருக்கு ஒருநீதி, தமக்கொருநீதிபேசிடுகின்றனர் இவர்கள்.

பாகிஸ்தானில் பிரிவினை கீதம் பாடினால் தாளம் தட்டுகிறார்கள் — ஆனால் இந்தியாவில் அந்த கீதம் கேட்டால், காதை மூடுகிறார்கள். கண்களை உருட்டுகிறார்கள்—மிரட்டுகிறார்கள்!

பக்டூனிஸ்தான் கேட்பவர்கள் காட்டும் காரணங்களைப்போல, ஆயிரம் காரணங்களைக் காட்டி, பிரிவினை கோரினாலும் அந்த மனோபாவம் கூடாது என்கிறார்கள் இந்தியாவில்!

பிரிவினையை எதிர்த்தால் எங்கும் எப்பொழுதும் எதிர்க்கவேண்டும். அந்த 'அரசியல் அட்டம்' செய்யக்கூடத்தெரியாத, முடியாத இவர்கள் தான் வீரம் பேசுகிறார்கள்.

இவர்கள் பிரிவினையே கூடாது என்பவர்கள் மட்டுமல்ல — காந்தி மகான் பாதையிலே நடப்பவர்கள். அஹிம்சையே, அவர்கள் ஆயுதம்—அரசியல் முறை!

ஆனால், பக்டூனிஸ்தான் இயக்கத்தவரோ, ஹிம்சை பாதையிலே நடப்போம் என்று எச்சரிக்கை விடுகிறார்கள்—அதுமட்டுமா, ஆயுதப்போரே நடத்துகிறார்கள், சமயங்களில்!

பேசுவதொன்று, செய்வதொன்று என்ற பொன்மொழிக்கு அதிக மதிப்பை வாங்கித் தந்தவர்கள் இவர்கள். ஆகவே, நா, நினைத்தபடியெல்லாம் சுழன்றபடி பேசுகிறது—அவர்கள் மனம்போன போக்கில் பேசுகிறார்கள்.

கல்கத்தாவில் நடந்த பக்டூன்கள் மகாநாட்டுத்தலைவர் மௌலானா மகமத் அக்பர்கான் பேசியுள்ள பேச்சைப் படித்தபிறகு தெரியும், அவர்கள் பாதை எப்படிப்பட்டதென்பது!

பக்டூன்களுக்கும், பாகிஸ்தானுக்கும் ஆயுதப்போர் நடப்பதைத் தவிர்க்க பக்டூனிஸ்தான் பிரச்சினை பற்றி உலக வல்லரசுகள் ஏதாவது நியாயமான பரிகாரம் ஒன்றை சீக்கிரத்தில் காணவேண்டும் என்று கூறுகிறார் மாநாட்டுத் தலைவர்.

இந்தக் கிளர்ச்சிக்குந்தான் இந்தியா ஆதரவு தருகிறது என்கிறது பாகிஸ்தான் சர்க்கார்.

* * *

எத்தகைய கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் பாகிஸ்தான் ஆட்சியின் கீழ் வாழ பக்டூன்கள் தயாராக இல்லை.

பக்டூனிஸ்தானுக்கு விரோதமாக துவேஷத்தையும், பலாத்காரத்தையும் விதைக்கிறது பாகிஸ்தான் சர்க்கார்.

மதத்தின் பெயரால் பாமரமக்களை ஏமாற்றப் பார்க்கிறது சர்க்கார்.

எல்லைப்புறத்தில் தேர்தல் நடத்துவதானால் எல்லா குதாய், கித்மத்காரர்களையும் விடுதலை செய்துவிட்டு, பக்டூனிஸ்தான் பிரச்சினை மீதே நடத்தவேண்டும்.

இந்தியா, இதற்கு எப்பொழுதும் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுள்ளனர், பக்டூன்கள் தங்கள் மாநாட்டு மூலம்.

இத்தகைய காரணங்களை காட்டித்தான் பக்டூனிஸ்தான் கேட்கின்றனர். இந்தியாவோ, ஆதரவு காட்டுகிறது, இது சர்வதேச சட்டத்திற்கு விரோதமானது என்று பாகிஸ்தான் கூறுகிறது!

ஆனால் அஸ்ஸாமில் வாழும் நாகர்களோ, நாகஸ்தான் கேட்கத் தொடங்கியுள்ளனர்.

இந்திய சர்க்கார் இதனை ஏற்றுக் கொண்டதா என்றால் இல்லை.

பாகிஸ்தானில் பிரிவினை கிளர்ச்சியென்றால் உற்சாகப்படுத்துகிறார்கள்: இந்தியாவில் அதுபோன்று உணர்ச்சியிருந்தால் உபதேசம் புரிகிறார்கள்.

நாகஸ்தானைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். அங்கு, என்ன பேசுகிறார்கள் தெரியுமோ! பிரிவினை மனோபாவம் கூடாது என்று கனிமொழி பேசுகின்றனர்.

அஸ்ஸாம் மாகாண காங்கிரஸ் தலைவர் சித்திநாத் சர்மா, நாக மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிடுபவை, எவ்வளவு முரணாக இருக்கின்றன பாருங்கள்.

பிரிவினை மனப் போக்குகளை கைவிட்டு விட்டு, தங்கள் சுபீட்சத்தையும், தேச சுபீட்சத்தையும் கருதி இந்திய மக்களுடன் ஒன்றுபட்டு வாழவேண்டும்.

மலை ஜாதியாருக்கு ஏதாவது குறையிருந்தால் எடுத்துக் காட்டினால் அவைகளை நிவர்த்திக்க தக்க நடவடிக்கைகள் அதிகாரிகள் எடுப்பார்கள்.

உபதேசம் இந்த போக்கில், நாகஸ்தான் கேட்கிறபொழுது. இம்மாதிரி பக்டூனிஸ்தான் கேட்போருக்கு கூறவில்லை. ஏன்?

அவர்கள் பிரிவினைக்கு விரோதிகளல்ல—ஆனால் தங்களைப் பாதிக்கிற பொழுது மட்டும் எதிர்க்கிறார்கள். அது சுயநலத்தால் வரும் தொல்லை!

— இல்லாவிட்டால், பிரிவினை ஒன்றை ஆதரித்துவிட்டு, மற்றொன்றை எதிர்ப்பார்களா?

* * *

நாம், திராவிடநாடு கேட்கிறோம்.

சரித்திரத்தை சாட்சியாக்கியிருக்கிறோம். கலாசாரத்தைக் காரணமாக்கி யிருக்கிறோம். இன வித்தியாசத்தை எடுத்துக் காட்டியுள்ளோம். பண்பு, பழக்க வழக்கங்களை ஆதாரமாக்கி யிருக்கிறோம்.

ஆண்டு பலவாக, இந்த பிரிவினை முரசு கொட்டி வருகிறோம்.

திராவிடநாட்டுப் பிரிவினைக்கிளர்ச்சியை முதலில் அலட்சியப்படுத்தினர்—பிறகு அலர் எழுப்பினர்—இப்பொழுதோ அதனைக் கண்டியாதார், காங்கிரசில் இல்லவே இல்லை!

திராவிட நாட்டைத் திட்டாத
நாவென்ன நாவே
திட்டிக் கேட்காத
செவியென்ன செவியே

இப்படிப் பாடிபாடியே உள்ளனர், இன்னமும் காங்கிரசில் ஒட்டிக் கொண்டுள்ளோர்.

ஆனாலும் நாம் தொடர்ந்து நம் பணியை விடாது நடத்தி வருகிறோம்.

அலட்சியப்படுத்தியவர், கேலி பேசினர். கேலி பேசியவர், கண்டித்தனர். கண்டித்தவர்கள், தடுத்து நிறுத்திட துடிக்கின்றனர். இப்படி படிப்படியாக வளர்ந்து வரும் முயற்சியைத்தான் 'தேர்தல் தத்துக் கிளிகள்' இன்று நாட்டில் கண்டபடி பேசித் தள்ளுகின்றனர்.

தேர்தல் நெருங்க நெருங்க, அவர்



கள் பேச்சும் விரிந்திடுகின்றது.

அதற்கு நம் நாட்டுப் பிரச்சினையைக் கண்டபடிக் குறை கூறி, தங்கள் கட்சிக்கு வோட்டுகள் நிறைத்திட முனைந்துவிட்டனர்.

ஆனால், இவர்கள் யார் என்பது நமக்குத் தெரியும்!

பாகிஸ்தான் அடைந்தபொழுது நடந்துகொண்ட நடவடிக்கைகள் மட்டுமல்ல, இங்கு குறிப்பிடுபவை—இன்று பக்டூனிஸ்தான் பிரச்னையிலே கடைபிடிக்கும் முறையையுந் தான் நினைப்பூட்டுகிறோம்.

பாகிஸ்தானை எப்படி எப்படி எதிர்த்தார்கள்? என்னென்ன பேசினார்கள்? பேசமுடிந்தவர்கள் எல்லாம் ஏசினர். எழுதத் தெரிந்தவர்கள் எல்லாம் பழித்தெழுதினர், ஆனாலும் பாகிஸ்தானுக்கு கடைசியில் இணங்கத்தான் செய்தனர்.

பாகிஸ்தான் பிரிந்ததால், 'பாரத மாதா' மடிந்துவிடவில்லை — பசுக்கொலையும் ஏற்பட்டுவிடவில்லை!

பாகிஸ்தான் பக்கத்திலே இந்துஸ்தான் இருக்கிறது! இரண்டுக்கும் வியாபார ஒப்பந்தம் நடந்துள்ளது. காரச்சியும், டில்லியும், இரண்டு போர் முகாம்களாக இல்லை. இரு பெரும் நாடுகளின் தலைநகரங்களாகத்தானுள்ளன.

பிரிவினையே எதிர்த்தவர்கள் பிறகு, எங்கெங்கு எப்படிப் பிரிப்பது—என்று பாகிஸ்தான் இயக்கத்தலைவருக்கு சொல்லிக் கொடுத்தனர்.

முதலில், பிரிவினைக்கு ஒப்புக்கொள்ளவில்லையென்று, பாகிஸ்தான் இயக்கத்தவர் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்: இப்பொழுதோ, பாகிஸ்தானில் ஏற்படும் பிரிவினை கிளர்ச்சிக்கு ஆதரவு காட்டுகின்றனர் என்று எடுத்துக் காட்டுகின்றனர். விசித்திரமான மாற்றந்தான், அரசியல்வானத்தில், இது!

பக்டூனிஸ்தானை ஆதரிப்போர், ஒரு நாளைக்கு திராவிடஸ்தானை ஆதரிக்காமலா போய்விடுவார்கள்?

நாகஸ்தான், பக்டூனிஸ்தான் ஏற்பட்டக் காட்டும் காரணங்களைவிட அதிகமான, ஆனால் அழுத்தமான காரணங்களைக் காட்டுகிறோம், நம் திராவிடநாடு தனித்திருக்க! ஆனாலும் செவியிருந்தும், செவிடராகின்றனர்! வாயிருந்தும், ஊமைகளாகினர்! இப்பொழுது செவிடுபோய், வாயாடிகளாகிவிட்டனர்!

நம்மை உபதேசத்தால் அடக்க முடியவில்லையென்றவுடன், உரத்த குரலில் போரிடக்கிடலாம் என்று இன்று 'தேர்தல் தப்பட்டைகளை' ஏவிவிட்டுள்ளனர்.

நாம் இவைகளைக் கண்டு கலங்கிவிடவுமில்லை. நிலை குலைந்துவிடவுமில்லை!

* * *

அடுத்த வீட்டு அம்பலவாணருக்கு ஒருபெண்—அவள் விதவை!

விதவைப் பெண் புரட்சிப் பெண்ணானாள். மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தந்தையிடமே தர்க்கிக்க ஆரம்பித்துவிட்டாள்.

பக்கத்து வீட்டு பரமசிவம், அவள் பக்கம் பரிந்து பேசினான். "ஆகா, அது நியாயந்தானே! அவள், இவ்வளவு இளம் வயதில் தாலியறுத்துவிட்டால்; அவள் உணர்ச்சியும், உள்ளமும் செத்துவிடவில்லையே!" என்று பேசினான்.

ஆனால், அவன் வீட்டிலேயே அவன் மகள் ஒருத்தி — கெட்டது விதவா விவாகங்கூட அல்ல — தான் காதலித்த வேறு சாதிக்காரனைக் கட்டிக் கொள்ள அனுமதி வேண்டினாள். அழுதாள். தொழுதாள். தடுத்துவிட்டான்.

பக்கத்து வீட்டுப் பரமசிவம் போக்கிலேயே, இந்திய சர்க்கார் நடந்து கொண்டுள்ளது.

பக்கத்து வீட்டு விதவை பாகிஸ்தானின் பக்டூனிஸ்தான்—அதற்கு பரிந்து பேசுகிறது, இந்திய சர்க்கார், பரமசிவம் போல!

ஆனால் தன் மகள், காதல் மணத்தை தடுப்பதைப் போல, இந்தியாவில் திராவிடஸ்தானை எதிர்க்கிறது!

சந்தர்ப்பத்திற்குத்தக்கபடி, பேசிடுவது, தனியாளுக்கு வேண்டுமானால் தவறுகத் தெரியாமலிருக்கலாம் ஒரு சர்க்காருக்கு இந்த போக்கு ஆபத்தானது.

பாகிஸ்தான், இந்துஸ்தான், பக்டூனிஸ்தான், திராவிடஸ்தான் என்பது போல, இவர்கள் சந்தர்ப்பஸ்தானிலே உலவுகிறார்கள்!

சந்தர்ப்பஸ்தான், எப்பொழுதுமே சங்கடஸ்தானாக மாறிவிடும்!

## வகுப்புரிமைப் ★ ★ போராட்டம்

சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் திரு. க. அன்பழகன் M. A. 'வகுப்புரிமைப் போராட்டம்' என்று, ஒரு அருமையான நூலை, தமிழகத்துக்குத் தந்துள்ளார். தமிழகச் சொற்செல்வர்களில் ஒருவரெனப் பாராட்டப்பெற்ற நண்பர் அன்பழகனின் சீரிய முயற்சியைக் கண்டு மிகவும் மகிழ்கிறோம். சமூகநீதிக் கோரிக்கை, சாவுக் குழியில், ஆதிக்க வெறியர்களால் தள்ளப்பட்டு, புத்துயிர் பெற துடித்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அவரது நூல், சமூக நீதி சம்பந்தமான சரித்திரத்தை, ஆதார பூர்வமாகத் தருகிறது, நமக்கு.

சமூக நீதிக் கோரிக்கை எழுந்த விதம், வளர்ந்த விபரம், வாடிய கதை, முதலாயவைகளை புள்ளி விபரங்களோடு, தந்துள்ளார்.

அதோடு சமூகநீதி முழக்கமென் எழும்பிற்று, அதைக் கட்டிக் காக்க பார்ப்பனரல்லாத சமுதாயம் துடித்துக்கிடப்பதன் காரணம் என்ன, என்பது குறித்து அவர் தந்துள்ள விளக்கம்—கண்ணிற்குள் கருமணி போன்றதாகும்.

நீண்ட காலத்தை இந்த அரிய நூலுக்கு, அவர் பயன்படுத்தியிருக்கிறார் என்பதை இந்நூலின் அருமை நமக்குச் சொல்கிறது.

இந்த அரிய நூல், ஒவ்வொருவர் இல்லங்களையும் அலங்கரித்தால்மட்டும்போதாது; இதயங்களிலும் குடியேற்றப்படவேண்டும்.

நண்பரின் இந்த நல்ல முயற்சியைப் பாராட்டுகிறோம். இதை, சென்னை பவழக்காரத்தெரு, மக்கள் மன்றத்தார் மிகவும் சிறந்த முறையில், பதிப்பித்துள்ளனர்.

வளர்ந்து வரும் உரிமைப் பேரொலிக்கு, விளக்கம் அளிக்கும் நல்லதோர் சுரங்கம்—இந்நூல்.

---

## காஷ்மீரத்திலே!

36,000 ஏக்கர்கள், கடந்த ஆண்டு அக்டோபரிலிருந்து இன்று வரை, நிலத்தில் உழுவோருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

பெரிய நிலச்சுவான்தாரி ஒழிப்புச் சட்டப்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாம்.

# ★ கார்—கட்டைவண்டி ★

—✲✲—

கார்களை நிறுத்துவதற்கு தார் ரோடுகளில் வசதி தேவை யென்று ஆராய்ந்தனர்.

போக்குவரத்து இடையூறுகளைத் தவிர்க்க வழி கண்டனர்.

பூமிக்கடியிலே, நிலவறைகள் கட்டிவிட்டால், பாதையிலே எத்தகைய தொல்லையும் வாராது. கார்களும் பாதுகாப்பான இடத்திலே என்று ஆலோசனை அளித்தனர்.

இந்த திட்டத்தை நிறைவேற்ற ரூ 65000000 செலவாகும் என்றும் திட்டமிட்டு தீவிர யோசனையிலீடு பட்டுள்ளனர்.

இத்திட்டம் நடைமுறையாக்கப் பட்டால், எதிர்பார்க்கிற அளவிற்கு சௌகரியங்கள் ஏற்படுமா என்று ஆராய ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டுள்ளது.

இங்கல்ல, இந்தத் திட்டம் இலண்டனில்!

கார் நிறுத்த நிலவறைகள் கட்ட, பிரிட்டன் போக்குவரத்து ஆலோசனை கமிட்டி யோசிக்கிறது. அதுவும், இலட்சக் கணக்கான பொருள் செலவில்!

இந்தியாவில் இதற்கு ஏற்றதான ஒரு திட்டம் பாருங்கள் — ஆனால் மூர்ச்சித்து விடாதீர்கள்!

கார், நிற்க இடத்திற்கு பூமாதேவியை, துளைத்திட இங்கிலாந்து திட்டமிடுகிறது.

கட்டை வண்டிக்கு, சக்கரங்களைச் செய்ய வழிகாண, இந்திய ரோடு காங்கிரசின் மாட்டுவண்டிச் கமிட்டி முயற்சி செய்கிறது.

வெட்கம்! வேதனை!! ஆனாலும் நாம் தாங்கிக் கொள்ளவேண்டியது தான். ஏன்? இந்தியாவில் பிறந்து விட்டோமே!

## கார் கட்டைவண்டி

உலகத்தின் முன்னேற்றத்திற்கும், இந்தியாவின் முன்னேற்றத்திற்கு முள்ள, வேகத்தின் தாரதம்மியத்திற்கு உள்ள அரிய உதாரணங்கள்!

கார் வேகத்தில் மற்ற நாடுகள் முற்போக்குப் பாதையில் ஓடிக் கொண்டிருக்கும்பொழுது, இந்தியா கட்டை வண்டி வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது.

மனிதன் விமானத்தில் பறக்கிறான், கடலில் கலம் கட்டி மிதந்து செல்கிறான். இரயிலில் பயணம் செல்கிறான். மோட்டாரில் போகிறான். சைக்கிளில் உருண்டு செல்கிறான். இத்தனை வாகன வசதிகளைக் கண்டுவிட்டான்.

ஆனால், இந்திய பூபாகத்திலே உள்ள, மனிதர்களோ, இந்த வேகத்தை எட்டியும் பாராத வாகனங்களிலே தாங்கள் 'தொழும் தேவர்களை, மூவர்களை ஏற்றிவைத்து வணங்குகிறார்கள்! அதனால்தான் போலும், அவர்களும் கட்டை வண்டி வேகத்திலேயே களிப்படைந்து வருகிறார்கள்!

சிவனுக்கு காளை, அவர் மகன் விநாயகருக்கு, எலி, அவர் தம்பி முருகனுக்கு மயில், திருமாலுக்கு ஆதிசேடன், கருடன், சனீஸ்வரனுக்கு காக்கை, மூதேவிக்கு கழுதை, எமனுக்கு எருமைக்கடா என்ற வேகத்திற்கும் தமக்கும் வெகுதூரம் என்று விளம்பரப் படுத்தும் பிராணிகளின் உதவியிலே பிரயாணம் செய்யும் பிராண்களை இன்னமும் வணங்குகிறார்கள். அந்த பக்திப் போதைதான் இவர்களைப் பின்னணியில் தள்ளிவிட்டதோ என்னவோ!

கார்களுக்கு நிலவறைகள், பிரிட்டனில் — வண்டிகளுக்கு சக்கரங்கள் இந்தியாவில்!

மாடுகள் அதிக சிரமமில்லாமல் அதிகமான பாரத்தை இழுக்க உதவிடும் சக்கரங்கள் கண்டுபிடித்து விட்டனராம். நாடு முழுவதும் இந்த சக்கரங்கள் பரவ முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாம்.

இந்தியா கட்டைவண்டி ஆராய்ச்சியிலே கவனமாக இறங்கிவிட்டதென்பது, இன்னுமொரு 'நியூடன்' நிகழ்ச்சியாகும் நம் நினைப்பிற்கு வருகிறது.

ரோடுகள் சீக்கிரம் தேய்ந்து விடுவதைத் தடுக்க மாட்டுவண்டி சக்கரங்களுக்கு உபயோகிக்கும் இருப்புக் கட்டுகளின் அகலத்தையும் அதிகரித்து பரீட்சை பார்ப்பதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளது.

கட்டுகளின் அகலத்தை அதிகரித்தால் ரோட்டுகள் தேய்ந்து விடாதென்று கருதப்படுகிறது. இதனால், அதிக இரும்பு கூட ஒதுக்க இசைந்துள்ளது மத்திய சர்க்கார்.

இங்கு இப்படி, கட்டைமாட்டு வண்டியைப்பற்றி ஆராய்ச்சி!

ஓ, சாரு, ரோட்டுமேலே தாரு
அதுக்குமேலே நாலுசக்கர காரு
காருக்கு பல பேரு
கணக்கா எண்ணிப் பாரு
சவர்லேட்டாம், பாண்டியாக்காம்
ஸ்டுடிபேக்கராம், போர்டாம்,
இன்னும் என்னென்னமோ
இருக்கு.

கூத்து மேடைகளில் கோமாளிப் பாடுகிறான், காரைப்பற்றி! கோமாளிப் பாட்டிலேதான்! கார், ஆனால் கோலோச்சிடும் நம்மாள்வார்கள் ஆட்சியிலே கட்டைவண்டிக்கு கட்டு கட்டிடும் கோலம்தான்

முன்னே ஒருவன் இழுக்க, பின்னே ஒருவன் தள்ள, மாதம் காதவழி சென்றிடும் மாட்டுவண்டி வேகத்தில் இந்தியா சென்றிடுகிறது எல்லா துறைகளிலும் என்பதற்கு இதைவிட என்ன உதாரணம் வேண்டும்?

* * *

கிராம ரோடுகள் போட, இந்திய சர்க்கார் திட்டமிட்டுள்ளது.

இதற்காக, ரோடு நிதியிலிருந்து 15 இலட்சம் ஒதுக்கத் முடிவு செய்திருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் ரோடு போட அல்ல, போட்ட பாதையோரங்களில் கார்களை நிறுத்த, சுரங்க அறைகளைக் கட்ட தீர்மானித்துள்ளனர்.

இதற்காக ரூ 650,00000. செலவிடத் திட்டமிட்டுள்ளனர்.

பாதை போடுவதற்கல்ல—பாதையோரத்தில் கார்களை நிறுத்த இந்த செலவுத்திட்டம்.

நமது பாரதபுத்திரர்கள் ஆட்சியிலே பாதைபோட பதினைந்து இலட்சமாம்.

(12-ம் பக்கம் பார்க்க)



# ★ சிறையிலே தங்கம்! ★

"ஒழுங்கோடு நிலவும் சுதந்திரத்துக்குத்தான் ஜனநாயகம் என்று பெயர். கட்டுப்பாடில்லாத சுதந்திரம் ஜனநாயகமல்ல"

* * *

பண்டித நேரு, இத்தகைய விளக்கம் தந்திருக்கிறார், இந்திய சட்டசபையில், பேச்சுரிமை எழுத்துரிமை சம்பந்தமான திருத்த மசோதாக்களை நிறைவேற்றுமுன்.

சுதந்திரம் கட்டுப்பாட்டோடு இருக்கவேண்டுமாம்!—வீட்டு மனைவிக்குச் சொல்லவேண்டிய வார்த்தை! ஆனால், வீரர் பண்டிதர், மக்களுக்குத் தெரிவிக்கிறார்!

வரப்பில்லாத வயல், முறையில்லாத அரசு, கரையில்லாத ஆறு, இருக்கவேண்டுமென்று எவரும் கூறார். அதேபோல, மனித சமுதாயத்துக்கும், ஒரு சில கட்டுப்பாடுகள், இருக்கத்தான்வேண்டும்.

ஆனால், கட்டுப்பாடு என்ற பெயருடன், மக்களை மந்தைகளாக்கினால்!

* * *

பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகியவைகள், காங்கிரஸ் ஆட்சியில்படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. எதிர்க்கட்சிகள் என்றாலே, அவர்கள் கூட்டங்களுக்குத் தடையும், பத்திரிகைகள்மீது பாணமும், வீசியவண்ணமே உள்ளனர், இந்நிலையில், நேரு, ஜனநாயகம்பற்றி புதுத் தத்துவம் தருகிறார்.

சுதந்திரம் கட்டுப்பாட்டோடு இருக்கவேண்டுமாம்! ஆகவே, பத்திரிகைகள் இப்படி இப்படித்தான் எழுதவேண்டும் என்று வரையறுத்துத் தரவேண்டுமென்று, திருத்த மசோதாவில், இந்த ஷரத்தும் சேர்க்கப்பட்டதாம்.

தெரிவிக்கிறார் அவர்! எழுத்துரிமைக்காகவும், பேச்சுரிமைக்காகவும் வெள்ளையராட்சியிலே பல்முறை வேதனைகளைத் தாங்கிய நேரு.

* * *

முன்புள்ள சட்டமோ ஒரு கிளிக்கூண்டு! இப்போது புதுத் திருத்தங்கள்மூலம், கூண்டைப் பெரிதாக்கி, இரும்புக் கம்பிகளையும் இணைத்திருக்கிறார்கள். பத்திரிகைகள் — பொதுமக்களின் எதிரொலிகள்! அவைகள் மௌனியாய்ப் பிடிப்பதென்பது, மக்களின் குரலை அடக்குவதென்றுதான் அர்த்தம். இது தெரியாதவரல்ல நேரு, இருந்தும், சுதந்திரத்துக்குப் புது வியாக்யானம் தருகிறார்! சுதந்திரம் கட்டுப்படுத்தப்படவேண்டுமாம்!!

புண்மீது ஈட்டிகள் புறப்பட்டவண்ணமே உள்ளன, நம்போன்றார் மீது.

பல நூல்களுக்குத் தடை! நமது கழகத்தோழர்கள் பலருக்குச் சிறை! அபராதம்!—இந்த வேதனை வளர்ந்து கொண்டேயுள்ளது சுயராஜ்ய ஆட்சியில். பண்டித நேரு, ஜனநாயகத்துக்குப் புது வியாக்யானம் தந்த அதே வாரத்தில், தூத்துக்குடித் தோழர், நம் இயக்க முன்னணியிலே நின்று பணியாற்றும் நண்பர் தங்கப்பழம் சிறைக்கு அனுப்பப்பட்டார்!



முன்னெல்லாம், சிறைக்கு செல்வோர், யார் யாரென்றால், அந்தப் பட்டியல் வேறாக இருக்கும்! இப்பொழுது சிறையே சிறப்படைந்து வருகிறது! ஏன் தெரியுமோ? இப்பொழுது சிறையில் கிடப்போர், கள்வர், கயவர், பொய்க் கையெழுத்திட்டவர், கொலைஞர், கொடூரத் தொழில்புரிவோரல்ல—நூல் எழுதுவோர், பொது மேடையில் பேசுவோர், மக்கள் பிணி தீர்ப்பவர், மக்கள் பணியாற்றுபவர், நாடகமாடுவோர், பாடல் பாடுவோர், புத்தகம் வெளியிட்டவர், அதற்கு சித்திரம் வரைந்தவர், இப்படியல்லவா இருக்கிறார்கள்! சிறைக்கு இது பெருமைதானே!

தோழர் சிறையில் இருக்கிறார். ஏன்? சவுக்கடி என்ற நூலை எழுதினார். அதற்காக அவர்மீது நீண்ட நாட்கள் வழக்கு நடந்தது. அவருக்கு ஒரு மாத சிறைவாசமும், ரூ. 200 அபராதமும் தண்டனையாக அளிக்கப்பட்டுள்ளது. அபராதமும் கட்டமுடியாதெனக் கூறி, தோழர் சிறை சென்றுவிட்டார்.

கட்டுப்பாடோடு இருக்கவேண்டுமென காரணம் சொல்லி, எழுத்தாளர்களையும், பேச்சாளர்களையும் 'கூண்டுக் கிளி'களாக்குவதுதான் சுயராஜ்யம்போலும்!

சாதாரண எழுத்துக்கள்—அவைகளுக்காகப் புதுப் புதுச் சட்டங்கள், சிறைவாசம், தண்டனை, புது வியாக்யானம்!

கொடுமை! கொடுமை!! மக்கள் சுதந்திரத்தை மண்ணாக்குகின்றனர், காங்கிரஸ் தலைவர்கள்.

எவ்வளவு நாட்களுக்கு நீடிக்கும் முடியும் இக்கொடுங்கோலாட்சி!

இந்த ஆட்சியில்தான் எழுத்தாளர்கள் சிறையில் கிடக்கிறார்கள்! அதுவும், ஆட்சியிலே உள்ளோர், தி. மு. க. என்றாலே அடக்குமுறைகளை வீசுகிறார்கள். வீசட்டும், கை ஓயும்வரை. ஆனால் நாம் ஓயமாட்டோம் என்று கூறிடுவதுபோல, தோழர் சிறைபுகுந்துவிட்டார்.

சிறையிலே, நம் இயக்க தங்கம்—சிங்கத்தை கூண்டிலே அடைத்துவிட்டு, அடக்குமுறை ஆர்ப்பரிக்கிறது! ஆனால், அதனால் அவர் உணர்ச்சி மங்கிடாது!—பொங்கிடத்தான் செய்யும்!

கொடுமையைத் தாங்கினார். அதனால் மங்காப் புகழ்பெற்றார் தங்கப்பழம்! அவர், ஆட்சி கோணல்களுக்குக் கொடுத்தார், சுளீர் சவுக்கடி! நாம் தருகிறோம், அவருக்கு நமது அரிய பாராட்டுதல்களை! வாழ்த்துகளை!

✲

திராவிட நாடு

ஞாயிறு] 10—6—51 [காஞ்சி

## காஷ்மீர் கதை

★

வாலு போச்சு டும், டும்
கத்தி வந்தது டும், டும்
கத்தி போச்சு டும், டும்
குல்லாய் வந்தது டும், டும்
குல்லாய் போச்சு டும், டும்
மேளம் வந்தது டும், டும்
அதுவும் போச்சே டும், டும்

குழந்தைகளுக் கென்று, குரங்குப் பாட்டொன்று, பாடுவதுண்டு! கத்தி விற்போனின் கத்தியை எடுத்துக்கொண்டதாம் குரங்கு—அதனால் வாலையறுத்துக் கொண்டதாம். கத்தியைக் காணாத அவன், குரங்கிடம், குல்லாயைக் கொடுத்துவிட்டு, கத்தியை வாங்கிப் போனானாம். அந்த வழியாக வந்த ஒரு, மேளக்காரன், குல்லாயை வாங்கிக் கொண்டு, மேளத்தைக் கொடுத்தானாம். மேளத்தைத் தட்டிக்கொண்டிருக்கையிலே அதுவும் கிழிந்துவிட்டதாம்!

இது குழந்தைக்குச் சொல்லும் குரங்குக் கதை! — இது போலவே, உலகத்திற்குச் சொல்லும் ஒரு கதையுண்டு. அது காஷ்மீர் கதை!

சென்ற மூன்றாண்டுகளாக அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கண்டால், குழந்தைகள் பாடும் பாட்டுத்தான் கவனத்திற்கு வருகிறது.

பிரிவினை போச்சு
காஷ்மீர் வந்தது டும், டும்.
சண்டை போச்சு
உலக கவுன்சில் வந்தது டும், டும்.
சர் டிக்ஸன் போனார்
கிரஹாம் வந்தார் டும், டும்.
எல்லாம் போச்சு
நிர்ணய சபை வந்தது டும், டும்.
இப்படிப் பாடவேண்டியதுதான் போலும், இனி!

பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, காஷ்மீர் தகராறு எவ்வளவு பெரிதாக்கப்பட்டுவிட்டது! பாதுகாப்பு கவுன்சில் வரை பிரச்சினையைக் கொண்டுபோய் விட்டார்கள்.

இந்தியப் படைகளும், பாகிஸ்தான் சேனையும் தாக்கிக் கொள்வதை நிறுத்தவே பாதுகாப்பு கவுன்சில் தான் முன்வரவேண்டி வந்துவிட்டது!

காஷ்மீர் களத்தில் இந்தியத் துருப்புகள் நடத்திய போருக்கு எவ்வளவு வெள்ளிப் பணங்களை அள்ளிவிட்டார்கள் தெரியுமா! அஹிம்சா வீரர்கள் ஆட்சிக்கு வந்ததுமே, காஷ்மீர் களத்திலே, தங்களின் 'அஹிம்சா!' கைவரிசையைக் காட்டினர்!

பாகிஸ்தான் போர் நிறுத்த உடன்படிக்கையை கவுன்சிலுக்குச் சமர்ப்பித்த பிறகு, பிரதமர் வெளிநாடு சென்றுள்ளார், இந்தியத் தலைவர்கள் இப்பொழுது இங்கில்லை என்றெல்லாம் கூறி பிறகே சமர்ப்பித்தனர்.

காஷ்மீர்பிரச்சினை வளர்ந்தபடியே இருந்தது. இந்தியா, பாகிஸ்தான் மீதும்,பாகிஸ்தான், இந்தியா மீதும் குறைகள் சொல்லிய வண்ணமே இருந்தன!

சர் ஓவன்டிக்ஸன் வந்தார். பார்த்தார், போனார் என்றே அவர் முயற்சியைப்பற்றிக் குறிப்பிடமுடியும்!

இப்பொழுது, கிரஹாம் என்பவரை, இந்தப்பிரச்சினை தீர்க்கும் மத்தியஸ்தராக நியமித்துள்ளனர்.

அதற்குள் காஷ்மீரில் அரசியல் நிர்ணயசபை கூட்ட முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இதனை இந்தியா ஆதரிக்கிறது. ஸ்ரீநகரில் பிரதமர் நேருவின் பேச்சு இதனை வலியுறுத்துகிறது.

பாகிஸ்தான் இதனை எதிர்க்கிறது. பாதுகாப்பு கவுன்சில் முன் இப்பிரச்சினையிருக்கும்பொழுது, அதன் தீர்மானத்திற்கு விரோதமான காரியத்திலே ஈடுபடுவது தகாது என்று பேசுகிறது.

இந்தக் காஷ்மீர் பிரச்சினையை, உண்மையில் இவர்களுக்குள்ளாகத் தீர்த்துக்கொண்டிருக்க வேண்டும். அதைவிடுத்து, பாதுகாப்பு கவுன்சில்வரை சென்று, மத்தியஸ்தம் தேடினர். தேடியபிறகு, அதற்கு எதிர்த்து சிக்கலை வளர்ப்பது வீரமுமல்ல—விவேகமுமல்ல! பிரச்சினையைப் பிறர் தலையிடும்படி ஆக்கிவிட்டு, பிறகு வீரம்பேசி, வினைவை விபரீதமாக்குவதால் யாருக்கு இலாபம்?

அப்பத்தைப் பங்கிட அடித்துக் கொண்ட பூனைகள், குரங்கிடம், சரிபங்கு போட்டுச்சொல்லி ஏமாந்தனவாம்—அதுவும் குழந்தைகளுக்குச் சொல்லும் குரங்கு கதைதான். அதுபோல, காஷ்மீர் விஷயத்தை, அங்கே கொண்டுபோய்விட்டனர்.

இப்பொழுது,பாகிஸ்தான்பக்கம், பாதுகாப்பு சபைஇருக்கிறது—ஆக்கிரமிப்புக்காரர்கள் அவர்கள், அவர்களுக்குப்பரிந்து பேசுகிறது, படையைக்கலைத்தது பெரிய காரியமல்ல, அது ஐக்கியநாட்டு சபையின் சமாதானதீர்மானத்தினால் நடந்தது ஒழிய, இந்தக் கவுன்சிலாலல்ல, என்றெல்லாம் இப்பொழுது பேசுவதைக் கேட்போர் சிரிப்பர்!

குரங்கு கையில் கடைசியில் கிடைத்தது மேளம். அதை வேகமாக அடித்து, கிழித்துவிட்டுக் கூறியதுபோல, கடைசியில் கிடைத்துள்ளது, அரசியல் நிர்ணயசபை! அதையும் முடித்துவிட்டு இப்படிப் பாடுவார்களோ!

நல்ல நிர்ணயசபை வந்தது
அதுவும் போச்சே டும்; டும்.

காஷ்மீர் பிரச்சினையை இப்படி வீம்பு பேசி, உலக நாடுகள் முன்பாக கேலி செய்யும் நிலைமைக்குக் கொண்டு போய்விட்டார்கள். கொண்டுபோன சீமான்கள், அதனை ஆண்டுக் கணக்கில் இப்படி இழுத்துக் கொண்டு போகாமல் முடித்துக்கொண்டிருக்க வேண்டும்.

இன்னமும், காஷ்மீர் கதையை நீட்டுவது கூடாது—ஆகாது!

பாகிஸ்தானாகட்டும், இந்தியாவாகட்டும்—காஷ்மீர் பற்றிய முடிவு வருவதற்கு எந்தவகையிலும் குறுக்கில் நின்றால், அவர்கள், நாட்டின் கேட்டிலே நாட்டங் கொண்டோர் என்றே உலக சமாதானத்திலே அக்கறை கொண்டுள்ளோர் கருதுவர்.

ஒவ்வொன்றாகப் போச்சே, போச்சே என்று கூறிக் கொண்டிருப்பது தவறு!

இந்தத் தவறுக்கு யார் காரணமானாலும் கண்டனத்திற் குரியவர்களே!

காஷ்மீர் கதையின் முடிவு விரைவில் காணவேண்டும். அதுதான் நாட்டு நலம் விரும்பிகளின் கோரிக்கை!

---



## ★ சிற்றெறும்பு! ★

—XXX—

எங்கு திரும்பினாலும் மலைகள்!—அங்குள்ள பசுந்தரைகளில் ஆடுகள் மேய்ந்திடும். இடையர்கள் பாடுவர்—கூத்தாடுவர்!

உயர்ந்து கம்பீரமாக இருக்கும் பல சிகரங்கள் அத்தேசத்திற்கு சிங்காரம் சேர்க்கும்!

நதிகள் பல சலசலவென ஓடும் சிந்து பாடும்.

ஓடும் நதிகளின் பெயர்களைக் கேட்டால், ஒப்பற்ற உயர்ந்த நதிகளின் பெயர்களாக இருக்கும். பண் பாடும் சிந்து இது, பிரளய கால வெள்ளம் புரளும் பிரம்மபுத்திரா அது!—வற்றாத ஹோவாங்ஹோ, யாங்டிஸிகியாங் அதோ என்பர். நதிகள் எழுப்பும் நாதம், செவிக்கினிய கீதமாகும்!

தண்ணீர் நிறைந்து, ததும்பி வழியும் ஏரிகள் பல, எழிலைக் கூட்டும். இயற்கையின் வனப்பிலே இன்னும் கொஞ்சம் சுவை சேர்க்கும்.

அங்குள்ளோர் ஆடு மேய்ப்பர், ஒட்டகம் ஓட்டுவர், எருதுகளை வளர்ப்பர்.

சிலர் பார்லி விதைத்து, அறுப்பர். சிலர் கம்பளி நெய்வர். சிலர் தங்கம் தோண்டுவர். உப்பு எடுப்பர். செம்பு, இரும்பு, வெள்ளிச் சுரங்கங்கள் உண்டு அங்கு.

வீட்டிற்கு வீடு, யாக் ஆடுகள், காஷ்மீர் ஆடுகள் தவறாமல் இருக்கும். அவைகளே வழிநடை வாகனம் அவர்களுக்கு!

திபேத் நாடு சின்னஞ் சிறிய நாடு, ஆனால் வண்ணம் மிகுந்த நாடு! வளம் நிறைந்த இடம் அது.

அங்கு வாழ்வோர் தொகை 20 இலட்சந்தான் என்றாலும், அவர்கள் வாழ்ந்த வாழ்வு சிறப்பு வாய்ந்தது.

திராவிடத்தைப் பெற நாம் காட்டும் காரணங்களுக்கு, மறுப்பு தருவதாக எண்ணிக்கொண்டு, திராவிடம் சிறு நாடு, அது எப்படித் தனித்திருக்க முடியும் என்கிறார்களே, அவர்கவே, கண்டிருந்த நாடு திபேத்.

நாம் நாலரைக் கோடி—அவர்கள் இருபது இலட்சம். தனி நாட்டிலே வாழ்ந்தனர்!

திபேத் வரலாறு, சீனாவின் தொடர்பு அன்று முதல் இன்று வரை எப்படி இருந்தும், குறுகியும் மாறி மாறிப் போனதைக் கூறும்.

கி. பி. 1908 வரை சீனர்களே, திபேத்தின் வெளிநாட்டு விவகாரங்களையும், படை வரிசைகளையும் காத்து வந்தனர்.

இதற்கிடையில் இந்தியாவிற்கும், திபேத்திற்கும் வியாபார ஒப்பந்தங்கள் நடந்ததுண்டு.

திபேத்தில் சீனத் தலைமையை, இங்கிலாந்தும் ஒப்புக் கொண்டுள்ளது.

கி. பி. 1911ல் சீனப் புரட்சி நடந்தபொழுது, திபேத்திலிருந்து சீனப் படைகள் வெளியேறின.

ஆனால் சீனாவின் நெஞ்சிலே, திபேத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை போகவே இல்லை என்பதை கி. பி. 1914ல் சிம்லாவில் கூடிய மூவர் மாநாட்டிலும் காட்டினர்.

அந்த ஆசை வளர்ந்தபடியே இருந்தது—மறைந்திடவில்லை.

சீனா, சிதப்பான பிறகும், திபேத் மீது, அதன் காதல் கண்கள் பாய்ந்தபடிதானிருந்தன. சென்ற ஆண்டு படை புறப்பட்டும், நினைத்த அளவு போகாமல் நிறுத்தப்பட்டது.

சீனாவுடன், திபேத் இணைந்துதானாக வேண்டும் என்று 'ஏக இந்தியா' பெற்றெடுத்த எம்பிரான்கள் செப்பிடவில்லை. அந்தச் சிறிய நாட்டுடன், வியாபார உடன்படிக்கை செய்து கொண்டிருந்தனர்.

உத்தரப் பிரதேசத்தின் கம்பள வியாபாரம், திபேத் சந்தையிலே தான் அதிக சிறப்படைந்துள்ளது. திபேத்தின் விளை பொருள்கள் எல்லாம் இந்தியாவுடன் நடத்தும் வணிகத்தால்தான் விலையாகின்றன—மதிப்படைகின்றன.

இந்தச் சின்னஞ் சிறுநாடு, சீனாவுடன் இணைந்துவிட்டது!

ஐக்கியத்திலே அக்கறை அதிகம் உள்ளதாகக் கூறும் இவர்கள், நேற்றுவரை, திபேத்திடம் பேரம் பேசிக் கிடந்தது மட்டுமல்ல, பிளவு சரியென்றே போதித்தனர்.

சீனா, இந்தியாவின்மீது சீறியது. திபேத் விஷயம், சீனாவின் உள்நாட்டு விஷயம். இதில் இந்தியா தலையிடுவது தகாது என்று பேசத்தான் செய்தது.

பிரிவினை விரும்பாத பாரதவீரர்கள், திபேத்தின் சுதந்திரம் பற்றிப் பேசினர்.

ஆனால், திடீரென பீக்கிங் ரேடியோ, திபேத் — சீன ஒப்பந்தம் முடிந்துவிட்டது என்று கூறிற்று.

திகைத்தனர் சிலர் — திடுக்கிட்டனர் சிலர்.

சீனாவின் ஜாலம், திபேத்திடம் செல்லாது என எண்ணிக்கிடந்தோர் திகைத்தனர். பொதுவுடைமைக்கு மற்றுமொரு அடி அதிக இடம் என்றவுடன் சிலர் திடுக்கிடத்தான் செய்தனர்!

ஒப்பந்தப்படி, திபேத் தன் சுதந்திரத்தை இழந்துவிட்டது என்று பேசுகின்றனர். இருக்கட்டும். ஆனால் இவர்கள், திராவிடத்தை, தேய்த்திடுகிறார்களே, அதனை ஏன் மறக்கவேண்டும்?

சீன மத்திய ஆட்சியிலே, திபேத், மாகாண ஆட்சி நிலைக்குப் போய்விட்டது.

திபேத்திலே, சீனப் பட்டாளம் இருக்கும். சீன ஆளுங் கமிஷனே தலைமை வகிக்கும். சீனப் பட்டாளத் தலைநகரமாக திபேத்திருக்கும்.

தலைலாமாவுக்கும், தஞ்சன் லாமாவுக்கும் பழைய கௌரவம் இருக்கும்—அதிகாரம் இல்லை!

சீன ஒப்பந்தப்படி திபேத் இப்படி உரிமையிழந்துவிட்டது என்று கூறுகின்றனர் அவர்கள். ஆனால் திராவிடம், வடவருக்கு, மண்டியிட்டுக் கிடக்கும் நிலை தெரியவில்லை!

* * *

அகண்ட வானத்திலே, தடங்கல் எதும் இல்லாமல் பறந்து திரிந்த கிளியைப் பிடித்துக் கூண்டிலே அடைத்து, அதற்கு பழம் கொடுத்து, 'அக்கா சொல்லு' என்று அருமையாகக் கொஞ்சினாலும், கிளி கூண்டைத்தான் நோக்கும், அது தங்கமே யானாலும்!

திபேத், கூண்டுக் கிளியாகிவிட்ட தென்று கூடக் கூறவில்லை.

திபேத், சிற்றெறும்பு—சீனு, அதனை நசுக்கிடும், அரக்கன்!

இப்படிக் கூறுவோர், அந்த 'ஏக இந்தியா' கூட்டத்திலே இருக்கிறார்கள், 'காங்கிரஸ்'த்தார் போன்றவர்கள்!

சிற்றெறும்பு, தனித்து வாழ்ந்தது. அதுவும் நெடுங்காலமாக சுதந்திரமாக இருந்தது. தனி நாடு, ஆட்சி, நிர்வாகம் எல்லாம், பிறர் தலையீடின்றி நடந்து வந்தன.

சிற்றெறும்பு, சிம்மாசனம் ஏறியிருக்கிறது.

சிற்றெறும்பு, யானை போன்ற இந்தியாவுடன் ஒப்பந்தம் பேசியிருக்கிறது.

சிற்றெறும்பு, சிங்க சீனுவுக்கு அடங்காமல் இருந்திருக்கிறது.

சிற்றெறும்பு தனித்து வாழ்வதை ஆதரித்து விட்டு, துள்ளித் திரிந்திட்ட மானைப்போன்ற திராவிடத்தை மதங்கொண்ட யானையின் பக்கத்திலே நிறுத்தக் சொல்கிறார்கள்.

சிற்றெறும்புக்கு, பரிகம் பாடுகிறார்கள். மானுக்குமட்டும் எதிர்ப்பு காட்டுகிறார்கள்!

சீனுவுடன், திபேத் சேர்ந்ததால், சுதந்திரம் பறந்துவிட்டது என்கிறார்கள். வடநாட்டுடன், திராவிடம் இணைந்து கிடப்பதால், உரிமை பறிபோவதை, வாழ்வு பாழாவதை அவர்கள் ஏனே அறியாதவர்கள் போல்ப் பேசுகிறார்கள்.

சிற்றெறும்புதானே, அது எப்படித் தனித்திருக்க முடியும் என்று பேசவில்லை.

அந்தச் சிற்றெறும்பின் வல்லமை வரலாறு அவர்களுக்குத் தெரியும், அந்தச் சிற்றெறும்பு கையிலே உள்ள பாதைகள் பழைய சில்க் பாதை, சின்னிங்—லாஸா, லாடக் பாதை, லாஸா —கேங்டார்பாதை இன்னும் சில உண்டு. இவைகளில் ஆதிக்கம் உள்ளோரோ மத்திய ஆசியாவிலே வணிக மன்னர்களாக இருப்பார்கள்.

சிற்றெறும்பு சிறிடும் சிறுத்தை யானது தெரியும் அவர்களுக்கு!

இந்தச் சிற்றெறும்புதான், இந்தியாவின் எல்லையிலே உள்ளது. சீனுவுடன் அது சேர்ந்துவிட்டால், தொல்லை வந்து சேர்ந்துவிடுமோ என்று தினமும் யானை அஞ்சிடச் செய்வீது!

சிற்றெறும்பு, சிறியதானுலும், யானையின் காதுகளில் புகுந்து விட்டால், யானையின் கதி அதோகதியாகிவிடும்!

ஆகவே. சிற்றெறும்பு என்றுலும், அதன் வாழ்விலேயும் இனிமை வேண்டும், சுதந்திரம் வேண்டும், உரிமை வேண்டும் என்று பேசத் தெரிந்தவர்களுக்கு, மானைப்பற்றி மட்டும் மந்த புத்தி காட்டுகின்றனர்.

மானைப்பற்றிப் பாடாத புலவனில்லை—கவிஞனில்லை. மங்கைமார் கண்களிலே, அவர்தம் அச்ச நடையிலே, மானைக் கண்டனர். அது போல திராவிடத்தின் சிறப்பைப் பேசுவர். தமிழின் பழமையைப் புகழ்வர். இலக்கிய வளத்தை, இலக்கணச் செழிப்பை, காவிய நயத்தை, ஓவிய நுட்பத்தையெல்லாம் புகழ்வர்.

வளமான வயல்களை, வற்றாத ஆறுகளை, தென்றல் நடனமாடும் சோலைகளை, மக்கள் மகிழ்வுநடை பழகும் சாலைகளையெல்லாம் ஏற்றிப் பேசுவர்.

ஆனால் திராவிடம் தனித்திருக்க வேண்டும் என்று கூறத் துணிவதில்லை.

சிற்றெறும்பை விடவா, திராவிடம் சீரிழந்தது?

திபேத் தனித்திருப்பது சரியென்று பேசிய காதானு, திராவிடத்தை, வடநாட்டுடன் பிணைந்து கிட என்று கூசாமல் கூறுகிறது?

திபேத்தின் சரித்திரம் படித்தவர்கள், திராவிடத்தின் வரலாற்றைப்படிக்க வில்லையா? திராவிடம் வாழ்ந்த வகை தெரியாதா? வீழ்ந்த விவரம் புரியாதா? ஏன், பின் இந்த இருள்மதிப்பேச்சு, இங்குமட்டும்!

சிற்றெறும்பை அடக்கிவிட்டது சீனு. ஏனெனில் அது அரக்க பலம் கொண்டுள்ளது!

திராவிடத்தை, அன்று ஆங்கிலேயர் இணைத்ததும், அவர்கள் விடுத்துச் சென்ற பிறகும், வடநாடு நம்மை பிணைத்தும் வைத்திருக்கிறார்களே! இது இவர்களின் கண்களுக்குத் தெரியவில்லையா?

சீனு அரக்கனென்றுல், இந்தியா என்னவாம்?

திபேத், சீனுவுடன் சேர்க்கப் பட்டதால், வாழ்விழந்தது என்று பேசுவோர், திராவிடம், வடநாட்டுடன் இணைந்துக் கிடப்பதால் சோகத்தைத் தோழனுகக் கொண்டுள்ளது என்று ஏன் சொல்லக் கூடாது? திராவிட நாடு தனித்தியங்கப் பாடுபடக் கூடாது?

சேரனும், சோழனும், பாண்டியனும் ஆண்ட மண்ணிலே, பனியா பவனி வருகிற கோரக் காட்சியை ஏன் சகித்துக் கொள்ளவேண்டும்? இந்த அறப்பணியை நாம் மட்டும் மேற்கொண்டுள்ளதால் காலங் கழிகிறது. அவர்கள், உண்மைச் சுதந்திரத்தின் இலக்கணம் உணர்ந்திருந்தால் பிரிவினைப்போரின் முன்வரிசையிலே வந்திடத்தான் வேண்டும்.

ஏன்? அவர்கள் வாழ்வது திராவிடத்தில்—திபேத்திலல்ல!

சிற்றெறும்பு கூட வாழ்ந்திருக்கிறது—சீரரும் திராவிட நல் திருநாட்டை மட்டும் வாழ்விக்க அவர்கள் வரக்கூடாதா?

சிற்றெறும்புக்கு சிந்து பாடுவோர், மானுக்கு மரணகீதம் இசைக்கலாமா?

திபேத் தனித்திருப்பதால் சுதந்திரத்தோடிருந்தது, இணைத்ததால் அதனை இழந்தது என்போர், திராவிடத்திற்கும், இதே விளக்கத்தைப் பொருத்திப் பார்க்கட்டும்—நாமும், பொறுத்திருந்து பார்க்கிறோம், அதன் விளைவை! ✻


## புதிய வெளியீடுகள்!

சேரன்

| | |
|---|---|
| ரூபமஞ்சரி | 0 6 0 |
| வஞ்சி | 0 8 0 |

டி. கே. மூர்த்தி

| | |
|---|---|
| கமலினி | 0 4 0 |
| என் சபதம் | 0 4 0 |

கன்னியா? விதவையா? (அச்சில்)
கன்னியின் கண்ணீர் (அச்சில்)


மு. த. வேலாயுதனுர்

| | |
|---|---|
| வள்ளுவர் கண்ட நாடு | 0 12 0 |

(புரட்சிக் கவிஞர் முன்னுரையுடன்)

சரோஜினி பதிப்பகம்,
புதுச்சேரி.



தொடர் கதை

# யாத்திரை

தில்லை-வில்லாளன்.

## 2

லீலாவுக்கு

### மங்கை

[ஓடிய கதை:— சுந்தரம், தன் காதலி பத்மாவுக்கு தன் உள்ளத்தில் புதைந்துகிடந்த எண்ணங்களை எடுத்துச் சொல்லி வருகிறுன். பத்மா, அன்றொருநாள், அவன் எழுதிய 'அவள்' நாடகத்திற்கு வந்திருந்தாள். அந் நாடகத்தைப்பற்றி விளக்குகிறுன். அவன் காதலால் துடித்த துடிப்புகளைப் படம் பிடிக்கிறுன், பத்மாவின் கடிதம் அவனை ஏமாற்றத்தில் ஆழ்த்தி விடுகிறது, சுந்தரத்தின் இழந்தகாதல் முடிகிறது]

மடல் கண்டேன். கடல் அலை போல எண்ணங்கள் புரண்டோடுவதைப் பார்த்தேன். சின்னஞ் சிறு வயதில் என் தாய் ஒரு கதை சொல்வாள்.—பெரிய அலை காதலனும், அதை விரட்டி வருகிற சிறிய அலை காதலியாம்! ஒரு அரச குடும்பத்திலே நடந்த துயர சம்பவம்தான் அவர்கள் ஒன்றையொன்று விரட்டிக் கொண்டிருப்பதற்குக் காரணமாம்... இப்படிச் சொல்வாள் வாயில் வந்தபடி யெல்லாம்! அப்படித்தானடி லீலா, உனது எண்ணங்கள் ஒன்றையொன்று எட்டிப் பிடிக்க முயற்சி செய்து முடியாமல் தவிக்கின்றன.

உனது தமக்கையின் திருமணம் வெகு சிறப்பாய் நடந்திருக்கும் என்றே எண்ணுகிறேன். பத்மாவை நான் நேரில் பார்த்திராவிட்டாலும் உன்னைக் கொண்டே அவளை உருவகம் செய்துவிட்டேன். அவள் அன்புச் சித்திரமாகத் தானிருப்பாள்... இது என் திடமுடிவு—என் வாழ்த்துத் தந்தி கிடைத்திருக்குமே! உன் அக்காள் படித்திருப்பாள் என்றே எண்ணுகிறேன். ஜோடிப் புறுக்களே, இன்ப வானில் பறந்திடுக...என்று தமிழிலேயே எழுதியிருந்த இந்த வாக்கியத்தைப் படித்ததுமே சிரித்திருப்பாளே...என்ன லீலா, உன் தோழி 'படுசுட்டி'ப் பெண்போல இருக்கிறுள்...என்று கோபமும் குறுஞ் சிரிப்பும் கலந்து தொனிக்கப் பேசியிருப்பாளே!

உனது அத்தான் பார்த்தபின் எப்படியடி இருக்கிறுர்...ஆள் 'வாட்டசாட்டமாக' 'ஆஜானுபாகுவாய்'... சிரித்துவிடாதே, லீலா, முழுவதும் சொல்லிவிடுகிறேன் பிறகு விழுந்து விழுந்து சிரிக்கலாம்! 'கண்டவுடன் ஆசைகொள்ளும் மீசையுள்ள ஆம்புளையா' அவர்? அல்லது 'தேள் வால் போல மீசையும், சந்தன பொட்டும், 'தளாக்கு தலையும்' கொண்ட அழகு மன்மத பூபதியா? வாத்து நடையழகும், வண்ணுன் கால் போல வயிறும், பனங்காய்த் தலையும், நரிப் பற்களும்........ அப்படியா? அல்லது 'கோட்டு, சூட்டு மாட்டி, கோணக் காதுக்கு பூட்டு போட்டு குருட்டுக் கண்ணுக்கு கண்ணுடியைப் போட்டு, முகத்திற்கு 'ஸ்னே வாஷிங்' கொடுத்து, 'குட்டிக்கோரா கோட்டிங்' தீட்டி, காலரை நீட்டிவிட்டுக் கிட்டு புகையும் சிகரெட்டை கையிலே பிடித்துகிட்டு' வருகிற நவ நாகரீக வாலிபர்...இந்த சென்ஜரியூத்தா...லீலா...அதைச்சொல்லி விடு முதலில்! அவர் வக்கீல் வேலைக்குப் படிக்கிறுர் என்று சொன்னுயே......அந்த வேலைக்குத் தகுந்த 'வாய் இருக்கிறதா......உன்னைக் கண்டால் கேலியாலே மடக்கி, மிண்டலாலே திருப்பி, வம்படிப்பிலே இழுத்து, 'லாட்டா' செய்கிறுரா? அல்லது வாய் செத்த ஜீவன் தானே?

லீலா, உனது அத்தானும், அக்காளும் முதன் முதல் சந்தித்த பொழுது என்ன பேசிக்கொண்டார்களாம்...கேட்டாயா நீ, அல்லது அவளாகவாவது உன்னிடம் சொன்னுளா? மறைக்காமல் என்னிடம் சொல்லிவிடவேண்டும்.

உனது தாயும் தந்தையும் இந்த திருமணத்தைக் கண்டு பூரித்த வெள்ளத்தில் மூழ்கியிருப்பார்கள். ...பெண்ணைப் பெற்றவர்களுக்கல்லவா தெரியும், அந்தப் பெருமைப்பு மாற்றும் திரு நாளில் உள்ள மகத்துவம்! உனக்கு'. எனக்கும் என்ன தெரியும்...ஒரு பெண்ணை பெற்று வளர்த்து அவளைத் தக்கதோரிடத்தில் 'தள்ளிவிட' தவிக்கும் தந்தையின் உள்ளத்தில் ஒவ்வொரு நாளும் நடக்கிற போராட்டம்...... தாயின் மனதிலே ஓடிடும் சஞ்சல ஆற்றின் வேகம்...அனுபவந்தானடி. அதன் உண்மையை நமக்கு உள்ள படிச் சொல்லும்!

நான்தான் திருமணத்தை நேரில் காணும் பாக்கியம் பெறவில்லை. திருமணத்திற்கு யார் யார் வந்திருந்தார்கள்? என்னென்ன பேசினுர்கள்? திருமண வீடு ஒரு வானொலி நிலையம் போல....அங்கே கிராம நிகழ்ச்சி உண்டு, கதா காலட்சேபம் இருக்கும், செய்திகள் பகுதிக்கும் விலக்கில்லை இன்னும் பலவகை. அங்கே இடம் பெறும்! இவைகளை இரசிக்க உனக்கு நேரமிருந்ததா? பம்பரம் போல சுற்றி வந்த விருந்தினர்களை உபசரிப்பதிலே தான் கழிந்து போயிருக்கும்.

லீலா, இனிமேல்தான் உனது மடலுக்குள் நேரடியாக நுழையப் போகிறேன். நான் கேட்டிருக்கிற கேள்விகளுக்கு விளக்கமான, விரிவான விடைகளைத் தாங்கியிருக்கும் அந்த மடல் என்று பிரித்தேன்.... படித்தேன்.... பிரமித்துவிட்டேன்! பத்திரிக்கை நிலயத்திற்கு அனுப்ப எழுதிய கதையை எனக்குத் தவறி அனுப்பிவிட்டாயோ என்றுகூட முதலில் சந்தேகித்தேன். பிறகு உண்மையிலேயே எனக்கு எழுதியதுதான் என்று புரிந்துகொண்டேன். மீண்டும், மீண்டும் துருவித் துருவி, நினைத்து, நினைத்து படித்தேன். மனம் பூரித்தேன்.

திருமணத்திலே என்னடி சிறப்பு ......திருமணம் என்றுல்தான் என்ன.........இப்படித் தொடங்கி

என்னை பொய்ச்சிந்தனைச் சுழலில் சிக்கிவிட்டுவிட்டாய். அகண்டவிரி காவரிபோல நீண்ட பெரிய பந்தலும், அதில் வெளிச்சம் போடும் வித விதமான வர்ண விளக்குகளும், காதைச் செவிடாக்கும் இரட்டை முடி இருளப்ப சகோதரர்களின் நாதசுவரமும், தவுல் தனகோபாலனின் 'கும் கும்' முழக்கமும், வாசல் அலங்காரமும், வகை வகையான பண்டங்களின் குவியலும், சுவையான விருந்தும், சுற்றத்தாரின் கூட்டமும், நண்பர்களின் வருகையும்........மட்டும் போதுமா, ஒரு திருமணத்தின் முழுஉருவை உண்டாக்க?...கேட்டிருக்கிறாய் கேள்வி வடிவிலே! ஆம் லீலா, ஏதோ ஒரு குறை இருக்கத்தான் செய்கிறது. அது என்னவென்று சராசரி அறிவு படைத்த காத்தானும் குப்பனும் கூட சொல்லிவிடுவார்கள். திருமணத்தின் முக்கிய உயிர்ப்பகுதி வேறொன்று இருக்கிறது. தமிழ்நாட்டு உணவில் அரிசி தலைமை வகிக்கிறது—பிற கறிவகைகள் இருபத்தியொன்று எண்ணி வைத்திருந்தாலும்! அரிசி உணவு படைக்கப்படவில்லையானால் இலை சோபிதமிழந்துவிடுகிறது. விருந்தின் பூரணத்துவத்தில் குறை வந்துவிடுகிறது. அதுபோலத்தான் திருமணம். அங்கு தலைமை வகிக்கவேண்டிய நிகழ்ச்சி என்ன? அதுதான் இன்று தாயகத்திலே தள்ளிவைக்கப்பட்டுக்கிடக்கிறது. மணந்து கொள்ளும் இருஇளம் இருதயங்களின் ஒற்றுமை — உவகை—ஒட்டுத் தீர்மானம்!

லீலா, உலகத்தில் காதலும், கடமையும் போட்டியிட்டு ஒன்றையொன்று அடித்துக் கொண்டு சாகின்றன என்கிறாய். உண்மையாக இருக்கலாம் — உன் அக்காளின் அனுபவத்திலே! ஆனால் என் அனுபவம் வேறொரு உண்மையை அல்லவா சொல்கிறது. இருக்கட்டும். உன்வாக்கை அடிப்படையாக வைத்தே ஆராய்ச்சி செய்வோம். காதலும் கடமையும், பத்மாவின் வாழ்விலே எப்படிப்புகுந்து என்ன பெரிய புரட்சியை, தலைகீழ் மாற்றத்தை செய்துவிட்டன? பத்மா சுந்தரைக் காதலித்தாள். பெற்றோர்கள் பார்த்திபனை மணக்கச் சொன்னார்கள். காதல் வெற்றியடையவேண்டுமானால், பத்மா சுந்தரை மணந்திருக்கவேண்டும். கடமைக்கு அதிக அளவு மதிப்பளிப்பதானால் பார்த்திபனைத்தான் மணக்கவேண்டும். பத்மா கடமைக்கு அடிமையாகி, காதலுக்குப் பணியவில்லை. இப்படி இருக்கிறது உன் கடிதத்திலே நடமிடும் சோகந்ததும்பும் காதல் கதையின் முற்பகுதி! என்னால் இதை ஒப்புக்கொள்ள முடியவில்லை.

பெற்றோரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பது கடமையிலே தலைமையானது! ஆனால் தனது இதயத்தின் அடிவாரத்திலிருந்து எழும் உணர்ச்சியைத் தட்டிக் கழிப்பது கடமை வழுவல்மட்டுமல்லவே, துரோகம், சொல்லப்போனால் இதுவரை எவனும் செய்யாத — ஜூடாசும், தேவதத்தனும் செய்ததைவிடப் பன்மடங்கு அதிகமான துரோகம், என்பேன். இந்த மணக்கோலத்தைவிட, பிணக்கோலம் ஏற்றிருந்தால்கூட உன்வார்த்தைப்படி பாராட்டிவிடலாம்.

கடமை யென்பது ஒரு வர்ணக் கோடிட்ட பந்து. அதிலே எந்த நிறக் கோட்டையும் முதலாவதாக வைத்து எண்ணலாம். கடமை என்பதன் பட்டியலில் இடம் பெறும் ஆணைகளில் எதை யெதை எங்கெங்கு நிறுத்திவைப்பது என்று யார், எப்பொழுது, எப்படிச் சொல்லியிருக்கிறார்கள்? என்னிடம் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றிருக்கிறது. தாய்க்கு கண் நோய்; அதற்கு மருந்து வாங்குவதா? தந்தைக்கு உடுத்திக்கொள்ள வேட்டியில்லை; அதைப் பெறலாமா அந்தப் பணத்திற்கு? மனைவிக்கு முக அலங்காரம் செய்ய, 'குட்டிக்கோரா' பவுடர் இல்லை; அதற்காகச் செலவிடலாமா? குழந்தைக்கு 'கிரைப் வாட்டர்' வாங்கித் தரலாமா? பள்ளியிலே படிக்கும் தம்பிக்கு சம்பளம் கட்டலாமா? அல்லது வீட்டுவரிக்கு எட்டுமுறை நடந்துவிட்டு எரிந்து விழும் 'பில் கலெக்டர்' பிரம நாயகத்திற்கு கொடுத்தழலாமா? இப்பொழுது சொல்லடியம்மா, கடமையிலே எதை முந்த விடுவது என்று ......கடமை யென்பது ஏட்டிலே எழுதி விட்டதைப் படித்துவிட்டு அதன்படி நடப்பது என்றால் இயற்கை விதியை நாம் மீறுகிறோம் என்று அர்த்தம்.

கடமை காலமும், இடமும் முன்னின்று நடத்துவிக்கும் ஒரு மனித அசைவு......சம்பவக் கூத்து...... நிகழ்ச்சி நாடகம்! பத்மா அழும் தாயின் கண்ணீரினால் மட்டும் விதிமுறைப் புத்தகத்தை எழுதிவிட்டாள். உரக்கப் பேசிடும் தந்தையின் வார்த்தைகளைக் கொண்டே நிரப்பிவிட்டாள். ஆனால் தேம்பும் சுந்தர் என்ன ஆவது? பத்மா சிந்திக்கவில்லை. பார்த்திபனை மணந்தது கடமையின் கட்டளையானால், சுந்தரைத் தவிக்கவிட்டதும் கடமைதானா? அப்படியானால் ஒரு கடமையை நிறைவேற்றிவிட்டு, இன்னொரு கடமையை கைநழுவ விடலாமா? கடமைகளிலே பல வகைகள் உண்டா? பணக்கார நடராசா ஆலயத்தில் தினமும் ஆறுகால பூசை, நறு நெய் வழிந்தோடும் சர்க்கரைப் பொங்கலும், ஜாலியான தேன்குழலும், வாய் மணக்கும் ஆனையடி வடையும் படையல்— ஏழைப் பிள்ளையாருக்கு நினைந்துக் கொண்டால் கால்படி கடலை சுண்டல்......இதுபோலத்தானா கடமையிலே ஒன்றுக்கு அதிக மதிப்பு, பிறிதொன்றிற்கு உதாசீனம்! ஒரு கடமை நிறைவேற்றம் இன்னொரு கடமைக்கு எப்படித் தடைகல்லாக அமையலாம்? சுந்தரை ஏக்கப் படுகுழியில் தள்ளியது நெஞ்சறிந்த நம்பிக்கைத் துரோகமல்லவா? நினைத்துப் பார், லீலா.

(தொடரும்)



விலை ரூ 1—8—0
திராவிடப் பண்ணை,
தெப்பக்குளம், திருச்சி.



# முன்ஷிசம்!

முன்ஷி, மந்திரியானார்! — அவர் மந்திரியானதிலிருந்து மகானாக மகா பாடுபடுகிறார் போலும்! ஏனெனில் மனிதர்கள் செய்கிற காரியங்களை அவர் செய்வதில்லை.

அவர் உணவு மந்திரி — அவர் வந்த பிறகுதான் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது!

அவர், இந்த மந்திரி பதவி ஏற்கப் போகும்பொழுது ஏதேதோ கூறினார். ஆனால் போனபிறகு அவர் செய்தவைகளை எண்ணிப் பார்த்தால் சிரிப்பீர்கள் — அழுவீர்கள், பிறகு!

அவரை, மக்களை வாழ்விக்க மந்திரியாக அனுப்பினர்.

அவர் மக்களை, மறந்துவிட்டார்— மரங்களை நம்பினார்.

மரங்களை வளர்க்க திட்டம் தந்தார். வன மகோற்சவம் நடத்த, ஏழைகளின் வரிப்பணத்தை வாரியிறைத்தார்.

ஆனால், வைத்த மரங்கள் துளிர்க்கவில்லை. ஐந்தில் ஒரு பாகமே வளர்ந்தது!

இந்த மர வேலையில் ஏன் மந்திரி ஈடுபட்டார் என்றால், மழையை வரவழைக்க அவர் கண்ட புதிய மார்க்கம் இது.

நீர் நிலைகளைக் கண்டு பிடிக்க, ஜலமகாராஜாவை அவர் நம்பினார்!

மக்கள் உணவில்லையே என்ற பொழுது, கனிகளைச் சாப்பிடுங்கள், காய்கறிகளையே புசியுங்கள் என்று போதித்தார்.

தினந்தினம் பட்டினியால் பசியால் மக்கள்மடிந்திட்டனர். மந்திரி, சாவுக்குக் காரணம் தேடும் வேலையிலீடுபட்டார்.

புன்னைக்காய், புளியங்கொட்டையைப் புசித்தனர் மக்கள். கத்தாழையை, வேறு பல இலைகளை, தழைகளை, கிழங்குகளைத் தின்றனர். அதனால் புதுவித நோய்கள் ஏற்பட்டு மடிந்தனர். மந்திரியார் மனங்கலங்கவில்லை.

பிள்ளையை விற்றிடும் அளவு, வேதனை வளர்ந்தது. நம் கனமோ, மனத்திடம் கரைந்திடாதிருந்தார்.

முன்ஷியின் போக்கே அப்படியாகி விட்டது!

ஒவ்வொருவர் ஒவ்வொரு தத்துவத் தலைவராகி விடுவதில்லையா?

கார்ல்மார்க்ஸ் தத்துவங்களுக்கு மார்க்ஸிஸம் என்று கூறுகிறோமல்லவா?

லெனின் பாதையை, லெனினிசம் என்பது வழக்கத்தில் வருவதுதானே?

கம்யூனிசம், சோஷலிசம் என்றெல்லாம் கூறுகிறோமல்லவா?

அதுபோலவே, முன்ஷிசம். ஆரம்பமாகிவிட்டது!

அவர் விசித்திர வேலைகளில் ஈடுபடுவார். விபரீத விளைவுகளை அறுவடை செய்வார்.

மக்களுக்கு மந்திரியாகச் சொன்னால், மரங்களுக்கு மந்திரியாவார்!

பஞ்சத்தைப் போக்கு என்றால் பழங்கதை பேசிடுவார்.

மழை வேண்டுமென்றால், மகானைத் தேடுவார்.

இதுமட்டுமா? இன்னும் எத்தனையோ விசித்திரங்கள் உண்டு.

பார்லிமெண்டில் தெரியாததை, தெரிந்ததுபோலப் பேசுவார்.

பீஹாரைப்போல, சென்னையையும் கருதி அதிக உதவி தேவையென்று சென்னையிலிருந்து விண்ணப்பம் வந்ததா என்றால் இல்லையென்பார்.

ஆனால், சென்னை உணவு மந்திரி ரோச்விக்டோரியாவோ, தாம் அம்மாதிரி அனுப்பிய விண்ணப்பத்திற்கு, அவர் அளித்த பதிலைச் சொல்கிறார்.

சென்னையில் உணவு நிலைமை திருப்திகரமாகத் தானிருக்கிறது என்பார்.

அடுத்த அறிக்கையில், சென்னைப் பிரதமர், அவர் பேச்சுக்கு மறுப்பு தருவார்.

அதுபற்றிய கவலை அவருக்கில்லை! தாம் மத்திய சர்க்கார் மந்திரியாயிற்றே, மறுப்பு தருபவர், ஒரு ராஜ்ய சர்க்காரின் மந்திரியாயிற்றே, தான் சொன்னவைகளை அவர் மறுக்கலாமா, அவர் மறுக்கக்கூடியவைகளை தாம் வெளியிடுவது சரியா என்றெல்லாம் அவருக்கு சிந்திக்க நேரமுமில்லை—உணர்ச்சியும் இல்லை!

அவர், தனக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்பின் தரமறிந்தவராகவே நடந்து கொள்வதில்லை.

பீஹாரில் ஏழைகளின் துயரம் வளர்ந்து விட்டதைப் பற்றிப் பேசும் பொழுது, ஏழைகள் வாடுவது உண்மைதான், ஆனால் எவரும் புல்லைத் தின்னவில்லைஎன்கிறார்.

புல்லைத் தின்னவில்லை! மந்திரி கூறுகிறார். புல்லைத் தின்கிறார்கள் என்று மக்கள் பேசி, மந்திரி மறுக்க வேண்டிய நிலை பிறந்திருக்கிறது என்பதை அவர் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். அவருக்கு அந்த பயங்கர நிலையே புரியவில்லை.

கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டைக் காட்டிலும், கடும் புலி வாழும் காடு நன்றே என்று பாடும் மக்கள் எங்கும் காடு தேடி ஓடாமல், காடு உண்டாக்க கனம் காட்டிய உற்சாகம், உணவு தேடிடும் முயற்சியிலே இல்லை!

மக்கள் மந்திரி அவர்—ஆனால் மரங்களின் பிரதானியாகிறார்! இப்பொழுதோ மாடுகளின் அமைச்சராகப் போகிறார்!

மக்கள்
மரங்கள்
மாடுகள்

அவர் போக்கைக் கண்டு சிரித்துவிடாதீர்கள்! அதுதான் முன்ஷிசத்தின் மகத்துவம்!

அதிலே அடங்கியுள்ள தத்துவம், சாமான்யர்களுக்குப் புரியாது!

உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள் என்ற திட்டத்தின் பேரால், பணத்தைப் பாழாக்கின கதை நாடறிந்ததே!

உணவு பெருகவில்லை — பஞ்சம் பெருகிற்று — பட்டினிச் சாவுகள் மலிந்தன!

அதற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து இருபது இலட்சம் கோ சம்ரட்சணம் செய்ய ஒரு திட்டம் வகுக்கப்பட்டு அதை சட்டமாக்கப் போகிறார் நமது கனம்!

மக்களுக்கு வாழ்வளிக்காவிட்டாலும், மாடுகளுக்காவது, அவரால் நன்மை கிடைத்தால் நல்லது!

இப்பொழுது முன்ஷிசத்தின் உண்மைத் தத்துவத்தைப் புரிந்து கொள்ளுங்கள். நாட்டை முதலில் காடாக்கி விட்டால் அங்கே இருக்க வேண்டியவர்கள் மனிதர்களா? இல்லை விலங்கினங்கள். ஆகவே மந்திரியார், கோ சம்ரட்சணத்திலே இறங்கிவிட்டார்.

ஆகவே முன்ஷிசத்தின் மகத்துவத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.

முன்ஷி வாழ்க!
முன்ஷிசம் ஓங்குக!!

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொரு ராஜ்யத்திலும் அபிவிருத்தி திட்டங்கள் தயாரானதும் கிராம ரோடு அபிவிருத்தி திட்டங்களுக்காக ராஜ்ய சர்க்கார்களுக்கு மான்யம் தரப்படுமாம்.

ஒரு பாதை போட ஆகும் செலவைக் கணக்கெடுத்து, மூன்றாகப் பிரிப்பார்களாம்.

ஒரு பகுதியை மத்திய சர்க்காரும், மற்றொரு பகுதியை, ராஜ்ய சர்க்காரும் தந்துவிடுவார்களாம். மற்ற பகுதியை கிராமத்தாரே தர வேண்டுமாம்.

எப்படி நம்மாள்வார்களின் திட்டம்! அவர்கள் கொடுப்பதாக வாக்களிப்பது, ஏதோ குபேர புரிக்கு படையெடுத்துச் சென்று கொண்டு வந்த யுத்த காணிக்கையல்ல—ஏழை, எளியோர் அளித்த வரியினுல் கிடைத்த வெள்ளிப் பணம்! அவர்கள் கொடுக்கிறார்கள் என்றால், மக்கள் கொடுக்கிறார்கள் என்று அர்த்தம். அதை விடுத்து மீண்டும் மக்களிடம் பிச்சை கேட்பதென்றால் வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

இவர்கள் வரியே வாங்காத பரம்பரை பாராள்வோரா? ஜனவரி, பிப்ரவரி தவிர, பிற வரிகள் எல்லாம் வாங்கிவிட்டார்கள்! இந்தக் குணசீலர்கள் இன்னமும் கிராம மக்களிடம் பணம் கேட்கிறார்கள்!

கிராமவாசிகளின் ஒத்துழைப் போடே, இந்த வேலை நடைபெறுகிறது என்று காட்ட இது நல்ல ஏற்பாடாம்!

எந்த கிராமத்து மக்களும், வரி கொடா இயக்கம் நடத்திக்கொண்டிருக்கவில்லை. கொட்டிக் கொடுத்து விட்டு குமுறிக் கொண்டிருக்கிறார்கள்!

இங்கிலாந்தில் கார் நிறுத்துமிடம் கட்ட செலவிட திட்டமிட்டு, கட்டப்படுகிற இடத்திலுள்ளோரிடம் தட்டேந்தி நிற்கவில்லை. 'இங்கு 'பாதை போடுகிறேன், பாகம் தா' என்று கேட்கிறது இந்திய சர்க்கார்.

அதனால்தான் கார் வேகத்தில் அவர்கள்,—கட்டை வண்டி வேகத்திலே நாம் நகருகிறோம்!

—※—

## நடமாடும் கோயில்கள்

★

உடைந்த கோயிலைக் கட்டுகிறார்கள்! ஒடிந்த ரிஷபத்தின் வாலை, வெள்ளியிலே, தங்கத்திலே செய்து வைக்க போட்டி போடுகிறார்கள்!

வாகனங்கள் செய்து வைக்கிறார்கள், வகைவகையான அணியாபரணங்கள் பூட்டுகிறார்கள். ஆறுகால பூசை நடத்துகிறார்கள்!

கோயில்களிலே இந்தக் கோலாகலம் செய்கிறார்கள். கோயில்களை கோட்டைபோலக் கட்டி, கோட்டானும், வௌவாலும் அடைந்திட விடுகிறார்கள்.

ஆனால், நடமாடும் கோயில்களை நடுத் தெருவில் விடுகிறார்கள்!

பாதை யோரங்களையே தங்கள் வாழ்க்கை மாளிகையாக்கிக்கொண்டுள்ளோர் பலர்.

சிங்காரச் சென்னையிலே, இந்த சிந்தையைக் கலக்கும் காட்சியைக் காணலாம்.

வெய்யில், பனி, மழை, குளிர், வெப்பம், எதற்கும் அவர்கள் அஞ்சி ஒதுங்கியிருக்க இடமில்லை.

ஒரு அடுப்பு, அதற்கு தகர ஓடு போட்ட கூரை! பழம் படுக்கை, அதிலேயே பகல், இரவு குடுத்தனம்! இந்த கோரக் காட்சி கண்டு கொண்டுதான் சென்னை சீமான்கள், மெருகு குலையாத மோட்டார்களில் செல்கிறார்கள்,—மேனி நலுங்காத மேதாவிகள் அவர்கள்!

எட்டடி மண்ணிலே, ஏழைக் குடும்பம் நடத்துகிறான். அதுவும் பாதையோரத்தில்!

எட்டடுக்கு மாடி கட்டி, மழைக்குக்கூட ஒதுங்கமுடியாமல், 'நாய்கள், ஜாக்கிரதை' போர்டு போட்டு வாழ்வோரும் இருக்கிறார்கள்!

கோயில் திருப்பணி செய்திடும் கோமான்கள், இந்த நடமாடும் கோயில்களைப் பற்றிக் கவனிப்பதில்லை.

ஆனால் சென்னை கார்ப்பரேஷன் இந்த வேலையிலே ஈடுபட்டுள்ளது.

பாதை வழியிலே, தங்கள் வாழ்க்கையை நகர்த்திடுவோருக்கு, வீடு கட்டிக்கொள்ள இடம் தந்துள்ளனர். இன்றும் தந்து வருகின்றனர்.

நாகரீகம் இந்த நல்ல மனதை நாடாள்வோருக்குத் தருவது மட்டுமல்ல, மனிதாபிமானம், மக்களிடத்திலே இத்தகைய மனித சேவைக்குரிய உணர்ச்சியைப் பெருக்க வேண்டும்.

சோமநாதர் ஆலயத்திற்கு முப்பது இலட்சம் நிதி தருவர், அய்யப்பனுக்கு ஐந்தரை இலட்சம் கொடுப்பர், ஆனால் நடமாடும் கோயில்கள் திருப்பணிக்கு எதுவும் தரமாட்டார்கள்! இங்குள்ள பணப்பெட்டி அப்படி மூடிக் கொள்கிறது!

அவர்கள் பணத்தைப் பதுக்கி வைக்கும் பெட்டிமட்டும், இரும்பல்ல—அவர்கள் இதயமும் இரும்பாகிவிடுகிறது!

அவர்கள் விசித்திரமாக தங்கள் தருமக் கரத்தை நீட்டுகிறார்கள்.

குளிரிலும், கோடையிலும் குந்தக் குடிசையின்றி தவிப்போருக்கு, இடம் அமைக்க 3 இலட்சம் ஒதுக்கத் தவிக்கிறது, நகர நிர்வாகம். ஏன், பணம் படைத்தோர், தங்கள் பங்காகக் கொஞ்சம் பணம் கொடுத்து, இந்த மனிதாபிமான காரியத்திற்கு உதவக்கூடாது.

கோயிலைக் கட்டி, கும்பாபிஷேகம் நடத்திடுவதைவிட, ஏழையை அழைத்து, ஒரு குடிசையைத் தந்து, தொழிலையும் காட்டினால் தருமம் தலைகாக்காதா? தருமம் தலைகாக்கிறதோ இல்லையோ, அந்த ஏழையின் இதயங்குளிர்கிறதே, அதுவே காக்குமே!

## மாநாடுகள்

திருப்பத்தூரில், 30—6—51, 1—7—51 ஆகிய நாட்களில் சமூக நீதி, எழுத்துரிமை, பேச்சுரிமை மாநாடுகள் நடைபெற எல்லா ஏற்பாடுகளும் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

ஈரோட்டில், ஜுலை இரண்டாம் வாரத்தில் சமூக சீர்திருத்த மாநாடு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Edited Printed & Published by C. N. Annadurai M A at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram

58
5 JUL 1951
58/51

REGD. No. M 4642

# திராவிடநாடு

இலங்கை 15 சதம் விலை அணு 2

மலர் 9 | 17-6-51 | இதழ் 52

## லண்டனிலே ராஜகுமாரி!

★

"நோய் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; வந்தபிறகு தடுப்பதைவிட வராது காப்பதே நல்லது. மக்களுக்குப் போதுமான அளவு அசுத்தமில்லாத தண்ணீர், நல்ல பால், வயிறு நிறையுமளவு உணவு, நல்ல வீடு, இவைகளைத் தந்தால் எப்படி நோய் ஏற்பட முடியும்!"

* * *

அவர், ராஜவம்சத்து, தேவியார். காத்திருந்து சேவை செய்ய, பலர், அவரது அரண்மனையிலே உள்ளனர். பசி, பட்டினி, தெரியாதவர் அவர். குழி விழுந்த கண்கள், வெடித்துப் போகும் இதயம், துடித்துக் கொதிக்கும் குந்தி—இவைகளின் நிலையைக் கண்ணால் கண்டிருக்க முடியுமேதவிர, அனுபவித்தறியாதவர். அவர், இத்தகைய, அரிய உபதேசத்தைத் தந்திருக்கிறார். சபர்த்தலா ராஜவமிசத்தைச் சேர்ந்தவரும், தற்போதும் அதே ராஜபோகம் குறையாத அளவுக்கு, மத்தியசர்க்காரிலே மந்திரியாக வீற்றிருப்பவருமான ராஜகுமாரி அமிருத கௌரி தேவியார்.

தேவியாரின், திரு மொழிகள், மிகமிக வரவேற்கக் கூடியவை. திருமியைத் தேடி, உடலில் ஏற்றிக் கொண்டு பிறகு, வைத்யரிடம் ஓடுவதை விட, வாராமலே, தற்காத்துக் கொள்வது மிகமிக நல்லதுதான் இந்த உபதேசத்தை, அவர், வெளியிடும்போது, இந்தியா பற்றிய வேதனை யொன்றையும் வெளியிட்டிருக்கிறார்—சுகாதார மந்திரி என்ற ஹோதாவில்.

"மிகவும் பயப்படுகிறேன். வரவர, ரேஷன், குறைந்து போய்க் கொண்டிருக்கிறது, இந்திய மக்களுக்கு. எங்களால், என்ன செய்வதென்றே, தெரியவில்லை. ஒரு நாள், இரண்டு நாளல்ல, பல ஆண்டுகளாகவே, இந்த நிலை நீடித்துக் கொண்டே வருகிறது, இந்திய பூமியில். உணவு போதாத இந்நிலை, மக்களின் உடலையன்றோ உருக்குலைக்கும்? உடல் சீரழிந்தால், நோய்கள், அவர்களைத் தாக்காமல் தடுத்து விட முடியாதே!" என்பதாக.

"பஞ்சத்தைக் கூடப் போக்கிவிடலாம்— இந்தப் பாழ்நிலையைத் தடுப்பதென்பது இயலாதே!" என்றும், சோகத்தோடு பேசியிருக்கிறார்.

பேசியிருக்குமிடம், இந்திய சட்டசபையோ, டில்லியில் நிருபருக்கு பேட்டி தந்தபோதோ அல்ல.

லண்டனில்!எந்த, ஏகாதிபத்தியம் ஒழியவேண்டும்; அப்போதுதான் இன்பவாழ்வு மலரும் என்று எக்காளமிட்டனரோ, அந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தின் தலைநகராம்லண்டனிலே, இந்த வேதனையை வெளியிட்டிருக்கிறார்.

தேவியாரின் சோகம் கண்டு, தேம்ஸ் நதிதீரத்தவர்கள் என்ன எண்ணியிருப்பர்!

"ராஜகுமாரி—மிகவும் வேதனைப் பட்டாராமே!"

"உண்ண உணவில்லை என்று, சொன்னார். என்ன செய்வதென்ற, திகைப்பு தெரிந்தது அவர் பேச்சில்"

"ஆமாம்! நாம், அங்கிருந்த போது, இவ்வளவு தொல்லைகள் ஏற்படவில்லையே........இப்போது மட்டும் எப்படியாம்?"

"அப்போது, நாமும், இப்போதுள்ள இந்தியாவைத்தானே ஆண்டோம். நமது வைஸ்ராய் காலத்திலிருந்த அதிகாரிகள்தானே, இப்போதும் இருப்பவர்கள்!"

"ஏன், வந்ததாம், இந்த விபத்து?"

இதுபோன்ற ஏளனங்களும், கேலிப்பேச்சும், எழும்பாமலா இருந்திருக்கமுடியும்!

வீரம் பேசியோர், 'வெண்சாமரம் வேண்டுமானாலும் வீசுகிறேன்; வேதனையைப் போக்கு' என்று வேண்டினால், காண்போர் நகைக்காமலா இருப்பர்! அதிலும், எந்த ஏகாதிபத்தியம் கூடாது என்றுகூறி புது அரசு பெற்றோர் அதே ஏகாதிபத்தியத்தலைநகரில்,பரிதாபத்தையும் சோகத்தையும் வெளியிட்டால்!

ஏளனமும், கிண்டலும் இன்றைய ஆளவந்தாரின் பேச்சுகுறித்து அங்கே எழும்புமென்பது, தேவியாருக்குத் தெரியாத விஷயமல்ல. இருந்தும் வேதனையையும் சோகத்தையும் வெளியிட்டிருக்கிறார்.

ஒருவேளை, அங்கெல்லாம் இந்தியாவின் பரிதாபம் பற்றிச் சொல்லி, அவர்களது அனுதாபத்தைப் பெறலாம், அதன் மூலம் உணவுப் பொருள்களை இந்தியாவுக்கு கிடைக்குமாறு செய்யலாம் என்ற நல்லாசை கூட காரணமாக இருக்கலாம், இதற்கு.

இந்த நல்லாசையின் விளைவாக, தேவியார் பேசினாரென்றால், அவரது இதயம், பாராட்டுக் குறியதுதான்.

மக்கள் துயர் துடைக்கவேண்டுமென்ற, ஆசையால், அவர் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்கு அனுசரணையாகவே, இந்தியாவின் வேதனையை அங்கு எடுத்துச் சொன்னாரென்றால்,— அதுவும் ஏளனத்தையும் கேலியையும் சட்டை செய்யாது—அவரது, நல்லெண்ணம், மதிக்கக்கூடியதுதான்.

ஏனெனில், உண்மை நிலையை வெளியே எடுத்துச் சொன்னால் தங்களுக்கு அவமானம் ஏற்படுமேயென்ற, போலிப் பெருமையால் தான், இன்று பல பிரச்சினைகள், இவர்கள் ஆட்சியில் ஏற்பட்டுக் கொண்டுள்ளன.

தம்மால் எல்லாம் முடியும், தமது ஆட்சியில் மக்கள் வாழ்வு நன்றாக இருக்கிறது என்று வெளியுலகுக்கு விளம்பரப்படுத்திக் காட்டுவதில் 'இவர்கள்' எடுத்துக் கொண்ட முயற்சியும் சிரத்தையும் மிகமிக அதிகம்.

உண்மையை வெளியே சொன்னால் வெட்கம் என்று கருதி, வேதனையை வெளியே சொல்லாததால் தான் விபத்துக்கள் அதிகமாயின.

எனவே, காங்கிரஸ் மந்திரிமார்களின் இந்த வீண்பெருமைக்கு இலக்காகாமல்; இந்தியாவின் வேதனையை, எடுத்துச் சொல்லியிருக்கிறார். ராஜகுமாரியார் என்பது, பாராட்டுதற்குரிய செய்திதான்.

ஆனால், அதே இலண்டனில், அரசுப்பிரதிநிதியாக வீற்றிருக்கும் கிருஷ்ணமேனன், அம்மையார் வேதனைக்குரல் எழுப்பிய நான்கு நாட்களுக்கெல்லாம், சிலதகவல்களை வெளியிட்டுள்ளார்.

"இந்தியாவில் உணவுத் தட்டுப்பாடு இருப்பது உண்மைதான். ஆனால் பஞ்சம் ஏற்படவில்லை"

"பலர் உணவில்லாமல் சாகிறார்கள் என்பதெல்லாம் உண்மைக்கு மாறுபட்டது"

இந்திய வரிப்பணத்தில் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை, சுகபோகமாக அனுபவிக்கும், இந்தச் சுந்தர புருடர், இத்தகைய தகவல்களை, வெளிநாட்டு நிருபர்களைக் கூட்டி, அவரிடையிலே வெளியிட்டிருக்கிறார்.

இந்தியாவில் பஞ்சம் ஏற்படவில்லையாம்! உணவில்லாமல் எவருமே சாகவில்லையாம்!

ஆறாயிரம் மைலுக்கு அப்பால், வெள்ளையரோடு வெள்ளையராய் வாழும், வி. கே. கே. மேனன், மிகச்சாதாரணமாக, வெளியிட்டுள்ளார், இந்தத் தகவலை.

மத்திய சர்க்கார் மந்திரியான அமிருதகௌரி அம்மையார்,உணவு நிலைகுறித்து, வேதனைப்பட்டிருக்கிறார்.

ஆனால் மேனன், வீண்ஜம்பத்தோடு, வெளிநாட்டு நிருபர்களிடம் பேசியிருக்கிறார்.

இந்தவீண்ஜம்பமே;இப்பொழுது இந்தியா அனுபவிக்கும்பலதொல்லைகளுக்கும் காரணம். பிறரின் பாராட்டுதலைப் பெறவேண்டுமென்பதற்காக வான்கோழியைக் கானமயிலென்று சொல்லமுடியும்? வற்றிய குளத்தில் பொற்றாமரை மலர்கிறது என்று கூறமுடியும்?

சொன்னாலும் எவரே நம்புவர்!

இருந்தும், மேனன், இவ்விதம், வீண்பெருமையை வீசியிருக்கிறார்.

இந்தியாவிலுள்ள நிலையை,இன்று அறியாதோர், இல்லை.

வெளிநாடுகளை நோக்கி இந்திய சர்க்கார், உணவுக்காக வேண்டுகோள் அனுப்பிக்கொண்டிருப்பது அறியாத விஷயமல்ல.

பலர் பட்டினியால் மாள்வதும், வீழ்வதும் உலக முழுமையும் தெரியாமல் இல்லை.

பலநாடுகள், அனுதாபத்தோடு, இந்தியாவுக்கு உதவ முன்வந்து கொண்டிருக்கிறது.

ஆங்காங்கே உள்ளோரெல்லாம், இந்திய மக்களுக்கு இந்த நேரத்தில் உதவுவது, தங்களுக்கான பெருமை என்று கையில் கிடைத்ததையெல்லாம் அனுப்பும் ஆசைகொண்டுள்ளனர்.

அந்த அளவுக்கு, அவர்கள் இங்குள்ள வேதனையைப்புரிந்துகொண்டுள்ளனர்; அதனால்தான், மனிதாபிமானத்தோடு, உதவ முன்வந்து கொண்டுள்ளனர்.

இருந்தும், கிருஷ்ண மேனன் சொல்கிறார்; இங்கே பஞ்சமில்லையாம்! பட்டினியால் எவரும் சாவதுமில்லையாம்!!

சுகாதார மந்திரி, வேதனை நீங்க வேண்டுமேயென்கிற ஆவலால், தனது மக்கள்படும் அவதியை விளக்குகிறார்.

ஆனால், இந்திய ஹைகமிஷனரோ அதெல்லாமில்லை — அப்படியெல்லாம் எண்ணாதீர்கள்" என்று வீண் பெருமை பேசுகிறார்.

இருவரும் காங்கிரஸ் ராஜ்யத்தின் தூதுவர்கள். இருந்தும்முரண்பட்ட விதத்திலே, கருத்துக்களைத் தந்துள்ளனர்—அதுவும் ஒரு அந்நிய நாட்டில்!

என்ன நினைப்பர், இலண்டனிலுள்ளோர்? திறமையில்லாமல்,திண்டாட்டம் ஏற்படச்செய்ததுமட்டுமல்ல உண்மையைக் கூறுமளவு பண்பு கூடப்பெறவில்லையே, என்று எண்ணாமலிருப்பர்.

பிறகு ஏளனம், அதிகமாகாமலா இருக்கும்? அதுமட்டுமல்ல, இந்தியாவின் உணவு நிலையைப் போக்க-உதவவேண்டும் என்கிற ஆர்வமும் இதனால் குறைபடத்தானே செய்யும்!

* * *

புண்ணை வெளிக்குக் காட்டுவது கௌரவக்குறைச்சல் என்று கருதினால் விளைவுவிபரீதமாகுமேயொழிய



குறைந்துவிடாது. உண்மைக்குத் திரையிடுவது; ஆபத்தை அதிகரிக்குமேயொழிய அணைத்துவிடாது.

இந்த உண்மையை, இன்றைய ஆளவந்தார் அறிவது மிக மிக அவசியம்.

தான் தோன்றித்தனமாக, தலைக்குத்தலை, பேசித் திரிவதென்பது, நாட்டுக்கு கேட்டையே தரும். அதோடு நாட்டின் கௌரவமும் மரியாதையும், காற்றோடு பறக்கத்தான் நேரும்.

இந்த உண்மையை, அரசோச்சும் பிரதிநிதிகளுக்கு, காங்கிரஸ்தலைவர்கள் வலியுறுத்தவேண்டும். அதிலும் வெளிநாடுகளில் இந்தியாவின் பிரதிநிதிகளாயிருப்போர், அவசியம், இதை அறியவேண்டும்.

வீண்பெருமை பேசியதால் விளைந்தஅனர்த்தங்கள் அநேகம்.

பாலும் தேனும் வழிந்தோடுவதாகப்பசப்பித்திரிந்ததால் ஏற்பட்ட பரிதாபங்கள் இனியும் வளரவேண்டாம்.

உண்மைக்குத் திரைபோடாதீர்கள்! உள்ளதைச்சொல்ல நாணாதீர்! மக்கள் நலனைப்பெரிதெனக்கருதாதவர்கள்—'மகா மேதாவி'களென உலகம் போற்றவேண்டுமே என்கிற வீணாசையால், மக்கள் வாழ்வில் புயல் எழும்புவது போதும்—இனி நீடிக்க வேண்டாம்.

ஆளத்தெரியாவிட்டாலும், கள்ளமில்லா உள்ளமாவது தென்படட்டும்.

ஊமைக் காயம், எப்பொழுதுமே அபாயத்திற்குரியது! உள்வீக்கம், மிகவும் தொல்லை தருவது!

மூடி வைப்பதால், வேதனைதான் விரிந்திடும், விபரீதம்தான் பெருகிடும்!

லண்டனிலே ராஜகுமாரி வெளியிட்டது போல உண்மையை வெளியிடுவதால், பலன் உண்டு.

பொய் கௌரவத்திற்காக உண்மையை மறைப்பதால் வரும் இலாபம் என்ன? பஞ்சம், பட்டினி, பசி, இல்லை என்ற ஏக்கக் குரல் பரவும்!

வீண்பெருமை பேசி விபரீதங்களைத் தராதீர்! என்று வேண்டுகிறோம், சந்தர்ப்பத்தால், சிம்மாதனமேறி, 'தாங்கள் வைத்ததே சட்டம்' எனத் திரியும், காங்கிரஸ் தலைவர்களுக்கு.

✲

# மந்திரி பேசுகிறார்

{ காதில் விழுந்தது }

மந்திரியார் மாளிகை

போன், கனைத்தது. அவசர அவசரமாக உள்ளே வந்தார்.

சுற்றிவிட்டார், பேசினார்.

"யார்?"

"ஓ, போலீஸ் இன்ஸ்பெக்டரா. பம்பாய் அந்தேரி போலீஸ் ஸ்டேஷனிலிருந்தா பேசுகிறீர்கள்! பேசுவது நிதி மந்திரி ஸ்ரீவைகுந்த எல். மேதாப். இன்று காலையில் திருடர் இருவர் என்னை வளைத்துக்கொண்டார்கள்"

"ஆச்சர்யப்படவும் வேண்டாம், அவசரப்படவும் தேவையில்லை. அவர்கள் தவறுதலாக என்னை வளைத்தார்கள். அவர்களைக் கண்டு பிடியுங்கள்"

"அவர்கள் பைத்தியக்காரர்கள்! என்னிடம் திருட வந்தார்களே!

எனக்கு தனிப்பட்ட வகையில் சொத்துண்டு, சுகமுண்டு' அவை கூட, என் உத்தியோகத்தால் கிடைத்திருக்கலாம்.

மந்திரிபதவி, எனக்குக்கிடைத்த உத்தியோகமேதான்—வேறொன்றுமில்லை!

ஆனால், அவர்கள் என்னிடம் கொள்ளையடிக்க வந்ததற்குக் காரணம், நான் பணக்காரன் என்பதற்காக அல்ல—ஏனென்றால், பம்பாயில் என்னைக்காட்டிலும் எத்தனையோ கோடீஸ்வரர்கள் உண்டு. போயிருக்கலாம், போகவில்லை.

என்னிடம் திருட வந்ததற்குக் காரணம், நான் மந்திரி—அதுவும் நிதி மந்திரி என்ற காரணத்தால்! அதனால்தான் ஏமாந்தார்கள்.

விடியற்காலை ஐந்து மணிக்கு, வழக்கம்போல, அந்தேரியில், என் தந்தையாரின் பெயரால் உள்ள லவுபாய் பார்க்கில் உலாவச் சென்றிருந்தேன். என்னை இருவர் வழி மறித்தனர், பைகளை சோதித்தனர்.

ஏதும் கிடைக்கவில்லை. கடைசியாக சட்டையிலிருந்து தங்க பொத்தான்களைமட்டும் கழற்றிக்கொண்டு ஓடிவிட்டனர்.

அந்தத் திருடர்களுக்கு உண்மை தெரியாதுபோலும்!

நிதிமந்திரியென்றால் பையிலேயே பணம் வைத்திருப்பார்களோ என்ற சாதாரண உண்மைமட்டுமல்ல — வேறு சிலவும் தெரிந்திருக்கவேண்டும் அவர்களுக்கு! தெரியவில்லை.

நான் பம்பாய் மாகாண நிதி மந்திரி. ஆனால் என்னிடம் நிதி ஏதும் இல்லை!

எப்படியிருக்கும்? நிதி மந்திரி ஆனால் ஒரு ராஜ்ய சர்க்காருக்குத் தான்! மத்திய மந்திரி சபையிலா இருக்கிறேன்.

இந்திய சர்க்கார், முக்கிய வருமானங்களையெல்லாம் தங்களுக்கு ஒதுக்கிக்கொண்டு விட்டார்கள். அதிக வருமானம் தரும் வரிகளை எல்லாம் மத்திய சர்க்காருக்கென்று தீர்மானித்துவிட்டனர்.

மாகாணங்கள் எல்லாம், அவர்களுக்கு வரி தரும் இடங்களே தவிர, அவர்களிடமிருந்து வாழ்வு வேண்டும் பூமியல்லவே!

இங்குள்ள மந்திரி சபை அவர்களின் ஏஜண்டுகள் சபைதானே தவிர, சுயமாக என்னசெய்வார்கள்?

டெல்லியில் பேசப்படுவதை, ரேடியோவைப்போல, திருப்பிச் சொல்வார்கள்!

எத்தனைமுறை காவடி தூக்கினாலும், அவர்கள் திருப்பியனுப்பியிருக்கிறார்கள்!

பம்பாய், பணம் படைத்தோர் நிறைந்த இடம்.

ஆகவே என்னைவிட இந்த அனுபவங்களை, அண்டையிலே உள்ள சென்னை ராஜ்யத்திலே கேட்டால் தெரியும்.

நண்பர் கோபாலர்தான் அங்கு நிதிமந்திரி. அவர் சமயங்களில் மத்திய சர்க்கார்மீது சீறுவார் பாருங்கள். நமக்கே பயமாயிருக்கும். பிறகு ஆனால் காகிதவெடியாகிவிடும்!

குரைக்கும் நாய் கடிக்காதென்று சொன்னது அனுபவம் அதிகமுள்ள பெரியோர்கள் அல்லவா?

அவர் மத்திய சர்க்கார் நிதியென்று எதற்குக் கேட்டாலும் கைவிரித்தனுப்புவதைக் கண்டு ஆத்திரப்படுவார். ஆத்திரத்தை, வார்த்தைகளாக்குவார். ஆனால், ஒரு நாளும் வார்த்தைகளை செயல்களாக்குவதில்லை!

நிதி உறவு கமிஷனும், நியமிக்கப் போகிறார்களாம். அதற்கு நியோகி தலைமை வகிக்கப் போகிறாராம். யார்வந்து யாருக்கு இலாபம்?

மந்திரிகள் எங்கு, எந்த காரியத்திற்குச் சென்றாலும், பெரிய மாலையைப்போட்டு, ஒரு பெரிய வரவேற்பு பத்திரம் தருகிறார்கள். அதில் மந்திரிகளை வரவேற்பது நாலைந்துவரிகளே இருக்கும். அவர்களின் குறைகள் முக்கால் பகுதிக்கு மேலிருக்கும்.

பள்ளிக்கூடம் கட்டவேண்டும், அதற்கு பண உதவி! ஏரிக்குமதில், வாய்க்காலுக்கு கரை, ஆற்றுக்கு பாலம், கிராமத்திற்கு பாதை, ஊருக்கு ஒரு ஆஸ்பத்திரி இப்படி எதையாவது காட்டி நிதி கேட்டிருப்பர்!

இவர்களை மாலை யார் கேட்டார்கள்!

மாலையைப்போட்டு வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறார்கள்!

மந்திரி, மராமத்திலாகாவைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, மதுவிலக்கு மந்திரியானாலும் சரி, உடனே நிதி நிலைமை சரியாக வில்லை, ஆகவே சர்க்காரிடம் இதற்கெல்லாம் பணம் எதிர்பார்க்காதீர்கள் என்று உபதேசம் செய்து விட்டு நழுவிவிட வேண்டியதாக இருக்கிறது!

பொது மக்களையே எதற்கும் பணம் போட்டுக் கொள்ளச் சொல்லிவிட்டு, கார் ஏறிவிட வேண்டி வருகிறது!

இந்த சூட்சுமத்தை, சில நகர சபைகள் உணர்ந்து விட்டன.

சென்னை ராஜ்யத்தில் இதற்கு அரிய உதாரணம் ஒன்று. நெல்லை நகர சபை, சர்க்காரையே, பொது மக்களிடம் கடன் வாங்க அனுமதி கேட்டுவிட்டது. மந்திரி சபையென்றால் பிகுவை விடமுடிகிறதா? அவர்கள் கேட்டது மூன்று இலட்சம் — என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமோ! யோசிக்கிறோம், வாங்குவதானால், இக்கடன் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று வெறுத்து வாங்கிவிட்டார்கள், சர்க்கார்!

சத்திரத்து சோறு — இதற்கு அய்யங்கார் சிபார்சு என்பார்கள் அந்த ராஜ்யத்தில்!

ஆனால், இந்த மந்திரிப் பதவியினால் தங்கப் பொத்தான் கிடைத்தது உண்மை. அதாவது மந்திரியாக உள்ளவர் மேலும் மேலும் பணக்காரராக வசதியிருந்தது! அதனால்தான் மந்திரிகள் இப்பொழுது மாடிக்குமேல் மாடி கட்ட முடிகிறது. ஏகருக்கு மேல் ஏகர் வாங்க முடிகிறது. உற்றார் உறவினர்களெல்லாம், மோட்டார் சர்வீஸ், சிமெண்ட் பாக்டரி நடத்த முடிகிறது. ஆகவே, மாகாண மந்திரியாக இருப்பதால், நாட்டு மக்களுக்கு தங்க பொத்தான் தர முடியவில்லை. நாங்கள் தங்க பொத்தான் போட்டுக்கொள்ள முடிகிறது!

நீங்கள் தயவு செய்து, என்னை வளைத்து திருட முனைந்தவர்களை எப்படியும் கண்டுபிடியுங்கள். அவர்களைச் சிறையில் மட்டும் அடைக்காதீர்கள். நான் இப்பொழுது டெலிபோனில் குறிப்பிட்ட உண்மைகளை அவர்களுக்கு சொல்லியனுப்புங்கள்.

கள்ளர்களிடமிருந்து தப்பிய என்னை, என் நண்பர்கள் பாராட்ட வந்தார்கள். அவர்களிடம் இப்பொழுது உங்களுக்குச் சொன்னவைகளையே தான் சொன்னேன். முகம்மாறித் திரும்பினர்.

சரி, எனக்கு நேரமாகிறது.

மணி பத்தடிக்கிறது. செக்ரட்டேரியட்டுக்கு போக வேண்டும்.

வணக்கம்..........."

போன் கீழே கிடந்தது, அனாதை போல, மீண்டும்!

* * *

போலீஸ் ஸ்டேஷன்

இன்ஸ்பெக்டர், போனை எடுத்தார். பேசினார்.

"ஓ, மந்திரியா? யார்? ஸ்தல ஸ்தாபன மந்திரி கனம் ஜி. டி. வர்த்தகாவா?"

"உங்கள் வீட்டிலுமா திருட்டு... உம்... விபரமாகச் சொல்லுங்கள்... பம்பாய் ஹில் ஐரி பங்களாவில் தான் பலமான பாதுகாப்பு உண்டே! இருந்துமா திருட்டு? தூங்கும் பொழுதே திருடி விட்டார்களா? காலையில் எழுந்து பார்த்தபொழுது துணி மணிகள் அலங்கோலமாகக் கிடந்தன. கோல்ப்பூருக்குப் போவதற்காகத் தயாராக வைக்கப்பட்டிருந்த பெட்டியும் திறந்து கிடந்தது. சோதித்துப் பார்த்ததில் தங்கப் பொத்தான்களையும், பேனாவையும் காணவில்லை. இவைதான் தாங்கள் தரும் தகவல்கள்?"

"நேற்று நிதி மந்திரி கூறியபடி நடந்து கொள்கிறேன்."

"என்ன சொன்னார்? உண்மையைச் சொன்னார்!"

"அவர் திருடர்களைப் பிடித்துச் சிறையில் அடைக்கச் சொல்லவில்லை. கள்ளர்களுக்கு சில செய்திகள் சொல்லச் சொன்னார். அதுவே தான் எனக்குச் சரியாகப்படுகிறது"

"அவர் சொன்னவைகளோடு, இன்னும் சிலவற்றைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். தொடர்ந்து இப்படி மந்திரிகளின் தங்கப்பொத்தான்கள் காணமல் போகின்றன என்றால் அது யோசிக்க வேண்டிய ஒன்று. ஏனெனில், ஒரே திருட்டு தொடர்ந்து நடைபெறுகிறது. நான் யோசித்த வரையில், தங்கப் பொத்தான் திருடர்களுக்குச் சொல்ல வேண்டிய உபதேசத்தின் கடைசிப்பகுதி என் மனதில் எண்ணியிருப்பதுதான்!"

"மந்திரி பதவி கிடைத்ததால், அவர்கள் தங்கப் பொத்தான் போடத் தயாரானார்கள். பொது மக்கள் இதனைப் புரிந்து கொண்டார்கள். மந்திரிப் பதவியினால் வரும் தங்கப் பொத்தான்களை இனி விட்டுவைக்கக் கூடாது என்று எடுக்கவே ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே மந்திரிமார் நிலை மோசமானது தான். இருந்தாலும், தங்கப் பொத்தான்களைத் திருடுவதைக் காட்டிலும், மந்திரி பதவியையே எடுத்துக் கொள்ளலாம். அது முடியாத காரியமல்ல. அதற்குத் திருட்டும் தேவையில்லை. பிறகு தங்கப் பொத்தான் எல்லோரும் அணியும் நிலை பிறக்கச் செய்யலாம். என்று கூறப்போகிறேன்."

"ஏன் பதைக்கிறீர்கள். நிதி மந்திரியார் கூறியவற்றோடு சிறு இணைப்பு — அவ்வளவுதான்! திருடர்களை என்ன செய்யவேண்டும் என்பது எனக்குத் தெரியும், நீங்கள் குறுக்கிடாதீர்கள்!"

போன் தடாரென்று கீழே விழுந்தது!



# ★ சங்கட மண்டலம் ★

★

மாநாடு கூடப் போகிறார்கள்! மக்கள் நன்மைக்கான வழி வகுக்கப் போகிறார்கள்!

ஆனால் அங்கு மக்களின் கண்ணீரைக் காட்டி, காரணங்களை விளக்கி, ஆட்சியாளரை, அதனைத் துடைத்திட அழைத்திடப் போவதில்லை! சோறில்லை, துணியில்லை, உரிமையில்லை என்றும் பேசிடப் போவதில்லை! அல்லது, ஆட்சிப் பீடத்திற்கு அனுசரணையாக, வெந்ததை தின்றுவிட்டு, வாயில் வந்ததைக் கொட்டியளந்துவிட்டு தேர்தல் வந்ததும், இந்த எங்கும் கண்ட திருமேனிகளை மறந்திட வேண்டாம் என்ற விண்ணப்பத்தோடு கலையப் போவதில்லை.

இந்த மாநாட்டில் கூடப் போகிறவர்கள், உலகுக்கு, புது வழி காட்டப் போகிறார்கள். மற்றுமொரு உலகத்திற்குப் போக பாதை வகுக்கப் போகிறார்கள்!

பூவுலகை விட்டு, வேறொரு உலகுக்குப் போக மார்க்கம் கண்டு பிடிக்கப் போகிறார்கள்!

அப்பொழுது, ஏதாவது மதமாநாடாக இருக்குமோ, என்று ஐயம் பிறக்கத் தேவையில்லை.

சொர்க்கத்திற்கு வழி காட்டப் போவதில்லை. இதுவரை மகான்கள், மகரிஷிகள், ஜீயர்கள், ஜீவன்முக்தர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், அடியார்கள், பக்தர்கள், அந்தப் பாதையைக் காட்டிக் காட்டி, நாம் கண்டு, கண்டு அலுத்துவிட்டோம்!

கண்டவர், விண்டிலர்! விண்டவர், கண்டிலர் என்பதோடு அந்தப் பாதையை மூடிவிட்டோம்.

மாநாட்டில் வழி காணப் போகிறார்கள், சொர்க்கத்திற்கல்ல, சந்திர மண்டலத்திற்கு!

கூடப் போகிறார்கள், உலக விஞ்ஞானிகள் — பேசப் போவது, சந்திர மண்டலத்திற்குச் செல்ல தக்க சாதனத்தை எப்படிக் கட்டுவது, என்னவிதமாக அமைப்பது என்பது பற்றி!

மாநாடு, அதற்காகக் கூடப் போகிறார்கள், வரும் செப்டம்பரில்—இங்கல்ல, லண்டனில்!

ஆராய்ச்சி, சந்திர மண்டலத்திற்குச் செல்வதற்கு வழி காண்கிற அளவு வளர்ந்துவிட்டது! ஆனால், நாம் இன்னமும் வளரவில்லை.

சந்திரன் என்றால், தாராசசாங்கம் தான் நம் நாட்டவருக்கு நினைப்புக்கு வருமே தவிர, அது நாம் போய்ப் பார்க்க முடிந்த ஒரு இடம் என்பதே தெரியாது!

சந்திரனை, பாம்பு பிடிப்பது தெரியும். ஆனால், அது ஒரு மண்டலம், அங்கு சென்றிடவும், விஞ்ஞானிகள் முயற்சி செய்திருக்கிறார்கள் என்பதே பலருக்குத் தெரியாதே!

இண்டர் பிளேனேடரி சொசைடியின் தலைவர் ஆர்தர் கிளார்க் நமது ஆராய்ச்சியை எடுத்து விளக்கியுள்ளார்.

மணிக்கு 18,0000 மைல் வேகம் செல்லும் ராக்கெட் தயாரிக்க முடியும் என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. பூமியின் ஆகர்ஷண சக்தியை மீறி காற்றே இல்லாத இடத்தில் சென்றுவிட அவ்வளவு வேகம் போதுமானது. இந்த விக்கட், பூமிக்கும் சந்திரனுக்கு மிடையே தங்குமேடையாக உதவும். இதனை முதலில் செய்துவிட்டால் மனிதர்களை ஏற்றிச் செல்லும் சாதனங்களை தயாரித்து விடலாம்!

விஞ்ஞானிகள் அங்கு அப்படி, சந்திரமண்டலம் வரை தங்கள் சிந்தனையைச் செலுத்துகிறார்கள்.

* * *

விஞ்ஞானத் துறையில், மற்ற நாடுகளைவிட, இந்தியா பின்னடைந்துள்ளது. இந்திய மாணவர்கள், இத்துறையில் கெட்டிக்காரர்களாக வேண்டும். ஆனால் அவர்கள் விஞ்ஞானத்தைப் பயின்றிடும் முறை அடிப்படையிலே தவறாகவே இருக்கிறது — குறைபாடுடையதாகவே காணப்படுகிறது.

கோவையிலே, பேசிய, சர். சி. வி. ராமன் எடுத்துக் காட்டியுள்ள உண்மைகள் இவை.

சந்திர மண்டலம் போகும் வரை, விஞ்ஞானம் அவர்களை அழைத்துச் சென்றுவிட்டது. ஆனால், நாமோ, விஞ்ஞானத்தின் மதிப்புணராமல், அதனைப் படித்துத் தெரிந்துகொள்வதிலே கூட, தவறான முறையைக் கையாள்கிறோம்.

விஞ்ஞானத்தின் விளைவுகளை அறுவடை செய்யத் தவறுவதில்லை. ஆனால், அதன் பெருமையைப் புரிந்து கொள்ளாதோர் தொகை ஏராளம். அதுமட்டுமல்ல, விஞ்ஞானத்தின் பயனை அனுபவித்துக் கொண்டே கேலி பேசுவோர் இருக்கிறார்கள், இந்த விபரீத பூமியில்!

பறந்திடும் விமானத்தைப் பார்ப்பார்கள். ஆனாலும், புஷ்பக விமானத்தைப் புகழ்வார்கள்.

ஓடும் ரயிலில் போவார்கள். மோட்டாரில் சவாரி செய்வார்கள். ஆனாலும், கருடனைத் தொழுவார்கள்.

தந்தி கொடுப்பார்கள். ரேடியோவில் பாடல் கேட்பார்கள். டெலிபோனில் பேசுவார்கள். ஆனாலும், ஆகாய வாணியின் புகழ் பேசுவார்கள்.

பலனை அனுபவித்துக் கொண்டே பழிப்பார்கள்!

இது கூட விசித்திரம் என்று விட்டு விடலாம். இன்னும் விபரீதமானதும் உண்டே!

விஞ்ஞானத்தின் அறுவடை, ரேடியோ—அதில் சீதா கல்யாணம் காலட்சேபம் செய்வார்களே! விஞ்ஞானத்தின் விநோத அன்பளிப்பு, ஒலிபெருக்கி—அதில் புராணம் படிப்பார்களே!

விஞ்ஞானத்தின் துணையால் அஞ்ஞானத்தை வளர்ப்பார்களே!

பரிதாபமான நிலை என்றாலும், அந்த நிலை மாற்றப்படவேண்டும்.

அகல் விளக்கடியிலிருந்து கொண்டு பேசினால் அக்கரையில்லை. நல்ல, எலக்டிரிக் ஒளிக்கடியிலே இருந்து கொண்டு பேசினால் யார் ஒப்புவர்?

சந்திர மண்டலம் போக வேண்டாம் இவர்கள். சாதாரண அறிவு மண்டலம் வரையாவது இந்நாட்டவர் நடந்து செல்லாவிட்டாலும் ஊர்ந்து செல்லவேண்டாமோ?

விஞ்ஞானத்தைப் பழிப்போர் அதனை வெறுத்தொதுக்கிவிட்டு, வேதம் சொல்லாதது, வேள்வியில்

(8-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

ஞாயிறு] 17—6—51 [காஞ்சி

## ஏன்?

சர்க்காரைக் கவிழ்க்க சதி நடைபெற்றது.

பல நாட்களுக்கு முன்பு, பாகிஸ்தானிலிருந்து, திடுக்கிடக் கூடிய மேற்படி தகவல் வந்தது. அந்தச் சதிபற்றி, நமது தேசிய இதழ்கள் வெளியிட்ட விபரங்களும், அதற்குத் தரப்பட்ட முக்கியத்துவமும், நமது திகிலை அதிகரிக்கச்செய்தன.

பிறகு, மேற்படி சதி சம்பந்தமாக பல முக்கிய அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். குவிப்பிடத்தக்க செல்வாக்கும் அதிகாரமும் மிக்க அதிகாரிகளிற் பலர், ஆங்காங்கு கைது செய்யப்படுவதாகவும் வந்த செய்திகளைக் கண்டபோது, சதியின் தரமும் கோரமும் தென்பட்டன.

இப்போது, மேற்படி சதி சம்பந்தமாக குற்றஞ் சாட்டப்பட்டோரை, விசாரணை செய்து, முடிவு காண விசேஷ நீதிமன்றம் ஒன்றையும், பாகிஸ்தான் சர்க்கார் நியமனம் செய்திருக்கிறது.

வரும் ஜூன் 15-ஆம் தேதி முதல் ஆரம்பமாகப்போகும் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஐவர் சார்பில் வழக்காட ஐந்து பிரபல வக்கீல்களையும் பாகிஸ்தான் சர்க்காரே ஏற்பாடு செய்து தந்திருக்கிறது.

குற்றஞ் சாட்டப்பட்ட ஐவரும் தமது சார்பில், வக்கீல்களை நியமனம் செய்து தருமாறு, சர்க்காரை வேண்டிக்கொண்டனராம். மறுக்காமல், தம்மைக் கவிழ்க்கும் சதியில் குற்றக்கூண்டில் நிற்பவர்களாயிற்றே என்றும் எண்ணாமல், தனது ஒப்புதலை அளித்திருக்கிறது, பாகிஸ்தான் சர்க்கார்.

சதிபற்றிய விபரங்களைப் பெரிய அளவில் பிரசுரித்த பத்திரிகைகள், இந்தச் செய்திக்கு அவ்வளவு முக்யத்துவம் தரவில்லையென்றாலும், நல்ல வேளையாக மறைத்துவிடவில்லை.

குழந்தைப் பருவத்திலுள்ள சர்க்காரைக் கவிழ்க்க சதி நடைபெற்றது என்பதைக் கேள்விப்படும்போது, உலக ஒழுங்கு விரும்பும் எவரது இதயமும் கலங்கத்தான் செய்யும்.

கோணமில்லாத முறைகளில் சர்க்காரைக் கவிழ்க்க சதி செய்வதும், அதற்காகச் சர்க்காரில் அமர்ந்திருப்போரின் வாழ்வை முடிப்பதுமான காரியங்களில், ஈடுபடுவதும் வெறுக்கக் கூடியவை மட்டுமல்ல, வராது ஒழிக்கப்பட வேண்டுவனவுமாகும்.

பர்மாவிலே, சுதந்திரமலர் அரும்பிய நேரத்தில், அவுங்சான் வீழ்த்தப்பட்டதும், அவர்தம் மந்திரிமார்கள் கொல்லப்பட்டதும், காதுகளில் பட்டபோது உலகமே கண்ணீர் சிந்திற்று!

அரசியல் விரோதம் காரணமாக, பொது வாழ்விலீடுபட்டோரைப் பொசுக்குவதும், துப்பாக்கியால் துளைப்பதும், உயிரைப் பறிப்பதுமான காரியங்கள், மனித நாகரீகத்தையே விலை கூறும் விபரீதங்களாகும்.

கருத்து வேற்றுமைக்காக, ஆரோசிப்பவர்களை, மாற்றுக் கண்ணோடு பார்ப்பதும்மகாக் கொடுமைகளைச் செய்வதும், மனிதப் பண்பையே, மறைக்கும் செயலாகும்.

வாழப்பிறந்த மனித சமுதாயத்தில், மனிதர்களின் குணமும் போக்கும் ஒன்றாகவேயிருக்குமென்று எண்ண முடியாது.

அதைப்போலத்தான், அரசியற் கோட்பாடுகளும்.

பிடிக்கவில்லையென்பதற்காக, சர்க்காரிலிருப்போரின் உயிரைப்போக்கத் திட்டமிடுவதும், அரசோச்சும் உரிமையைப் பறிக்க ஆகாத வழிகளில் முயல்வதும், கோழையின் செயலாகும்.

ஆகவேதான், பாகிஸ்தான்மந்திரிகளைக் கவிழ்க்கும் சதிபற்றிக் கேள்விப்பட்டபோது, பரிதாபப்பட்டோம்—அழிவு வேலைகளில், மனிதர்கள் ஆசை எங்கெல்லாமோ இழுத்துச் செல்கிறதே என்ற வேதனையால்.

இப்போது, கடந்த 12-ந்தேதியன்று, நமக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது, சென்னை மாநில பொதுப்பணி அமைச்சர் பக்தவத்சலனார் மூலமாக. சென்னை லக்ஷ்மிபுரம் பொதுக் கூட்டமொன்றிலே பேசியபோது, மேற்படி தகவலை வெளியிட்டிருக்கிறார்—கேட்டாலே திடுக்கிடும்படியாக.

டில்லி சர்க்காரை வீழ்த்த சதி செய்யப்பட்டது.

வரப்போகும் தேர்தலின்போது, குழப்பமுண்டாக்கும் திட்டமே, இது.

இந்தச் சதியில் சம்பந்தப்பட்டவர்கள்— சாதாரணமானவர்களல்ல; மிகப்பெரிய மனிதர்கள்.

பொதுக்கூட்டத்திலே, வெளியிட்டிருக்கிறார், இந்தச் சோகத் தகவலை.

அண்மையில், டில்லி சென்றிருந்தபோது, இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டாராம், அவர்.

நல்லவேளையாக இந்தச் செய்தி காலாகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதால், முளையிலேயே கிள்ளப்பட்டது.

இப்படி, வெளியிட்டிருக்கிறார், பக்தவத்சலம். பதறக்கூடிய செய்திதான்! நேரு சர்க்காரைக் கவிழ்த்து தங்கள் சர்க்காரை அமைக்க விரும்பியது எவர் என்று, அறிய எல்லோரது இதயமும் துடிக்கத்தான் செய்யும்!

சுற்றிலும் வீரர்கள், புறப்பட்டால் பின்தொடர போலீஸ்படை, கட்டளைகளைத் தாங்கிச்செல்லஇராணுவப்படை, என்றெல்லாமிருப்பது தெரிந்தும், மந்திரிகளைக் கவிழ்த்து, குழப்பத்தை யுண்டுபண்ணமுயன்ற கூட்டம் எது என்று அறிய எல்லோருக்கும் ஆவல் கிளம்பத்தான் செய்யும்.

ஆனால் அமைச்சர், கூட்டம் என்று கூறவில்லை. எனினும், தெரிவிக்கிறார்—"ஒரு சிலர் பெரிய மனிதர்கள்தான், இந்தச் சதியில் ஈடுபட்டவர்கள்"

ஒரு சிலபெரியமனிதர்கள்தானும் இந்தச் சதியில் ஈடுபட்டோர். ஒரு சிலர்தாமென்றால், அவர்களைக்கண்டு பிடிப்பது, வெகு எளிதாயிற்றே—ஒருபெருங்கூட்டம் என்றால்தானே தேடவும் பிடிக்கவுமான கஷ்டமதிகம்—ஆகவே, படைபலமும், வேவு பலமும் மிக்க சர்க்கார் அந்த "ஒரு சிலரை"க் கண்டு பிடித்துவிட்டார்களா, என்று கேட்கத்தோன்றும்; நமக்கு.

ஆனால், அந்த ஒரு சில "பெரிய மனிதர்கள்" எவரெவர் என்பதை,



பக்தவத்சலனார், பொதுமக்களுக்குச் சொல்லவில்லை.

"சொல்ல வேண்டாம். யாரார், என்று கண்டுபிடித்து, அவர்களைக் கைதாவது செய்தார்களா—பாகிஸ்தான் செய்ததுபோல. வழக்காவது தொடரப்பட்டிருக்கிறதோ—உண்மை தெரிந்துகொள்ள இதைப் பற்றி ஏதாவது சொன்னாரோ?"—என்று கேட்பீர்கள், நீங்கள், ஆவலோடு.

நாமும் அத்தகைய ஆவலோடு, அமைச்சரின் பேச்சை வெளியிட்டிருக்கும் "எக்ஸ்பிரஸ்" இதழைத் தேடிப்பார்த்தோம். தென்படவில்லை.

மேற்படி நெஞ்சு கொதிக்கும் தகவலை வெளியிடும்படியான அவசியம், அமைச்சருக்கேன் வந்தது, என்று துருவித் தேடினோம்.

அமைச்சர், காங்கிரசில் பன்னெடுங்களாக உழைத்துவிட்டு இப்போது வெளியேறிக் கொண்டிருக்கிறார்களல்லவா, பலபேர்—அவர்கள் பற்றி ஆத்திரத்தோடு, பேசிக்கொண்டே வரும்போது, மேற்படி தகவலையும், தெரிவிக்கிறார்.

"காங்கிரசிலிருந்து விலகியவர்கள், தாங்கள் சட்ட சபைகளில் வகிக்கும் பதவிகளையும் ராஜினமா செய்வது தானே முறை. காங்கிரஸ் பேரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தானே அவர்கள். இந்த ஒழுங்குகூட அவர்களுக்குத் தெரியவில்லை போலிருக்கிறது!"

என்பதாக, கொஞ்சம் ஆத்திரக் கனலைக் கக்கிவிட்டு, அதற்குஅடுத்தபடியாக, மேற்படி சதிபற்றி வெளியிட்டிருக்கிறார்.

சூசகமாக புரிந்து கொள்ளும் திறமையுள்ளோர் வேண்டுமானால் தெரிந்து கொள்ளட்டுமே என்ற எண்ணம் போலும்!

அமைச்சரின் பேச்சையும், அதில் தொனிக்கும் ஆத்திரத்தையும், அதற்குப் பின் அவர் வெளியிட்ட வேதனைச் செய்தியையும் ஒருங்கே வைத்துப் பார்க்கும் போது, யார் அந்தச் சதியிலீடுபட்டோர், என்பது புரியாமற் போகாது.

அவர் கூறுவது போல, காங்கிரசை வெறுத்து வெளியேறுவோரே, அவர்கள், என்றால்— சேச்சே! நினைக்கவே வெட்கமாயிருக்கிறது, நமக்கு.

நேற்றுவரைகூடக் குலவியோரா, இந்த நீசத்தனமான காரியத்திலீடுபட்டோர்?

பதவி என்ன, அவ்வளவு பலாத்கார முறைக்குக்கூடவா தூரத்துகிறது, இந்தப் 'பாரத புத்ரர்களை!'

"ஒரு சிலர்"—அமைச்சர் அறிவிக்கிறார்.

ஒரு பெரிய சர்க்காரைக் கவிழ்க்குமளவுக்கு அந்த ஒரு சிலருக்குத் துணிவு வந்ததென்றால், அகில உலகும் புகழ்வதாகப் போற்றப்படும் டில்லி சர்க்கார், என்ன, ஊதியதும் பறக்கக்கூடிய இலவம் பஞ்சா!

அல்லது, அவ்வளவு தூரம் திறமையும் பலமும் உள்ளவர்களா, அந்த ஒரு சில பெரிய மனிதர்கள்? காங்கிரசிலிருப்பது, பதவிக்காகத்தான் என்பதுதானா, இன்று 'குத்து வெட்டு' என்று குதிக்கும் இந்த குணாளர்களின் இலட்சியம்?

நேற்றுவரை கூடக் குலாவிவிட்டு இன்று குணபேதம் ஏற்பட்டது என்றதும், தங்களது பழைய நண்பர்களை, படுகுழியில் வீழ்த்தத்தானா, காங்கிரஸ் கூடாரம், இவர்களுக்குக் கற்றுத் தந்தது?

இப்படியெல்லாம் கேள்விகள் எழும்பத்தான் செய்யும்.

இக்கேள்விகளை, அன்பர் அமைச்சர் எதிர்பார்த்தாரோ இல்லையோ. வேகத்தில் நமக்கு இந்த விஷயத்தை வெளியிட்டிருக்கிறார்.

திடுக்கிடக்கூடிய செய்தி இது.

ஒரு வேளை, காங்கிரசிலிருந்து வெளியேறுவோரின், பதவியாசை பற்றி, மக்களுக்குத் தெரிவிக்கும் நோக்கம்கூட, ஒரு காரணமாக இருக்கலாம்—இந்த விஷயம், அவர் பிரசங்கத்தில் வந்ததற்கு!

ஆனால், விஷயம் இலேசானதல்ல 'ஏனோதானோ' என்று எண்ணுவதற்கு! சர்க்காரையே கவிழ்க்குமளவுக்கு சதி நடைபெற்றிருக்கிறது.

அதுவும், காலாகாலத்தில் கண்டு பிடிக்கப்பட்டு முளையிலேயே கிள்ளப்பட்டதென்று அறிவிக்கிறார், அமைச்சர்.

இருந்தும் விபரம் தரவில்லை, நமக்கு.

வழக்கும், தொடரவில்லை—பாகிஸ்தான் போல.

ஏன்? என்ன காரணம்?

## அவசர ஆராய்ச்சி!

இதோ புதிய சரித்திர ஆராய்ச்சி. மிக, மிக அவசியமானது அத்தியாவசியமானது!

வெற்றிலைப்பாக்கு போட்டுக் கொள்கிறீர்களே—அதுதான் தாம்பூலம் தரிக்கிறீர்களே—அது எந்தக் காலத்திலிருந்து என்று தெரிய வேண்டாமா? அதுபற்றி ஆராய்ச்சி செய்யவேண்டாமோ!

வாய் சிவந்தால்மட்டும் போதுமா? சிந்தனையும் சிவக்க வேண்டுமே!

அதற்காக, வெகுபாடுபட்டுக் கண்டுபிடித்துள்ளார் பாட்னாவிலுள்ள பந்தர்கார் ஓரியண்டல் ஆராய்ச்சி அவையினைச் சேர்ந்த பி. கே. கோடு!

கி. பி. 473ல்தான் தாம்பூலம் பற்றிய முதற்குறிப்பு வருகிறதாம்! இந்தப்பழக்கம், குப்தர்காலத்தில், ஜாவா, சுமத்திரா போன்ற நாடுகளிலிருந்து, இந்தியாவுக்குவந்துசேர்ந்தது என்று கூறியுள்ளார்.

சிவந்தவாயர், இனிசிவந்தசிந்தனையாளராகிவிடுவர்.

வரலாற்றாராய்ச்சி இப்படி தாம்பூலத்தில் போய் நிற்கிறது. ஆனால் நாம் எதையெதையோ செய்து நம் வரலாற்றையாவது நல்ல முறையில் விரிவுபடுத்த, விளக்கமடையச் செய்ய முயல்கிறோம்!


**பச்சையப்பன் கல்லூரி**

**காஞ்சிபுரம்**

**2-7-51ல் திறக்கப்படுகிறது**

அறிஞர் சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல்., டி. அவர்கள் தலைமையில், அநுபவமும் திறமையும் நிறைந்த விரிவுரையாளர்களால் எல்லா வகை பாடங்களும் கற்பிக்கப்படும்.

பாடப் பிரிவுகள்

Maths, Physics, Chemistry
History, Commerce
History, Logic

20—6—51லிருந்து மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

5-ம் பக்கத் தொடர்ச்சி

முளைக்காதது, ஆகவே எங்களுக்காகாதது என்று கூறிவிட்டால் சரியென்னலாம்.

விஞ்ஞானந்தரும் விருந்தை தினமும் அருந்திக் கொண்டே விபரீதப் பாதையில் நடக்கிறார்கள்.

* * *

ஓடும் ரயிலிலிருந்துகொண்டு உடைந்த கோயிலைக் கும்பிடுகிறார்கள்.

வேகமாகச் செல்லும் மோட்டாரில் சென்று, தேர் இழுக்கிறார்கள், திருவிழா நடத்துகிறார்கள்.

தனக்களிக்கப்பட்டுள்ள விஞ்ஞான வசதிகளைப்பற்றி யறிந்து கொள்வதில்லை. அதனை ஆக்கியோர்கள் யார், யார் என்றுகூடத்தெரிந்து கொள்வதில்லை. அதே நேரத்தில் இந்த வசதிகளைத் தராத, அவரது பழங்கால ஏற்பாடுகளைப் பாராட்டுகிறார்கள்.

ஏன்? இந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் எதையும் அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. கண்டுபிடித்திருந்தால் அதன் அருமை தெரியும் பெருமை புரியும்!

ரேடியோ எப்படி இயங்கி எங்கோ பாடும் பாடல்களையும், பேச்சுகளையும் கேட்கச்செய்கிறது, அது எப்படி முடியும் என்ற எண்ணம் பிறக்க வழியில்லை. அது அவர்களுக்குச் சுலபத்தில் கிடைக்கிறது!

அதற்காக செலவிடப்பட்ட சிந்தனை அவர்கள் நாட்டைச் சேர்ந்ததுமல்ல—அவர்களுக்கு விளக்கப்பட்டதுமல்ல!

இவைகளை மனதில் எண்ணிக்கொண்டுதான் சர். சி. வி. ராமன் நம் நாடு பின்னடைந்துள்ளது. அதுவும், விஞ்ஞானப் பயிற்சியில் அடிப்படையிலேயே தவறிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

சந்திரமண்டலம் போக மாநாடு கூடுகிறார்கள்! இங்கோ, விஞ்ஞானத்தின் விருந்தையும் விடமுடியவில்லை. பழைய ஏற்பாடுகளையும் தள்ளிவிட முடியவில்லை. இரண்டுக்குமிடையே சங்கட மண்டலத்திலேயே இருந்து கொண்டு தவிக்கிறார்கள்!

சந்திர மண்டலம் போகவேண்டாம் இவர்கள்—சங்கட மண்டலத்தை விட்டு சாதாரண அறிவு மண்டலம் வந்தால் போதும்!

## வடார்க்காடு மாவட்ட சமூகநீதி, எழுத்துரிமை, பேச்சுரிமை மாநாடுகள்

30—6—51, 1—7—51 சனி, ஞாயிறு நாட்களில், திருப்பத்தூரில், ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில், அமைந்துள்ள வி. எஸ். பழநிசாமி பந்தலில், சி. எம். சுப்பிரமணியம் அரங்கில், மாநாடுகள் நடைபெறும்.

சமூகநீதி மாநாடு, தோழர் க. அன்பழகன் எம். ஏ. தலைமையில் சென்னை, கார்ப்பரேஷன் கவுன்சிலர் தோழர் வி. முனுசாமி அவர்களால் துவக்கிவைக்கப்படும்.

பேச்சுரிமை, எழுத்துரிமை மாநாடு, தோழர் ஈ. வே. கி. சம்பத் தலைமையில், தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்களால் துவக்கி வைக்கப்படும்.

இரண்டு நாட்களிலும், சி. என். ஏ., நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி நடிக்கும் சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம் நாடகங்கள் நடைபெறவும் ஏற்பாடாகி வருகிறது.

மாநாட்டில், தோழர்கள் சி. என். அண்ணாதுரை, எம்.ஏ., இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., என். எஸ். இளங்கோ, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கே.ஏ. மதியழகன், பி. ஏ., நாரணதுரைக் கண்ணன், மனோகரன், ஏ. கே. வேலன், சி.பி. சிற்றரசு, இராம-அரங்கண்ணல், ப. உ. சண்முகம், என். வி. நடராசன், தில்லை-வில்லாளன், பி.ஏ. (ஆனர்ஸ்), சத்தியவாணிமுத்து அறிஞர் அப்பாதுரை, எம்.ஏ.எல்.டி. மற்றும் பலர் கலந்துகொள்வர்.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் குழுவினரின் வில்லுப் பாட்டு, திருச்சி லோகநாதன், நாகூர் அனீபா, என். எஸ். கே. பிலிம்ஸ் கே. ஆர். செல்லமுத்து ஆகியோரின் இன்னிசை உண்டு.

சமூகநீதி மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் இ. எல். இராகவன், பி. ஏ., பி. எல்; எழுத்துரிமை, பேச்சுரிமை மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் வி. பி. ராஜாபாதர், செயலாளர் தோழர் எம். பி. வடிவேல், உதவிச் செயலாளர்கள் தோழர்கள் டி. கே. கோவிந்தசாமி, க. நெடுஞ்சோழன், எம். முனிரத்தினம், விளம்பர உறுப்பினர்கள் தோழர்கள் மு. நடேசன், ஆர். குப்புசாமி, ஏ. பி. முருகேசன், மு. தருமலிங்கம், தொண்டர்படைத் தலைவர்கள் தோழர்கள் கிருட்டினன் திருநாவுக்கரசு, பொருளாளர் தோழர் இருசன். பி.ஏ., பி.எல், வரவேற்புக் குழுவினர் மாநாடுகளை வெற்றிகரமாக நடத்த எல்லா ஏற்பாடுகளையும் வெகுசிறப்பாக செய்து கொண்டுள்ளனர்.

## மூடாதீர்!

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கோவூர், கருங்குழி ஆகிய இரு ஊர்களிலுமுள்ள இரண்டு உயர்நிலைப் பள்ளிகளையும், மதுராந்தகத்திலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியையும், செங்கற்பட்டு ஜில்லா போர்டார், மூடிவிட முடிவு செய்திருப்பதாக, தெரிய வருகிறோம்.


மூன்று உயர்நிலைப்பள்ளிகளையும், பொருளாதாரம் சரிவர இல்லாத காரணத்தால், மூடிவிட உத்தேசித்துள்ளனராம், ஜில்லா போர்டார்.

நாடெங்கும் கல்வி மணம் பரவ வேண்டுமென்று, எல்லோரும் விரும்பும் இந்த நேரத்தில், கல்வி நிலையங்களை மூடிவிட, முனைவது, மிகமிக வருந்தக்கூடியகாரியம்மட்டுமல்ல; பொதுமக்களின் அறிவு நீரோடையை, அடைத்து மூடும் செயலாகும்.

'பணமில்லை' என்று காரணம் காட்டி, பாலகர்களின் படிப்பில், மண்வீசச் செய்வதைவிட, எப்படியாவது அந்தக் கல்வி நிலையங்களை நடத்த முனைவதுதான், நல்லது. அதற்கேற்ற பணவசதியை ஆளவந்தாரிடமிருந்து பெறும் வசதியும் வாய்ப்பும் செங்கற்பட்டு ஜில்லா போர்டாருக்கு இல்லாமலில்லை. ஏனெனில் ஆள்வோரைப்போலவே, ஜில்லாபோர்டை நிர்வகிப்பவரும் காங்கிரசார்தான், எனவே, தமது சர்க்காரை வலியுறுத்தி, வேண்டிய உதவிகளைப் பெறுவதில், ஜில்லா போர்டார் முனைய வேண்டும்.

அதை விட்டுவிட்டு, இருக்கும் பள்ளிகளையும் மூட நினைப்பது, பாதகமான காரியமாகும். பள்ளிகளை நடத்தும் வழிவகைகளைக் காணும் வேலையில் முனையும்படி ஜில்லா போர்டாரைக் கேட்டுக் கொள்கிறோம். பள்ளிகளை மூடாதீர் — படிப்பற்ற சமுதாயத்துக்கு துரோகம் செய்யாதீர்!





தொடர் கதை

# யாத்திரை

தில்லை-வில்லாளன்.

## 2

லீலாவுக்கு

## மங்கை

[ஓடிய கதை:— சுந்தரம், தன் கல்லூரித் தோழி பத்மாவைக் காதலித்தான். அவள் பெற்றோரின் வற்புறுத்தலால் பார்த்திபன் என்ற வாலிபனை மணந்துகொண்டாள். காதல் தோற்றுவிட்டது. கடமை வென்றது. அந்தத் திருமணத்திற்கு வர முடியாது வாழ்த்து மட்டும் அனுப்பினாள் பத்மாவின் தங்கை லீலாவின் இளந்தோழி மங்கை அவள் வாழ்விலேயும் ஒரு புயல்...]

ஆண்களிலே துரோகிகள் ஏராளம் உண்டு; இருக்கிறார்கள் சாகாமல்! ஆனால் பத்மாக்கள் இருக்கக்கூடாது என்பது என் அபிப்பிராயம் — தெளிவான முடிவு! பெண் கூண்டுக்கிளி என்பது எனக்குத் தெரியும். அவளுக்கு இருக்கிற சங்கடமான சூழ்நிலை எனக்குப் புதிதல்ல—ஏனெனில் நானும் ஒரு பெண்தானே! பத்மா ஆரம்பத்திலேயே சுந்தருக்குத் தெளிவற்ற ஒரு நம்பிக்கை என்ற சுந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுத்திருக்கக் கூடாது. அது தவறு. பெண் புத்தி பின் புத்தி...என்று சில பித்தலாட்டக்காரர்கள் சொல்வார்களே, அதற்கு இலக்கியம்போல ஏன் நடந்துகொண்டாள்? கடமை அப்பொழுது எங்கு படுத்துறங்கியது? வளரும் நம்பிக்கை படர்ந்துவரும் தீ போல! சிறிதாக இருக்கும் பொழுதே அணைத்துவிட்டிருந்தால் எம். எப். எஸ். மோட்டார்கள் வந்தும் பலன் காணாத் கையறு நிலை ஏற்பட்டிருக்காதே! சுந்தருக்கு சோகம், பத்மாவுக்கு பதட்டம், பார்த்திபனுக்கு அரை குறை ஒத்துழைப்பு.....ஏன் இந்த பின்னக் கணக்கு?

கடைசியாக சுந்தர் எழுதினதாகச் சொல்கிறாயே ஒரு மடல்—அவன் ஆவித் துடிப்பை எடுத்துச் சொல்ல வந்து ஏமாந்துபோன காகிதத் தூது—அதனை நீயும் படித்திருக்கலாம். உன் தாய் படித்தவுடன் என்ன சொன்னாள்? தந்தையாரிடம் உன் தமக்கை வாதாடினாரா? பயந்துகொண்டு இருந்துவிட்டாள். இப்பொழுது மட்டும் துணிந்து சொல்கிறாள் கடமைக்கு நான் தலைவணங்கி விட்டேன் என்று! பத்மா மன்றாடியிருந்தால் உன் தாய் ஒருநாளும் சுந்தருக்கு... என் மகள் செய்யாத தவறுக்கு தண்டனை அனுபவிக்க அவர்களால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அவள் விரும்பாத நிலையில் வீண் தொல்லைகளை ஏற்படுத்துவது முறையன்று, சரியில்லை......என்று செய்தியனுப்புவாளா? சுந்தர் செய்த தவறு என்ன? பிறகு ஏன் பத்மா இந்த மாபெரும் துரோகம் செய்து விட்டாள்?

இந்த நிலைமையில் காதல் கடமை யென்று பேசுவது தவறு. இளைஞர்களுக்கு, பருவக் கூடாரத்தின் நுழைவு வாயிலிலே நிற்கும் 'பக்குவக்' குமரர், குமரிகளுக்கு காதல் கடமையாகிறது. அந்தக் கடமையைச் சுட்டிச் சாம்பலாக்குவதற்குப் பெயர் கடமையல்ல, கட்டுப்பாடு! கடமையும், கட்டுப்பாடும் பத்மா சுந்தர் வாழ்க்கையிலே புகுந்து கடமை அடிபணிய, கட்டுப்பாடு முடிசூடிக் கொண்டது!

இவ்வளவு பேசிய நான் இன்று பத்மாவின் முடிவைப் பாராட்டுகிறேன். அவள் நடந்து கொண்டது சரியென்று கூட வாதாடுவேன் லீலா. நாம் பிரிந்து பல நாள்களாகிவிட்டன. நினைப்பிலே சந்திக்கிறோம், நேரில் அக்கா! நேரில் சந்தித்திருந்தால் பல மாதங்களுக்கு முன்னால் என்னைக் காரியுமிழ்ந்திருப்பாய். எனக்கு வயற்றிலே பிள்ளையடி......ஆனால் கழுத்திலே தாலியில்லை! சுந்தர் நிலையிலே நான் இருந்தேன், இருக்கிறேனடி. நான் ஒரு துரோகனை விரும்பினேன். எல்லாம் சோரம் போய்விட்டேன். கேளடி என் சோகக் கதையை, சற்றுத் தெளிவாய் அது தாங்கி வரும் நீதிகளை. பிறருக்கு எடுத்துரைப்பாய் நீ காணும் பேதைகளை!

தினகரன் என்றால் திருச்சியில் அறியாதவர் யாரும் இருக்க முடியாது. ஆனால் அவனது பெயர் யாருக்கும் தெரியாது. சிலர் சுயபுராணம் என்பார்கள். சிலர் 'அல்டாப்' என்பார்கள். சிலர் 'பிட் நோட்டீஸ்' என்பார்கள். சிலர் ஓலை மகராசா என்பார்கள். சிலர் ஓம்பக் என்பார்கள். சிலர் வெத்து வேட்டு என்பார்கள். சிலர் எல். வி. காம், ஜி. வி. காம் என்று சொல்வார்கள். இப்படி ஆளுக்கொரு அழகுப் பெயர், ஆசைத் திருநாமம் வைத்து அழைப்பார்கள்.

தினகரன் 'தெரியாத்தனமாய்' அவன் பெற்றோர்கள் வைத்துவிட்ட இடுகுறிப் பெயர். மற்றவையோ அவன் உழைத்துப் பெற்ற பட்டப் பெயர்கள்!

சில 'பேமாலங்களை'ப் பார்த்திருக்கலாம் உலகில். எதைச் சொன்னாலும் தனக்குத் தொடர்புடையதாகக் காட்டிக் கொள்வதிலே ஒரு பெருமை, எவரைப் பற்றிப் பேசினாலும், அவர் ஆளும் மந்திரியானாலும், அடிமை வேலை செய்யும் அன்னக்காவடியானாலும் தனக்குத் தெரிந்தவர் என்று பேசிக்கொள்வதாலே ஒரு இன்பம், எந்த சிறு நிகழ்ச்சியானாலும், அதனைத் தானிருந்து தலைமை வகித்து நடத்தித் தந்ததாக, கேட்பவர்கள் அறிந்தவர்களானாலும், அறியாதவர்களானாலும், பொய் பேசுவதிலே ஒரு மதிப்பு, ... கௌரவம் கொண்டு திரியும் பிரகிருதிகள் உண்டு. இந்தக் கூட்டத்திற்கு தினகரன் தலைவன் — தலைவனென்ன, ஈடு இணையில்லாத ஏகச்சக்ராதிகாரி! அந்த போலி உலக பூபதிகள் போட்டியிலே அவனைத்

தவிர வேறு யாராலும் வெற்றி யடைய முடியாது. இது உண்மை!

தேசியவாதிகள் சிலர் கூடியிருக்கிறார்கள் என்று வைத்துக்கொள். அங்கு தினகரன் வந்துவிட்டால் அவன் அவிழ்த்துவிடும் 'அவுட்டா அஸ்திரம்' உப்புக் காய்ச்சும் போராட்டம், சீமைத்துணி மறியல், தபால் நிலையத்தில் நடந்த 'இலங்கை அனுமார்' நிகழ்ச்சி......இப்படி பலவற்றிலும் புகுந்து அண்டபிண்ட சராசரங்களை யெல்லாம் அலைத்துக் கொண்டு போய்விடும். கேட்பவரில் சிலர் முகங்களில் ஈயாடாது. சிலர் வாயைப் பிளந்தபடியே கேட்பர். சிலர் சிரிப்பர். சிலர் முகம் கடுகடுக்கப் பார்ப்பர். அவன் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தவுடன் ஓரே கை தட்டலும்; கேலியும், கிண்டலும் அவனைத் துரத்திவரும். தினகரன் இதைக் கண்டா திணறிவிடுவான்? பகுத்தறிவு வாதிகளாக இருந்தால் அவன் இந்தி எதிர்ப்பு, விதவைகளுக்கு வாழ்வளிக்கும் போர், புரோகித மறுப்பு, சேரி வாழ்வோர் செம்மையடைய அறப் போராட்டம்......இவைகளிலே அவன் தலைமை வகித்து, நடத்தியதாகக் கொஞ்சமும் நெஞ்சில் பயமோ, பதட்டமோ இன்றிக் கூறுவான். கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள்......என்ற பழமொழி அவனுக்குத் தெரியாததல்லவே!

ஊரிலே தேசியத் தலைவர் வந்தாலும் அங்கிருப்பான். தன் மானத் தோழர்கள் வந்தாலும் அவர்களோடு சுற்றுவான். இந்த 'டக்புக்' ஆசாமியிடம்தானடி சிக்கிக்கொண்டேன். இன்று தப்பித்துக்கொண்டேன். ஆனாலும் அந்த துயரத் தொடர்ச் சித்திரக் காட்சிகளை என்னால் மறக்க முடியவில்லை. இந்த குணாளனைச் சந்தித்ததும், காதல் கொண்டதும், காம விளையாட்டாடியதும்...பெரிய கதையடி யம்மா... அம்மாடி......அதை நினைக்கும் பொழுதே பெருமூச்சு வருகிறதடி, லீலா.

சொல்கிறேன், சுருக்கமாக, ஆனால் விளக்கமாக! அதுவும், நீ தந்த உன் தமக்கையின் காதல் முறிவுச் செய்தியோடு ஒப்பிட்டு, ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக் காட்டி!

அப்பொழுது நான் சிதம்பரத்தை யடுத்த, கொள்ளிட ஆற்றங்கரையிலே அழகாக அமைந்திருந்த சிற்றூர், பெயர் சொல்லட்டுமா, லீலா உனக்கு ஏன் ஊரும், பெயரும்......அங்கு நான் ஆசிரியையாக இருந்தேன். உயர்நிலைப் பள்ளியை விட்டு ஆசிரியப் பயிற்சியை முடித்தவுடன் கிடைத்த முதலிடம் அதுதான். அங்கு குடியேறினேன். லீலா, நீ என் தாயைப் பார்த்திருக்கிறாயே, சொர்ணம்மாள்...... வெளுத்ததெல்லாம் பால் என நம்பிவிடும் சுத்த 'வெகுளி'......சிடுசிடுவென சில சமயங்களில் பேசிவிடுவாள். அவ்வளவுதான். வஞ்சனை அவளுக்குத் தெரியாத வார்த்தை. சூது அவள் செய்தறியாத செய்கை. சூது வாதறியாத பேதை...என்று எழுதத் தெரிந்தவர்கள் பெண்களைப் பற்றிக் குறிப்பிடுகிற பொழுதெல்லாம் வழக்கமாக 'வாந்தி' எடுத்துவிடுவார்களே, அதை என் தாய்க்கு முழுக்க முழுக்கப் பொருத்திக் காட்டலாம். மனிதன் குழந்தைப் பருவத்திலே தன் வாழ்க்கைப் பாட்டையிலே, தனது ஆயுள் யாத்திரையைத் தொடங்கி முடிவிலும் குழந்தையாகவே தன் கடைசி மூச்சை விடுகிறான். உலகம் உருண்டையென்பதற்கு உதாரணம் சொல்லும் நில நூல் ஆசிரியர் பந்தைச் சுற்றி வருகிற எறும்பைத் துணைக்கழைப்பார். அதாவது தொடங்கிய இடத்திற்கே கடைசியில் வந்து சேர்கிறதாம். அதுபோல மனிதனும் உலகத்தைச் சுற்றி ஆரம்பப் புள்ளியை வந்தடைய முடிகிறது. ஆகவே உலகு உருண்டையென்பார்கள். அதுபோலவே மனிதன் குழந்தையாகிறான் அவனது வாழ்வின் அந்திப் பொழுதில்! நான்கு கால்களிலே வாழ்வைத்தொடங்கி மூன்று கால்களிலே முடிக்கிறான். என் தந்தை சரவண முதலியார் ஒரு குழந்தை. இந்தக் குடும்பத்திற்கு ஒரு பெண் நான். அவர்கள் இருவரையும் காப்பாற்ற வேண்டியவள் நான்...இது உனக்கு அரைகுறையாகத் தெரியுமல்லவா?

ஒரு நாள் எனக்கொரு ஆசை... அந்தப் பைத்தியக்கார ஆசை என் வாழ்க்கைப் புத்தகத்தில் ஒரு பயங்கர அத்தியாயத்தை எழுதிவிட்டது. அப்படி யொன்றும் நான் பக்தி மிக்க புனிதவதி—காரைக்காலம்மையார் பரம்பரை இல்லை. ஏனோ, திருச்சி தெப்ப உற்சவம் பார்க்க வேண்டும் என்று விரும்பினேன். நான் பெண் பிறப்பில்,—செயலில், குடும்ப நடவடிக்கைகளில் நான் ஆண்தானே! ஆகவே என் பெற்றோர்களை அழைத்துக்கொண்டு புறப்பட்டேன்.

திருச்சியில் ஆண்டவ தரிசனம் நடந்துவிட்டது. வெகுநேரம் வரை உற்சவம் பார்த்தோம். எங்கள் மனம் திருப்தியைத் தழுவி மகிழ்கிறவரைக் கண்டு களித்தோம்.

நள்ளிரவு வந்தது...

அந்தப் பொல்லாத இருட்டு...... திருட்டுக் குணம் படைத்த கும்மிருட்டு...வந்துவிட்டது!

எங்காவது படுத்துறங்க வேண்டும். எங்கே தங்குவது?...திருச்சியில் யாரைத் தெரியும்?...வீதி வீதியாகச் சுற்றிக் கொண்டிருந்தோம். எனக்கு கலைந்த கனவைப் போல ஒரு பள்ளித் தோழியின் நினைவு... பார்வதி யென்பது அவள் பெயர்... அந்தப் பெயரைக் கொண்டே அவளிருக்கும் இடத்தைக் கண்டு பிடிப்பது அவ்வளவு எளிதான காரியமா...குடைக் கடையிலே மறந்து வைத்துவிட்டு வந்த குடையைத் தேடுவது போல! இப்படி நினைத்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தேன். என் பெற்றோர்கள் நடக்க முடியாமல் தள்ளாடித் தள்ளாடி கொஞ்சம் தொலைவில் வந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு வீட்டுத் திண்ணையில், நாலைந்து வாலிபர்கள் உட்கார்ந்து ஏதோ 'அரட்டை' அடித்துக் கொண்டிருந்தார்கள்.

"ஐயா..." என்றேன், அவர்கள் அருகில் சென்று.

திடுக்கிட்டுத் திரும்பினர். அந்தக் கூட்டத்திலே ஒருவர் தான் நான் முன்னர் குறிப்பிட்ட ஸ்ரீமான் 'சு. பு.' அந்த 'மேதாவி'யைப் பார்த்தேன். எனக்கு அவன் ஒரு உயரிய சிந்தனை படைத்த ஒழுக்கசீலன் என்று பட்டது. அப்பொழுது அவனைப்பற்றி முழுக்க அறிந்திருந்தால் இந்த இழிகதை நடந்திருக்க விட்டிருக்க மாட்டேன். அவன்தான் தட்டுத் தடங்கலில்லாமல் என்னோடு பேசத் தொடங்கிவிட்டான்.

(தொடரும்)



85536

# பொதுவாழ்வு

## ஒரு கண்ணோட்டம்

தூக்குமேடை!

கேலிச் சிரிப்புடன் காட்டினர்; கிஞ்சித்தும் கவலை கொண்டதில்லை அம்மாவீரர்கள். துணிவோடு ஏறினர், அவர்கள் கண்களிலே புது ஆவேசம் பிறந்தது. தூக்கு, அவர்களது உயிரைப் போக்கிற்று. பிணமாயினர்—ஆனால், அவர்களது புகழ் மணம், மறையவில்லை; மாறாக, எங்கும் வீசலாயிற்று.

சித்திரவதை!

அவர்கள் சிந்தையைக் குலைக்கவில்லை. சிறிதும் தயங்கவில்லை. 'இதெல்லாம் வரும்' என்று எதிர் பார்த்ததுபோல, அவர்கள் கண்களிலே புது ஒளி கிளம்பிற்றே தவிர, நீர் எழும்பவில்லை.

துப்பாக்கிகள்!

கர்ஜித்ததுண்டு, பலமுறை. ஆனால், குலைந்து போனதில்லை, அந்த வெற்றிச் செல்வர்கள். வீரம், அவர்கள் இதயத்திலே விளையாடிற்று. மயங்கியதில்லை, தயங்கியதில்லை; மார்பைக் காட்டினர்.

தடியடி!

எத்தனையோ தடவைகள், அவர்கள் தலைகளை உடைத்ததுண்டு, கால் கைகளை ஒடித்ததுண்டு, இரத்தத்தைக் கீழே ஓடச் செய்ததுண்டு.

நச்சுக் கோப்பைகள் ஒரு சமயம்! தீச்சுழல் வேறொரு நேரம்! சாட்டையடி, இன்னொரு வேளை! உயிரோடு சாவுக்குழியில் தள்ளப்பட்ட கோரம், மற்றொரு நேரம்! மக்கள் வாழ்க்கையைச் செப்பனிடுவதற்காகக் கிளம்பியோர் பெற்ற, கொடுமைகளும், நீங்கும், பலப்பல. காலத்துக்கும் நேரத்துக்கும் ஏற்றபடி, அவர்கள் உடலையும் உள்ளத்தையும், ஆள்வோரும், அவர்தம் கொள்கைகளை வெறுத்தோரும் செய்த கொடுமைகள் ஒன்று, இரண்டல்ல!

சமுதாய சீரமைப்புக்காக, சுய வாழ்வை ஒதுக்கி, பொதுவாழ்வில் ஈடுபட்ட அப்போர் வீரர்கள், ஆங்காங்கு அனுபவித்த, கொடுமைகள்—உலகவரலாற்றைப் பார்ப்போரின் உள்ளங்களைக் குலுக்கும்.

அவ்வளவு வேதனைகள் அவ்வீரர்களுக்கேற்பட்டதுண்டு. 'அரசாங்கம்' என்பதன் மீது அமர்ந்தோர், ஒரு சமயம், அம்மாவீரர்களின் எதிரிகளாயிருப்பர். இன்னொரு சமயம், அம்மாவீரரின் பேச்சும் செயலும் பிடிக்காதோர், விரோதிகளாயிருப்பர்.

மத மடங்கள் ஒரு நேரம் பாயும்! பணபீடங்கள் இன்னொரு நேரம் உறுமும்! அரசு அதிகாரம், மற்றொரு சமயம் தூக்கு மேடை-துப்பாக்கி-தடியடி, ஆகியவைகளைக் காட்டி கர்ஜிக்கும்!

ஆனால், இதையெல்லாம் கண்டு, பொது மக்களுக்காக உழைக்க முற்பட்டோர் கலங்கியதில்லை—மிரண்டோடியதுமில்லை.

சரியென்று நினைத்தமைக்காகப் போராட, சாவு, தடுத்ததில்லை அவர்களை; அதற்காகப் போராடி, சாவதே, தமது வீரத்துக்குக் கிடைக்கும் விருது, என்று அவர்கள் கருதியதால்.

* * *

பசிக்கொடுமை தாங்கமுடியவில்லை—உணவில்லாததால் உலர்ந்த சருகுபோலானாள் மனைவி. அவளது கண்களோ, கீழே செத்துக்கிடக்கும் குழந்தையை, கண்ணீரால் கழுவிக் கொண்டிருக்கின்றன. அவனோ அருகே உள்ள மேஜையின்மீது அமர்ந்து எழுதுகிறான், கடிதம்—தனது நண்பனுக்கு: "பாலில்லை—எனினும் பசி தாங்காமல் என் குழந்தை, தாயின் மார்பைச் சப்புகிறது. பாலிருந்தாலன்றோ வர! ஆனால் குழந்தை, அதை, எப்படி அறியும். ஆவலோடு, சப்புகிறது. பாலுக்குப்பதில் வரண்டுபோன என் மனைவியின் மார்பிலிருந்து இரத்தம் வடிகிறது. அதையும் விடவில்லை, என்குழந்தை. குடித்தது— செத்தது! எவ்வளவு கொடுமை, நான் என்ன செய்வேன், என்செல்வம். அருமை நண்பா, அழுத்துயரோடு நிற்கும் மனைவியின் கண்ணீர் என்னைச் சுடுகிறது. துடிக்கிறாள் அவள். நானென்ன செய்வேன்?"

உலகின் பேரறிஞர் காரல் மார்க்ஸ், பட்ட கஷ்டங்களிலே ஒரு காட்சி இது.

இதுபோல, மக்களின் வாழ்வைப் பெரிதென மதித்து, தம்மை அதற்கு அர்ப்பணித்த வீராதிவீரர்களின் குடும்பங்களெல்லாம், வேதனையில் மூழ்கியவைதான்.

பட்டினிக் கொடுமையும் பணத் தொல்லையும், உற்றார் தூற்றலும், அவர்களைச் சுற்றி வளைத்துக் கிடந்ததுண்டு.

ஒருபக்கம், தனது கொள்கைகளை எதிர்ப்போரும் மறுப்போரும் விரோதிகளாயிருப்பர்!

இன்னொருபக்கம், குடும்பத்தில் புயல் வீசும்!

இரு கொள்ளி எறும்பு போல் தத்தளித்தாலும், இலட்சிய வீரர்கள், ஏங்கியதில்லை அவைகளை நினைத்து.

மனைவியின் 'ஐயோ' என்ற அழுகுரல், மக்கள் எழுப்பும் 'வாழ்க' என்ற முழக்கத்தால், மறைந்துவிடும். பட்டினிக் கொடுமை, மக்கள் தன்னை ஆதரிக்கின்றனர் என்ற மகிழ்ச்சி முன் சிறு துரும்பாகி விடும்.

* * *

பொதுவாழ்வு — ஒரு சிலந்திக் கூடு. ஆனாலும், அதிலீடுபட்டோர், தளர்வதுமில்லை; அயர்வதுமில்லை.

உலகத்தை உற்றுப்பார்த்து, அதன் வேதனை தாங்காது, அவைகளை ஒழித்து, நல்வாழ்வு காண வேண்டும் என்ற ஒரே எண்ணம், அவர்கள் உள்ளத்தில் குடியேறி விடுவதால், அந்த எண்ணமே; அவர்களோடு பிணைந்துவிடுகிறது.

பரந்து விரிந்துகிடக்கும் மக்கள் கூட்டத்தில் தாங்களும் ஒரு துளியாக, தங்கள் காலத்தைத் தள்ளி விட்டுப் போவது என்பது—கஷ்டமானதல்ல.

ஆனால், இலட்சிய வீரர்களோ, தம்மைப்பற்றி நினைப்பது இல்லை. நினைப்பதே தவறு, சமுதாயத்தை நினைத்து, பிறகு தன்னை நினைக்க வேண்டுமென்பது அவர்கள் சித்தாந்தமாகி விடுகிறது.

பொதுவாழ்வு மகிழ்ச்சி ததும்பும் மலர்த் தோட்டமல்ல; கொளுத்தும் வெய்யிலும், சுழற்றி வீசும் காற்றும், நிரம்பிய பாலைவனம்.

இது, அவர்களுக்கு, நன்றாகத் தெரியும். ஆனாலும், ஈடுபடுகிறார்கள்—தொல்லைகளைப் பெரிதென மதியாது.

இலட்சிய வெறி கொண்டோர், இதுவரை ஆளாகியிருக்கும் கொடுமைப் பட்டியலைப் பார்த்தால், மிகப் பெரிதாகும்.

தமது வாழ்வை பொருட்படுத்தாது, சமுதாயக் கூட்டமைப்பையே, பெரிதென எண்ணி, அதன் சுழற்சிக்குப் பலியானோர் பல்லாயிரக்கணக்கில் உண்டு.

கிளியைத் துரத்துகிறது பூனை. கதறுகிறது அப்பைங்கிளி! அதைக் காப்பாற்றுவது, மிகவும் முக்கியம்.

தன்னைக் காப்பாற்ற வருவோரைக் கண்டு கிளி மகிழும்—ஆனால் பூனை? கோர நகங்களால், பிறாண்டாமல் விடாதே!

இதைப் போலத்தான், சமுதாயக் கேடுகளைப் போக்கும் எண்ணத்தோடு, ஈடுபடுவோர் பெறும் பலனும்.

* * *

போக போக்கியங்களிலே புரளுவோரானாலும், குடிசைக்குள்ளே கொந்தளிக்கும் குடும்பத்தைப் பெற்றோரானாலும், பொது வாழ்விலே ஈடுபட்டுவிட்டால், அவர்கள் ஒரே வரிசையில்தான் நிற்பார்கள்.

'பணம் படைத்தவன், தனது பணிக்காக, அதிகப் பலனை எதிர்பார்ப்பதும், தன் குரலுக்குச் செல்வாக்கு ஏற்பட வேண்டுமென நினைப்பதும்; வாழ முடியாத வறியோன் அவன், ஆகவே அவனுக்கு உரியது கொஞ்சம் பலன்தான், எனவே அவன் பேச்சு எடுபடவில்லை என்பதுமான, வித்யாசம், பொதுப்பணி கொண்டோரிடையிலே உலவாது.

* * *

கிளியைப் பூனையிடமிருந்து விடுவித்துப் பறக்கவிடவேண்டும் என்று எண்ணுவோரும், உண்டு.

அதே நேரத்தில், பூனையிடமிருந்து கைப்பற்றி தன் வீட்டில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று முனைவோரும் உண்டு.

இருவரும், கிளியை விடுவிக்கப் போராடினாலும், முதல் நபரே உண்மையுள்ளமும், நல்லெண்ணமும் கொண்டவரென மதிப்புப் பெறுவார்.

'எனது பணியும் கிளியை விடுவிப்பதுதானே' என்று, வீட்டிற்கு விடுபட்ட கிளியைக் கொண்டுபோக எண்ணுபவன் கூறினால், அதை எவரும் ஒப்பார்!

"துரோகி!"

"பொதுப் பணியின் பேரால், தன் வாழ்வை வளமாக்க நினைப்பவன்"

"சுதந்திரம் தரப்போவதாகச் சென்று, கிளியைத் தன் மகிழ்ச்சிக்காக எடுத்துக் கொண்டவன்" என்ற பழியே பரிசாகக் கிடைக்கும்.

பொதுப்பணி, என்ற பெயரால் தான் பெற்ற செல்வாக்கை, பணப்பெட்டியை நிரப்பும் வழியாக உபயோகிப்பவன், மக்களால் வெறுக்கப் படுவான். அவன் எவ்வளவு அருமையான கொள்கைகளைக் கூறினாலும் அது செம்பாகுமே தவிர, பொன்னாக மதிக்கப்பட மாட்டாது.

* * *

வேதனைகளைத் துச்சமென மதித்து, தூக்குமேடையையும் துப்பாக்கியும், சிறிய போதும் சிந்தை கலங்காது, மக்களின் வாழ்க்கையுயர்வுக்காகப் போராடுபவரே, உண்மைத் தியாகி. அவனே, மக்களின் இதயத்தில் மங்காத நிலவாவான்!

பொதுப்பணி, கஷ்டமானதுதான். ஆனால் அத்துன்பங்களைத் தாங்குவதிலும் இன்பம் உண்டு—கடலுக்குள் சென்று முத்தையெடுத்தபோது எழும்புவது போல.

பொது வாழ்வுக்காக தம்மை அர்ப்பணித்த, மாவீரர்கள், மறைந்து போய்விட்டார்கள். ஆனால் அவர்களது பெயர்கள்—உலகின் நாவிலே, இன்றும் நர்த்தனமாடுகிறது.

மனிதன் பிறக்கிறான் — வாழ்கிறான்—சாகிறான்!

அவன் சாவோடு, அவனுருவமும், அவனைப் பற்றிய நினைவும் அஸ்தமித்துவிடுகிறது.

ஆனால், மக்கள் வாழ்வுக்காக, வீரச்சாவு பெற்றவன் பெயரோ என்றும் அழிவதில்லை.

உண்மைப் பொதுப் பணியாளனுக்குக் கிடைக்கும் உயர்ந்த பரிசு, இதுதான்.

* * *

பொதுவாழ்வு தோப்பில், இலையுதிர் காலம் மட்டும் ஏற்படுவதில்லை—கனி குலுங்கும் காலமும் உண்டு!

பொதுப்பணி புரிவோரின் உண்மையுள்ளமும், தூய்மை எண்ணமும் துலாக்கோல் ஏறும் சந்தர்ப்பம் அதுதான்!

காங்கிரஸ், அந்த தராசில் தன்னை ஏற்றி நிறுத்தியுள்ளது!

அதன் விளைவுகளைத்தான் இன்று காண்கிறோம்.

பொதுவாழ்வு, காமவேள் நடனசாலையாகக் கருதியோரின் தொகை அதிகம் அதில்—ஆகவேதான் பொது வாழ்வின் 'இருள் பகுதி' இன்று திருப்பப்பட்டுள்ளது!

பொது வாழ்க்கையில், மக்கள் மனதைக் கவரும் வகையில், பணி புரிந்துவிட்டு, பணியின் பலன் கிடைத்ததும் 'அதனால் தனக்கென்ன' லாபம்? என்று கணிப்போரின், கதி, இன்றைய 'காங்கிரஸ்' போலத்தான் ஆகும்.

நல்லதுக்குப் போராடி, அந்நன்மை கிடைத்ததும், அதை தன் சுயநலத்துக்கும் பயன் படுத்தினால், பேரும் புகழும் மறைவது மட்டுமல்ல—மக்களின் கண்டனத்துக்கும் 'துரோகி' என்கிற பழிச் சொல்லுக்கும் ஆளாவார்கள்.

பொது வாழ்வு இன்பந் தேங்கும் சுனையல்ல! ஆனால், தன் பெயரை, உலகு நிற்கும் மட்டும், பொறித்துக் காட்டும், பொன் ஏடு!

Edited Printed & Published by C. N. Annadurai M A at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram

59

REGD No. M. 4642

5 JUL 1951

# திராவிடநாடு

விலை அணா 2.

இலங்கை 15 சதம்

மலர் 10. | 24-6-51. | இதழ் 1.

## மதம்

மனித சமுதாயத்தை வளராமல் தடுத்து நிறுத்தும் ஒரு பெரிய முட்டுக்கட்டை, 'மதம்'. அறியாமையின் பிறப்பிடமும், அடிமை வாழ்வின் பலி பீடமும், மதத்தால்தான் உருவாக்கப்படுகின்றன: பலர் நிரம்பிய மனித இனத்தில் மிகப் பெரும்பாலானோரை, ஒரு சிலர் தங்கள் மிரட்டலில் அடங்கும்படியும், அதட்டலில் ஒடுங்கும்படியும், ஆட்டிவைக்கப் பயன்படுத்தும் நல்ல சாதனமாக இருப்பது 'மதம்'.

சிம்மாசனங்களின் பராமரிப்பும், மதக் கோயில்களின் பேராதரவும், குருமார்களின் கவலையும், மதத்தின்மீது அதிகரித்ததற்குக் காரணமே, மதம் அவர்களது வாழ்வுச் சுரங்கமாக இருப்பதுதான்.

"மனித இனம், தானுண்டு தன் வாழ்வுண்டு என்று இருத்தல் கூடாது. அவர்களுடைய சுகத்துக்காக அவர்கள் பாடுபடக்கூடாது" —இவ்விதம், மன்னன் கூறினான். மக்கள், தன்னை நினைத்தே உழைக்கவேண்டும்—பாடுபடவேண்டும் என்கிற சுயநலத்தோடு.

"கேள்விகள் போடாதே! நான் சொன்னதைநம்பு. வேதம், கடவுளின் திருவாக்கு. அதை அப்படியே நம்பவேண்டும். சந்தேகம் எழுப்பக்கூடாது. சந்தேகிப்பதே பாபம்"—இப்படி மிரட்டினான், மதகுரு. மனித இனம், தன் கட்டளைக்குக் கீழ்ப்படியும் ஆட்டுமந்தையாகவே இருக்க வேண்டும் என்ற, ஆசையோடு.

சிம்மாசனம், உடலுக்கு இரும்புக்கூண்டு தந்தது: மதபீடம், மனதுக்கு இரும்புக்கூண்டு அமைத்தது.

இதனால்தான், மனிதனின் அறிவு, வளரவில்லை. பழமை என்கிற பாம்புக்கும், சம்பிரதாயம் என்கிற கழுகுக்கும் பலியாகிக்கொண்டிருக்கிறான்.

அரசோச்சும் சுயநலமிகளுக்கும், மதத்தால் மனோகரமாக வாழும் குருமார்களுக்குமிடையே, நிரந்தரமாக இருந்துவரும் ஒற்றுமைக்குள்ள காரணமே, பரஸ்பரம் இருவரும் 'மதம்' என்ற பெயரால் மக்களை அடக்குபவர்களாக இருப்பதுதான்.

இங்கர்சால்

## மூட நம்பிக்கை

அறியாமை என்கிற அஸ்திவாரம், நம்பிக்கை என்கிற தளம், வீணாசை என்கிற மேல்தளம் ஆகியவைகள் அடங்கிய கட்டிடமே 'மூட நம்பிக்கை'.

மூட நம்பிக்கை, அறியாமை பெற்றெடுக்கும் குழந்தை; துன்பங்களுக்கெல்லாம் தாய்.

மத குருக்கள், பணவலை வீசி, பொருள் திரட்டும் ஆசையோடு, சிருஷ்டித்த பல அழுக்குக் குட்டைகள், மூட நம்பிக்கையால் அமைக்கப்பட்டவைதான். ரிஷீஸ்வரர் மகாத்மியம், தாயத்து மகிமை, சகுன சம்பிரதாயம், பேய் பிசாசு கற்பனை, பில்லி சூன்யம் இவை யாவும் மத குருக்கள் உண்டாக்கிய, பண வலைகள்தான்.

பகுத்தறிவு ஒளி எழும்பினால், எதையும் சிந்தித்துணரும் சக்தி வளர்ந்தால், நிகழ்ச்சிகளை நிறைபோடும் திறமை அதிகரித்தால், மூட நம்பிக்கை, விரண்டோடும்; ஒழியும்.

அதிசயம், நடக்கமுடியாதது, என்று கூறுவதெல்லாம் பித்தலாட்டமே தவிர உண்மையல்ல.

மோட்சம், நரகம் அங்கே வாழும் தேவதை, பிசாசு—இவை யாவும் கற்பனைகளே.

மூடநம்பிக்கை, மனிதனின் வாழ்வைச்சூறையாடும் புயல். ஓயாத் தொல்லைக்குள் தள்ளும், கோர அலை. மனித மூளையைக் குழப்பி, தன்னம்பிக்கையற்றவர்களாக்கும், சூதுத் திட்டம்.

மூட நம்பிக்கை இருக்கும்வரை, மனித சுதந்திரம் மலராது. இன்ப வாழ்வு அரும்பாது.

மதப் புயல் வீசவும், மாச்சரியங்கள் வளரவும், கடவுள்கள் பெருகவும், மத குருக்கள் அதிகரிக்கவும், காரணமாக இருப்பது, மூடநம்பிக்கைதான்.

மூட நம்பிக்கையால் சரிந்த சாம்ராஜ்யங்கள், பலப் பல. அணைந்துபோன வாழ்வுகள் ஆயிரமாயிரம். துடித்துச் செத்த உயிர்கள், ஏராளம்.

# ★ புதுத்திட்டம்—பூரிப்பில்லை ★

தேள் கொட்டியதுபோல திகைத்துக்கிடந்த சென்னை மாகில மக்கள், எதிர்பார்த்திருந்த ஜூன் 18, வந்து சென்று விட்டது.

இந்திய அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தை அனுசரித்து, கம்யூனல். ஜி. ஓ. சம்பந்தமாக, புதுத் திட்டம் ஒன்றை, அந்த தேதியில் வெளியிட்டிருக்கின்றனர், சென்னை சர்க்கார்.

வகுப்புவாரி முறை வம்பர்களால், சமாதிக்கு அனுப்பப்பட்டதும், அதனால் சண்டமாருதம், தாழ்ந்தோரிடையிலே வீசத் துவங்கியதும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும், நாடு, அறியும்.

வகுப்புவாரி முறை ஜஸ்டிஸ் காரர்களால் உண்டாக்கப்பட்ட ஏற்பாடாயிற்றே, அது ரத்தானால், நமக்கென்ன; என்று இருந்துவிடவில்லை, காங்கிரஸ்காரர்கள்.

சமுதாயத்தின் முன்னேற்றத்தை முடக்கும் செயல் என்றே பலர் சீறினர்; வீராவேசமாகப் பேசினர்; டில்லிக்கு ஓடினர்; தம்மால் செய்ய முடிந்ததெல்லாம் செய்தனர்.

ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கும் தேசியத் தோழர்கள், வகுப்புவாரிப் பிரச்சினையின் மீது, காட்டிய அக்கறையும், ஆவலும், உள்ளபடியே பாராட்டப்பட வேண்டியதுமாகும்.

நம்மைத் தூற்றுவோர்தாம் அவர்கள், நாம் நல்லது செய்தாலும் திட்டித் தீர்க்கும் போக்குத்தான் அவர்களுடையது. ஆனாலும், இந்தப் பிரச்சினையில். அவர்கள் நடந்து கொண்ட முறை, சிறந்தது மட்டுமல்ல; சீர்தூக்கிப் பார்க்கவேண்டியதுமாகும்.

"வகுப்புவாரி முறை, அழிவது அநியாயம்" என்று, மந்திரிமார்களும், சட்டசபை உறுப்பினரும், வெளிப்படையாகவே பேசினர்—உழைத்தனர்.

"வகுப்புவாரிப் பிரச்சினை போய் விட்டது. இதில் நாம் வாளாயிருந்து விட்டால் பழி நமக்கேற்படும். மக்கள் தூற்றுவர். எதிர்க்கட்சிகள், இதையே காரணமாகக் காட்டி வளர்ந்துவிடும்"

இது கூடக் காரணமாக இருக்கலாம், காங்கிரஸ்காரர்கள், கவனம் செலுத்தியமைக்கு.

"தேர்தல் வரப்போகிறது. காங்கிரஸ் பெயரைக் கேட்டாலே மக்கள் வெறுக்கும் இந்த நேரத்தில், கம்யூனல் ஜி. ஓவும் போய், அதைப் பற்றி நாம் பேசாமலும் இருந்து விட்டால், தேர்தலில் தோல்வி தான் ஏற்படும்"

இந்த எண்ணத்தால்கூட, இந்தப் பிரச்சினையில் அதிகக் கவலை கொண்டிருக்கலாம், அவர்கள்.

"நாமும் பார்ப்பனரல்லாத இனம் தானே. நம்முடைய பையனுடைய கதியும் இதுதானே! பார்ப்பனருக்கு மட்டும் சலுகைகளா?"

இதுபோன்ற கேள்விகள், அவர்களிடையும் ஆவேசத்தைக் கிளப்பியிருக்கலாம், இந்தப் பிரச்சினையில்.

எது காரணமானாலும், அவர்கள், கம்யூனல் ஜி. ஓ. விஷயத்திலும், வழக்கம்போல் தூங்காமல், துணிவை உண்டாக்கிக்கொண்டு, சுப்ரீம் கோர்ட்வரை சென்று, பிறகு மேலிடத்தின் கன்னெஞ்சையும் கரையவைத்து, திருத்தமும் பிறகு திட்டமும் தந்திருக்கிறார்கள்.

இந்த உண்மையை நாம் மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்—ஆகவே, ஏன், அவர்கள் அக்கரை காட்டினார்கள்?' என்கிற ஆராய்ச்சிக்குப்போக விரும்பவில்லை.

அதுமட்டுமல்ல, தேசிய நண்பர்களிடையே, பார்ப்பனரல்லாத மக்கள்தாமே நாமும், என்கிற ஆவேசம் இப்பிரச்சினையில் அதிகமாக வெளிப்பட்டிருக்கிறது.

"திராவிட இயக்கத்து ஆசாமிகள் பேசும் பேச்சல்லவா இது; நமக்கேன்? நாம் இந்திய மாதாவின் மைந்தர்கள்—ஆரியராயினும் வேதியராயினும் ஒன்றே!" என்று சமரசம் பேசிகளாயிருந்தோர், அதேபாதையில் இந்தப் பிரச்சினையிலும் நடக்கவில்லை.

வகுப்புவாரி முறை — ஏற்பட்டதுக்குக் காரணம், நாம்தான்.

அதன்மீது, குள்ளநரிகளின் அம்புபட்டபோதெல்லாம், பாய்ந்தெழுந்ததும் நமது இயக்கம்தான். இந்த உண்மை நாடறிந்ததொன்றாகும்.

சமுதாயத்திலே, எல்லா நிலையிலும் பிற்போக்கடைந்து கிடக்கும் ஒரு மாபெரும் இனத்தின் விடுதலை இயக்கம் நம்முடையது. ஆகவேதான், நமக்கு இந்த விஷயம் மிகவும் முக்கியமாக இருந்தது.

ஆனால் தேசியநண்பர்கள் அப்படிப் பட்டவர்களல்ல! நமது திசைவரை நோக்கவும் கூசும் கண்கள், அவர்களுடையது. நாம், நமது இன விடுதலைக்காகப் பேசினால், அவையெல்லாம், 'வகுப்புவாத' மாகப்படும், அவர்களுக்கு. வகுப்புத் துவேஷிகள்!-தடைபோடு, அவர்கள் எழுத்துக்கு!—இதுதான், அவர்கள், நம்முடையபணிபற்றி, வீசும் குற்றச்சாட்டுகள்.

ஆனாலும் எதை நாம் தேவையென்க்கூறுகிறோமோ, அது விஷயத்திலேயே அவர்களும் கவலைப்படவேண்டியவர்களானார்கள்.

எது அவர்களால், வகுப்புவாதம் என்று கூறப்பட்டதோ, அதற்காகவே பாடுபட வேண்டியவர்களாயினர்.

நாம் பல்லாண்டுகளாக நடந்து வரும் பாதையைப் பழித்தவர்கள் அதே பாதையில் நடந்தார்கள்—அந்தப் பாதை நியாயம் நிரம்பியது எனப்பேசினார்கள் — அதற்காக, திருத்தம் கொணரவும், 'தாங்களே இதற்குக் காரணம்' என்றுபெருமை கொள்ளவும், தயாரானார்கள்.

இத்தகைய, புதுநிலை, காங்கிரஸ் பார்ப்பனரல்லாதாரிடையிலே, வகுப்புவாரிப் பிரச்சினை காரணமாக உருவாயிற்று. நம்மைத் தூற்றுவோர்கூட திடுக்கிடும் படியான அளவில், தேசிய திராவிட இதழ்கள், வகுப்புவாரி உரிமை குறித்து, எழுதின.

இது, நாடறிந்த உண்மை — எனவே, நாம் காங்கிரசாரிடையிலே மலர்ந்த இந்தப் புதுநிலையை மதிக்கிறோம்,

இந்த ஒரு பிரச்சினை மூலம், பொதுஎதிரி யார் என்பதையும், எந்தக் கொள்கை இந்நாட்டு மக்களை

(5-ம் பக்கம் பார்க்க)



# ★ குற்றத்துறார் ★

—※—

அரசியல் சட்டப்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது. அரிஜனங்களும், பிராமணர்களைப் போல உரிமைகளை அனுபவிக்கலாம். இன்னும் சில கிராமங்களில் மக்கள் அவர்களைக் கொடுமை படுத்துகிறார்கள்.

சட்டம் சொல்கிறது! சர்க்கார் கேட்கிறது! இருந்தும் மக்கள் மறுக்கிறார்கள்!

சட்டத்தை தட்டிவிடுகிறார்கள்! ஆள்வோரை அலட்சியப் படுத்துகிறார்கள்! அவர்களை அடக்க முடியவில்லை.

தீண்டத்தகாதவர்கள் என்று தள்ளி வைப்பது சட்ட விரோதம் என்று ஆக்கி விட்டார்கள். இன்னும் சில இடங்களில் அந்த தீய பழக்கத்தை விட்டதாகத் தெரியவில்லை!

பிராமணர்களைப் போல உரிமைகளை அனுபவிப்பதிருக்கட்டும். மனிதர்களைப் போல வாழ்ந்திட்டால் போதும்!

இன்னமும், குளத்திலே இறங்காதே, தெருவில் வராதே, கோயிலில் நுழையாதே, வேட்டியைத் தொங்கக்கட்டாதே, செருப்பைக் கையிலெடுத்துக் கொண்டு நட, பெண்களானால், சட்டைபோடாதே என்று ஆணைகள் ஆட்சியிலே இருக்கின்றன, சில இடங்களில்!

அவர்களிடம் சட்டம் வீரம் பேசவில்லை-சதிராடி சாய்ந்து விடுகிறது! சட்டம் செய்த சர்க்காரோ சல்லடங் கட்ட வில்லை-சங்கீதம் பாடி ஓய்ந்து விடுகிறது!

இதனை எடுத்துக் காட்டியவர், காங்கிரஸ் தலைவர் தாண்டனே தான்! அவர்தான் சட்டத்திற்கு மதிப்பளிக்காமல், மக்கள் வாழ்கிறார்கள் என்று கூறியுள்ளார்.

ஒன்றை குற்றமென்கிறது சட்டம்! அதைக் கூசாது செய்கிறார்கள் மக்கள்! ஆர்வத்தோடு, ஆணவத்தோடு, ஆத்திரத்தோடு அக்குற்றத்தைச் செய்கிறார்கள்!

தீண்டாமை கூடாது என்கிறது சட்டம்! ஆனால் அந்த தீமையைத் தீவிரமாகசெய்தே முடிக்கிறார்கள்!

ஏன் குற்றம் புரிந்திடுவோர் இருக்கிறார்கள்? சட்டமிருப்பது தெரிந்தும், அதனை மீறினால் வழக்கு மன்றம் ஏறி, தண்டனை பெற்று சிறை சென்று வதைபட வேண்டுமென்பதை அறிந்தும் செய்கிறார்கள்! இதற்குக் காரணம் என்ன?

தாண்டன், நிலைமையைச் சொன்னார். ஆனால், காரணங் காட்டவில்லை. காட்ட முடியவில்லை!

குற்றம் என்று சட்டம் கூறுகிறது. ஆனால், அதனைகுளிர்ந்த மனத்தோடு, குதூகல எண்ணத்தோடு, பயமின்றி, பதட்டமின்றி, தாம் ஏதோ பெரிய நற்காரியம் புரிந்திடுவது போன்ற உள்ளத் திருப்தியோடு செய்கிறார்கள். ஏன்?

* * *

குற்றம் புரிந்திடுவோர் தொகை அதிகரிக்கிறது! குறைத்திட வாரீர்!

குற்றத்தின் கூற்றமாவோம்! கொடுமைக்கு எமனாவோம்! கிளம்புங்கள்!

குற்றங்களை குற்றுயிராக்குவோம்! கொடுமைகளைக் களைவோம்! பிழைகளை ஒழிப்போம்! தவறுகளை அழிப்போம்! சட்டத்தை நிலைநாட்டுவோம்!

பழைய பயத்தை பொசுக்குங்கள்! அந்நாள் விரோதத்தை வெட்டி வீழ்த்துங்கள்! ஒத்துழையுங்கள்!

வெறுப்பு வேண்டாம்—பொறுப்பு அதிகம்!

குற்றங் களைந்திட ஒவ்வொருவரும் உதவிட வேண்டும்! இன்றேல் குற்றம் சற்றும் தயக்கமின்றி வளரும்!

பொதுமக்களே, உங்கள் ஒத்துழைப்பைப் பெறவே எச்சரிக்கை கமிட்டிகள்! எரிச்சலை விட்டுவிட்டு, ஏசலை நிறுத்திவிட்டு எங்களுடன் ஒத்துழையுங்கள்!

குற்றத்தின் நிழலைக் கண்டாலும் ஓடி வாருங்கள்! உடனே எங்களுக்குச் சொல்லுங்கள்!

குற்றமிழைத்திடும் கொடுமைக்காரர்களை பிடியுங்கள்! அடையுங்கள்! பிறகு வந்து சொல்லுங்கள்!

உங்கள் வெறுப்பும், குற்றங்கள் செய்திடுவதில் வளர்ந்துள்ள விருப்பும் எங்கள் கடமையை முடமாக்கி விட்டன!

போலீஸ் கமிஷனர், பொது மக்களுக்கு விடுக்கும் அன்பழைப்பு, இது!

குற்றங்களைக் குறைக்க, கண்டு பிடிக்க, தேவசகாயம் மக்கள் சகாயத்தைத் தேடுகிறார். அவர், எச்சரிக்கை கமிட்டியில் பேசும்பொழுது, இப்படிப் பொதுமக்களை பரிந்து அழைத்துள்ளார்.

தாண்டன், சட்டமிருந்தும், மக்கள் மதிக்கவில்லை யென்கிறார்.

போலீஸ் கமிஷனரோ, சட்டமிருந்தும், அதனை நடத்துவிக்க வழக்கு மண்டபம், சிறை, போலீஸ் இருந்தும் பொதுமக்களை அழைக்கிறார்!

குற்றங்கள் வளர்ந்தபடியே உள்ளன. குறைப்பதிற்கில்லை!

குற்றம் புரிந்திடுவோருக்கு, தாங்கள் செய்பவை சட்ட விரோதமானவை யென்று தெரியாதா? அல்லது போலீஸ் புலன் விசாரிப்பர் என்று அறியமாட்டார்களா? தெரியாதென்றால் அவர்கள் ஒளியமாட்டார்களே!

தெரிந்தும், அந்த தீயவழி செல்கின்றனர். ஏன்?

* * *

திருடுகிறான்! கொலைசெய்கிறான்! சூதாடுகிறான்! குடிக்கிறான்! பொய் பேசுகிறான்! விபசாரம் செய்கிறான்! இன்னும் சமூகத்தின் சட்ட திட்டங்கள் பலவற்றை மீறுகிறான்! ஏன்?

பஞ்சமா பாதகங்கள் பயமின்றி செய்கிறான். பாவியென்று தூற்றுவரே, பாதகன் என்று திட்டுவரே என்று அவன் அஞ்சுவதில்லை! குற்றவாளியென்று கூண்டில் நிறுத்துவரே என்றுகூட நடுங்கவில்லை!

இந்தத் தீயவழி நடக்கின்றனரே, இதற்குக் காரணம் என்ன? வறுமை யென்பர். இருக்கலாம். ஆனால் வாட்டமே இல்லாதவன் வீட்டிலே நடமாடும் உல்லாச வாழ்வினரும் புரிகின்றனரே!

குற்றங்களுக்குக் காரணம் இல்லாமை மட்டுமல்ல—அதிகம் இருப்பதுகூட என்னலாம்! ஆனாலும் குற்றங்களை வளர்ப்பானேன்?

குற்றம் என்ற தடாகத்திற்கு இரண்டு ஊற்றுக் கண்கள்—ஒன்று வறுமை; மற்றொன்று வளமை.

இவை இரண்டு மட்டுமே காரணங்களாகி விடமாட்டா! பின்னர், வேறுண்டோ? உண்டு, கட்டாயமாய்! அவை எவை?

* * *

குற்றங்கள் செய்கிற பொழுது, செய்கிறவர்கள் இதயத்திலே, தாம் புரிபவை பாதகமானவை என்ற எண்ணம் ஈட்டிபோல் பாயவேண்டும்—அவர்தம் மண்டையிலே சம்மட்டிபோல தாக்க வேண்டும்!

அந்த எண்ணத்தை உருவாக்குபவை, அவனுக்குத் தரப்படும் ஏடுகள், அவன் பழகும் சமூக ஏற்பாடுகள், அவன் வணங்கும் தெய்வங்கள் எல்லாம்!

இவை அவனுக்கு, அந்தக் குற்றங்களைச் செய்யாதே, செய்வது தகாது என்ற எண்ணத்தைத் தந்திருக்க வேண்டும். தரவில்லை ஆகவே குற்றங்களை பெருக்கிடும் குற்றம், இவைகளைத்தான் சாரும்.

குற்றம் புரிபவனைக் கூண்டிலேற்றுவது போல, குற்றம் புரியும் எண்ணத்தை வளர்க்கும் இவைகளையும் ஏற்றவேண்டும்!

இங்கு இளமையிலிருந்தே, ஏடாகவும், கூத்தாகவும், பாட்டாகவும், பெரியோர் உபதேசமாகவும், அவர்தம் நெஞ்சத்திலே குடியேற்றப்பட்டுள்ள குருட்டு எண்ணங்களும், குறுமதிச் செயல்களும் அவர்களைக் குற்றம் புரியாமல் தடுப்பதில்லையே!

திருடுகிறவன், சிறு வயதில் கண்ணன் வெண்ணெயைத் திருடினான், பிறகோ பெண்ணைத் திருடினான் என்று எண்ணினால், அஞ்சுவானா? ஆண்டவனே அப்படி, அடியேன் சாமான்யன் ஏன் செய்யக்கூடாது என்று எண்ணுவானா?

பொய்யே பேசி, போற்றுதலைப் பெறும் நாரதரை ஏட்டிலும், பாட்டிலும் கேட்டவன் பொய் பேச அஞ்சுவானா?

இரண்டு மனைவி கட்டாத தெய்வமில்லை இங்கு! பார்வதி போதாதென்று, கங்கை சடைமுடியில்! லட்சுமி போதாதென்று, அவதாரம் எடுத்தெடுத்து அவர் சுகித்தது எடுத்தியம்ப ஒண்ணாது! பின்னை மரக் காட்சியைப் பூஜைக்குரியதென்று வைத்திருக்கிறார்களே, இது ஒழுக்கத்தை வளர்க்குமா? விபசாரத்தைப் பெருக்குமா?

சூதாடுவது குற்றம். ஆனால் சூதாடுவதையே, இதிகாசமாக்கியிருக்கிறார்கள். பாரத பாராயணம் புரிகிறார்கள். அதுவும் தருமர், சூதாட்டத்தில்வைத்தாடும்பொருள்கள் என்னென்ன? மனைவி திரௌபதையையே வைத்து ஆடுகிறார்! அதிலேயும் விசித்திரம்—அவள் அவருக்கு ஐந்தில் ஒரு பாகந்தானே சொந்தம்! சொந்தமே இல்லாத பொருளைக்கூட வைத்தாடினர். இது இதிகாசம். ஏன் குற்றம் புரியமாட்டார்கள்?

சுராபானமும், சோமரசமும் குடித்தனர் தேவர், மூவர் என்று படித்துவிட்டு, மதுவிலக்குகொண்டு வந்தால் என்ன ஆவது?

ஆண்டவன் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்கிறார் என்று கொலைக்கு வக்காலத்து வாங்கினால், நாட்டிலும் அதுநடைபெறத்தானே செய்யும்!

அதனால்தான் தினசரி ஏடுகளை புரட்டினால் இம்மாதிரி குற்றங்கள் புரிந்திடுவோர் பற்றிய செய்திகள் ஏராளம் தாணக் கிடைக்கின்றன.

குற்றங்களிழைத்திடுவது கூடாது என்ற எண்ணத்தை விதைக்கும் ஏடுகள், இதிகாச, புராணகருத்துகள், பழக்க வழக்கங்கள், பழைய ஏற்பாடுகள் அவர்கள் உள்ளத்திலே இல்லை.

பழமை அவர்களது இதயத்தை கபளீகரம் செய்து கொண்டுள்ளது. இதில் புதிய கருத்துகள் புகமுடியவில்லை. புகுவதானால், பழமை, புதுமை போர் நடக்கிறது! அந்த மனப் போரில் குற்றம் வெற்றி பெறுகிறது!

சட்டம் செத்துவிடுகிறது அவர்கள் முன்பு! சர்க்காரும் சரிந்து விடுகிறது அவர்கள் எதிரில்!

அவர்களது இதயத்திலே, தீண்டாமைத் திட்டம், தேவப்பிரியானது, ஆண்டவனை வழிவந்தது என்று அழிக்கமுடியாதபடி நுழைக்கப்பட்டதால் அவர்கள் பஞ்சமா பாதகங்கள் பலவும் செய்கிறார்கள்.

ஒரு சட்டத்தை எதிர்த்து ஒன்பது சட்டங்களை உடைக்கிறார்கள்!

தீண்டாமையை நிலைநாட்ட, பழமை விரும்பிகள் பாவங்கள் என்று அவர்கள் போதித்தவைகளையே செய்கிறார்கள்.

சேரிகளை எரித்தனர்! கொள்ளையிட்டனர்! பெண்களை கற்பழித்தனர்! கூலிகளை, காலிகளை ஏவி கொடுமைகள் பல இழைத்தனர்!

எத்தனை சட்டங்கள் சுக்கு நூறாயின! இத்தனைக்கும் காரணம் அவர்களை இரும்புப் பிடியாகப் பிடித்துள்ள பழமை!

சர்க்கார் சட்டம் போட்டது! சனாதனம் அதனைச் சாய்த்து விட்டது!

இந்தக் காரணங்களையும் புரிந்துகொண்டால், குற்றங்களை குறைக்க முடியும்! கொடுமைகளை அடக்க முடியும்!

* * *

குற்றங்களை குறைக்க சிறைக்கு செல்வதாம்! கைதிகளை அழைப்பதாம்! போதனை புரிவதாம்!

ஜெய் ஜெய் சீதாராம் போடுவதாம்! ஹரே, கிருஷ்ணா, ஹரே கிருஷ்ணா பாடுவதாம்!

மகாதேவா, மகாதேவா, என்று கூவுவதாம்!

போதனைமுறையால் குற்றங்களை ஒழிப்பதாம்! இது முடியாது!

சிறை சீர்திருத்தக் கமிட்டியார் ஒரு யோசனை வெளியிட்டுள்ளனர். சிறையில் முகமதியர், கிருஸ்தவர் போதனைக்கு வழியிருக்கிறது. இம்முறையில் இந்துக்களுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த போதனை செய்யும்பொறுப்பை, ராமகிருஷ்ண மடம்போன்ற ஒன்றிடம் விட்டுவிடலாம் என்று கூறியுள்ளனர்.

போதனையால் பாதகம் போகாது புரட்சிகர, மாற்றங்களால்தான் குற்றம் குறையும்—மறையும்.

குற்றம் என்ற நீர் நிறைந்த தடாகத்திற்கு, அதனை அருந்துவோரின் சூழ்நிலை, எண்ணம், வாழ்க்கை முறை, சமூக அமைப்பு, பொருளியல் திட்டம் இவையெல்லாம் படிக்கட்டுகள். இந்தப் படிக்கட்டுகள் இடிக்கப்பட்டு, தடாகம் தூர்க்கப் படவேண்டும்.

குற்றம் புரிகிறதைப் பார்த்து தண்டிப்பதை விட, குற்றம் ஏன் ஏற்படுகிறது, எதனால் அந்தக் குற்

(9-ம் பக்கம் பார்க்க)



2-ம் பக்கத் தொடர்ச்சி

கிழோராக ஆக்கிற்று என்பதையும், அவர்கள் கூடாரமே, மூர சொலித்து, விளக்கிற்று.

ஆகவேதான் தேசிய திராவிட காங்கிரஸ் நண்பர்கள் நமது பாராட்டுக் குரியவர்கள் என்று குறிப்பிட்டோம்.

காங்கிரஸ் — நமது எதிர்க்கட்சி. இது, எல்லோரும் அறிந்ததுதான்.

ஆனாலும், நமது பேச்சு, அங்கே. நமது குரல், அந்த இடத்தில்! நமது கொள்கையின் உண்மை உணர்ந்தனர், அவர்கள், நாம் எது வேண்டுமென்றோமோ, அதை, தாங்களே செய்து முடித்ததாகக் காட்டிக் கொள்ளும் ஆசை, அங்கே.

இந்தப் புது நிலை, காங்கிரஸ் கட்சியில். அதுவும், காங்கிரசிலேயுள்ள எல்லோரிடையிலுமல்ல — திராவிடர்களிடையே!

பார்ப்பனரல்லாத மக்கள் மத்தியில் பார்ப்பன மக்களின் தலைவர்கள் செய்யும் தகாப் போக்கையும், தருக்கு ஆட்டத்தையும், இந்தப் பிரச்சினை தெளிவாக விளக்கியிருக்கிறது.

எனவேதான், நாம் மகிழ்ந்தோம்! மலர் பறிப்போனைப் பார்த்து, 'சேச்சே, மலம் அப்பா, அது' என்று கேலி பேசியோர், பிறகு, அதே மலர்ச் சோலைக்குள் சென்று, 'ஆகா, இம்மலர் எனக்கும் தேவை' என்றால் — அது, சாதாரணமானதல்லவே!

ஆகவே, மகிழ்ந்தோம் — அவர்களது செயலை. மகிழ்ந்தோம், காங்கிரஸ் திராவிடர்களின் முயற்சி கண்டு. "ஏமாளிகளல்ல; முதுகெலும்பு முறிந்தாலும், கவலை கொள்ளாதவர்கள் அல்ல. மானபிமானம் அவர்களுக்கும் உண்டு, மக்களைப் பாதிக்கும் எதையும் கண்டு வாய் மூடி மௌனியாபவர்களல்ல" என்கிற திருப்தி, நமக்கேற்பட்டது.

அத்திருப்தியில் தேன் சொரிவதுபோல, "சென்றோம்—திருத்தம் செய்தோம், அரசிய லமைப்பில்" என்றனர். 'அப்படியா? நல்லது, ஆவன செய்வீர்!' என்று கூறினோம். எதிர்பார்த்தோம், ஜூனின் 18-ஆம் தேதியை.

தேதி சென்றுவிட்டது—திட்டமும் தந்திருக்கிறார்கள்.

* * *

தொழிற்கல்லூரிகளில் (மெடிகல், எஞ்சினீயரிங், விவசாயக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி) மாணவர்களைச் சேர்க்க, சர்க்கார் பின்வரும் புது ஏற்பாட்டை தயாரித்துள்ளது.

மொத்தம் நூறு இடங்கள் என்றால் அதில் பதினைந்து, தாழ்த்தப்பட்டோருக்கும் மலை ஜாதியினருக்கும் ஒதுக்கப்படும்.

கல்வி, சமுதாயத் துறையில், பின்னணியி லிருப்போருக்கு இருபத்து ஐந்து இடங்கள் ஒதுக்கப்படும். லப்பை, மாப்பிளா, துகுலா போன்ற முஸ்லீம்களும், கிருஸ்துவர்களாக மதம் மாறிய ஆதித் திராவிடர்களும் பின்னணி 'லிஸ்டில்' சேர்க்கப்பட்டவர்கள்.

மீதி 60 இடங்கள் எல்லோருக்கும் பொதுவானவை.

மேலும், சில விளக்கங்களோடு, இத்திட்டம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதை, நமது மாநில அமைச்சர் பக்தவத்சலம் விளக்குகையில், "முன்பு இருந்த இடங்களை எல்லா சமூகத்தினருக்கும் பிரித்துக் கொடுத்துவந்தது. இப்போது குறிப்பிட்ட இடங்கள் ஆதித் திராவிடருக்கும், பின்னணி வகுப்பாருக்கும் 'ரிசர்வ்' செய்யப்பட்டிருக்கிறது, ஏனைய இடங்கள், எல்லோருடைய போட்டிக்கும் விடப்பட்டிருக்கிறது" என்பதாக வெளியிட்டுள்ளார்.

'எல்லோருடைய போட்டிக்கும்' என்று அமைச்சர் அறிவித்திருப்பதில்,

பார்ப்பனர்
பார்ப்பனரல்லாதார்
கிருஸ்துவர்கள்
ஆதித்திராவிடர்
முஸ்லீம்கள்

பிற்போக்கு பார்ப்பனரல்லாதார் ஆகிய அத்தனை பேரும் அடங்குவர். அதாவது, மீதம் 60 இடங்களும், பார்ப்பனருக்கு மட்டுமல்ல; எல்லோருக்கும் பொதுவானது தான் என்று கூறியிருக்கிறார், அவர்.

ஆனால், புது ஏற்பாடு, தேனாக இல்லை—தித்திக்க!

பழைய வகுப்புவாரி உத்திரவை விட, பல மடங்கு பார்ப்பன சமுதாயத்துக்கு நன்மையும், திராவிட மக்களுக்குத் தீங்கும் தருவதாகவே தோன்றுகிறது.

சென்னை மாநிலத்தில் வாழும் மொத்த மக்கள் தொகையை கணக்கிட்டு அதன்படி இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்றால், ஏமாற்றம்தான், பதிலாக வருகிறது.

பழைய உத்திரவு

| | |
|---|---|
| பார்ப்பனர் | 14 |
| பார்ப்பனரல்லாதார் | 43 |
| பிற்போக்கு ,, | 14 |
| ஆதித்திராவிடர் | 14 |
| முஸ்லீம்கள் | 7 |
| கிருஸ்துவர் | 7 |

மொத்தம் இருப்பது 100 இடங்கள் என்றால், மேற்குறிப்பிட்ட விகிதாசார முறையில், அவரவர்க்கு இடமளிக்கவேண்டும் என்பதே பழைய உத்திரவாகும்.

இந்த முறையே நியாயம் நிரம்பியதல்லவென்று, பலர் குறைபட்டு வந்தனர். ஏனெனில், மக்கள் தொகைக்கேற்றபடி, விகிதாசாரம், இந்த ஏற்பாட்டால் பகிர்ந்தளிக்கப்படவில்லை. மக்கள் தொகை நூற்றுக்கு எத்தனை என்பதைக் காட்டி, கீழே தரப்பட்டிருக்கும் புள்ளி விபரத்தை நோக்குங்கள்:

| | |
|---|---|
| பார்ப்பனர் | 2·7 |
| பார்ப்பனரல்லாதார்<br>பிற்பட்ட ,, | 67·7 |
| ஆதித்திராவிடர் | 16·3 |
| முஸ்லீம்கள் | 7·8 |
| கிருஸ்துவர்கள் | 3·7 |

மக்கள் தொகையின், சதவிகிதக் கணக்கு இது.

முதலிலே தரப்பட்டிருக்கும் 'பழைய உத்திரவு' மூலம், ஒவ்வொரு வகுப்புக்கும் தரப்பட்ட விகிதாசாரத்தையும், இதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் — உண்மை விளங்கும்.

நூற்றுக்கு 3 கூட இல்லாத பார்ப்பனருக்கு 14 இடங்கள்.

நூற்றுக்கு 70 பேராக உள்ள திராவிடமக்களுக்கு—57 இடங்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

மக்களை மதியாது ஆட்சிபுரியும் ஆள்வந்தாருக்கு அறிவூட்ட

நலிவுற்றுள்ள நம் திராவிடரின் நலனைக் காக்க

"போராட்டம்"

விரைவில் துவங்குகிறது.

'போராட்டம்' அலுவலகம்
திருவத்திபுரம்.

திராவிடநாடு
காஞ்சி ] 24—6—51 [ ஞாயிறு

# பத்தாண்டுகள்

★

ஒன்பது மலர்களைத் திராவிட நாட்டிக்குக் காணிக்கையாக்கி விட்டோம்.

பத்தாவது அரும்பு, இன்று மலரத் துவங்கிவிட்டது.

காலச் சோலையிலே, ஆணி வேர் இல்லாத மரம்—ஆனாலும் தவறாமல் தன் பணியைச் செய்துவருகிறது. புயலும் இடியும், அதன் வளர்ச்சியைத் தடுக்கவில்லை.

திராவிட மண்ணின் ஆதரவும் அன்பும், எருவாகவும் நீராகவும் இருக்கும்போது என்ன கவலை?

* * *

பத்திரிகை உலகம் இன்று ஓர் பம்பரம். அதை ஆட்டிப் படைக்கும் கயிறுகளாக இருப்போர், பணம் படைத்தோர்தாம்.

நாம் 'தம்மையே நம்பினோர்' கூட்டத்தின், ஒரு துளி. எனினும், தயங்கவில்லை, அரும்புகள் தோன்றாமலில்லை; நம் பணி வளராமலில்லை.

தென்றல், வீசாத வாழ்வு 'திராவிட நாட்டி'னுடையது. ஆனாலும், திகைக்காத பெருமையை நிலைநாட்டிக்கொண்டுவிட்டது.

'தேன்' என்போரும் உண்டு; மாறாக 'தேள்' என்று பகைப்போரும் உண்டு—நம்மைக் கண்டு. எனினும், அஞ்சவில்லை—பத்தாவது ஆண்டின் படிக்கட்டில் பெருமிதமாக நிற்கிறோம்.

* * *

பாராள்வோர் நேசம் நமக்குக் கிடையாது. மாறாக 'பாணம்' தரும் அரசாங்கம், நம்மிடையே உண்டு. பகைத்திடச் செய்யும் 'சட்டி' வீச்சு, சிறைவாசம், அடக்குமுறை நமக்குப் பரிசாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

ஆனாலும், நமது பாதையில் தடைக்கல் எதுவும் தடுக்கவில்லை, நம்மை. தடுத்தாலும் நிறுத்தவிடவில்லை, திராவிட மக்களின் திண்தோள் வீரமும்—அன்பு உள்ளமும்.

கடந்த ஆண்டைவிட, இப்போது நமது மலரின் மணம் பெறும் தோழர்கள் அதிகமாகியுள்ளனர். மகிழ்ச்சிக்குரிய செய்தி. அவர்கள் பெருகட்டும்—நமது அறிவுப் பணி வளர, அவர்தம் ஆதரவு குவியட்டும்.

* * *

நமது பணி—சாக்கடையை சந்தனக் காடாக்குவது.

எனவே, சஞ்சலங்களும், தொல்லைகளும் நமது இதயத்தைத் தொடுவதுமில்லை—துளைப்பதுமில்லை.

பகுத்தறிவுப் பணிக்காக தன்னை காணிக்கையாக்கிக்கொண்டது 'திராவிட நாடு'. ஆகவே, பரணி பாடிடும் படைவீரனாக உலவி வருகிறது.

பணிக்கான பலன்—திராவிடத்திலே கண்கூடாகத் தெரிகிறது.

படை வரிசை—பெருகிவிட்டது. பயமுறுத்தினோர், மிரட்டினோர், அதட்டினோர்—அத்தனை பேரும் நமது வரிசையில்.

இந்தக் காட்சி, கடந்த ஒன்பதாம் ஆண்டில், மிகமிக அதிகமாகியிருக்கிறது.

இந்தப் புது நிலைக்கு நம் வாழ்த்துக்கள்.

* * *

"எந்த வேலையானாலும் செய்வோம். நமது கழகக் கொள்கைகளைப் பரப்புவதே நம் இலட்சியம்"—இந்த ஆசையையும், ஆண்டு நடுவில் நாம் நிறைவேற்றிக்கொண்டோம். கட்டுரையும் கதையும் நிரம்பிய நம் ஏடு, கழகத்தின் குரலாகவும், ஒரு சில மாதங்கள், தன் சேவையைச் செய்யத் தயங்கவில்லை.

திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளின் வெற்றியில் 'திராவிட நாடு'ம் தன்னாலான ஒத்துழைப்பைத் தந்திருக்கிறது. ஓய்வின்மையையும் பாராது, கழக ஆண்டு மலரையும், கழகத் தோழர்களுக்கு காணிக்கையாக வைத்தது.

* * *

மலர் மணம் வீச, அல்லும் பகலும் உழைக்கும் அலுவலகத் தோழர்கள் திராவிட நாட்டின் பாராட்டுக்குரியவர்கள்.

"திராவிட நாடு" வளம் பெறும் வாய்க்கால்களாக உள்ளவர்கள் ஏஜண்டுத் தோழர்கள்தான். ஆனால் அவர்களில் ஒருசிலர் வழக்கம்போல இல்லாது, மாத முடிவை எதிர்நோக்கி, தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்தால்...எவ்வளவு மகிழ்வேற்படும் எமக்கு? இந்த ஆண்டாவது, அவர்கள் எண்ணம், இந்த உறுதியைத் தாங்கட்டும். சந்தாதாரர்கள்—"திராவிட நாட்"டின் கண்கள். அவர்களுக்கும் இந்த மகிழ்ச்சி நாளில் நம் அன்பு மலர்களைத் தூவுகிறோம்.

* * *

இதழின் பக்கங்களை அதிகரித்து இன்னுஞ் சிறந்த முறையில் சேவை செய்ய வேண்டுமென்னும் ஆசை, அடிக்கடி அலைமோதுகிறது. ஆனால் காங்கிரஸ் ராஜ்யமோ 'காகிதநெருக்கடியை'த் தீர்க்குமென்று தெரியவில்லை. அந்நிலை, வெகு விரைவிலேயே வரவேண்டுமென விரும்புகிறோம். வந்ததும் தோழர்களுக்கான சுவை மிக்க பகுதிகள், கிடைக்கும்.

இந்த ஆண்டு, கட்டுரைகள், கதைகள் வழங்கிய எழுத்தாள நண்பர்கட்கு நமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திராவிட நாட்டின் ஒன்பது ஆண்டுப் பயணத்தால் பல நீந்தமிழ் பேனாச் செல்வர்கள் பலர் உலவுகின்றனர். ஆனால், இத்தொகை மேலும் அதிகமாக வேண்டும். அதற்கான வழிகளில் பொதுவாக இளைஞரும், குறிப்பாக கல்லூரிக் காளைகளும், ஈடுபடவேண்டும்.

பத்தாவது ஆண்டு — நினைத்தாலே, மனம் குதூகலமடைகிறது.

இந்த நேரத்தில், நமது இயக்கத் தோழர்கள் ஒவ்வொருவருடைய அன்பும் நம் மனதில் ஒளிவிடுகிறது.

அவர்கள் அன்புக்குப் பாத்திரமாகும் வகையில் உழைப்போம், உயர் கருத்துக்களைப் பரப்பப்பாடுவோம் என்கிற உறுதிமொழியோடு, எல்லோருக்கும் நமது அன்பு வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எம் கடன் பணிசெய்து கிடப்பதே!

*



**கைத்தொழில் கல்விக் கலைக் காட்சி**

**'கோபால் பாக்' அவிநாசி ரோட், கோவை.**

**23-6-51 முதல் இரண்டு வாரங்கள்**

காட்சி நேரம்:

காலை 10 மணி முதல் 12 மணி வரை
மாலை 2 மணி முதல் 5 மணி வரை

★ நவீன கால இயந்திரங்களும், கருவிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

★★ அறிஞர்கள் சொற்பொழிவுகளும், படக்காட்சி விளக்கங்களும் உண்டு.

நிகழ்ச்சிகள், துண்டு வெளியீடுகள், உள்ளூர் செய்தித் தாள், அறிக்கைப் பலகைகள்மூலம் அவ்வப்பொழுது அறிவிக்கப்படும். தேவையானால் கண்காட்சியின் காலம் நீட்டப்படலாம்.

ஜி. டி. நாயுடு,
தலைவர்,
கைத்தொழிலாளர் நல பாதுகாப்பு சங்கம் லிமிடெட்.

5-ம் பக்கத் தொடர்ச்சி

நூற்றுக்கு 17 பேரான தாழ்த்தப்பட்டோருக்கு 14 இடங்கள்.

பழைய உத்திரவு இது! பலரைப் பதறச்செய்தது, இது. ஆனாலும் இதை ஆட்சேபித்து கச்சை கட்டினர் பார்ப்பன மாந்தர். கடைசியில் தங்கள் தந்திரங்கள் மூலம், இந்த ஏற்பாட்டை சவக்குழியிலும் தள்ளினர்—சட்டத்தின் மூலம்.

இப்போது, புதுத்திட்டம், பிறந்திருக்கிறது பொங்கும் கடல்போல திராவிட சமுதாயம் தன் இனஎழுச்சியைக் காட்டிக்கொண்ட பிறகு.

ஆனால் புதுத் திட்டம்—பொன்னாக இல்லை; முலாம் பூசப்பட்டதாகக் காட்சி தருகிறது.

இதன் மூலம் தாழ்த்தப்பட்டோருக்கு 100-க்கு 15 இடங்கள் கிடைக்கும் வசதி உண்டாகியிருக்கிறது.

பழைய உத்திரவின்படி 14-இடங்கள்தான்; ஆனால் புது உத்திரவு 1-இடம் அதிகமாகத் தருகிறது. எனினும் அவர்களின் மொத்த தொகைக்கேற்றளவு, விகிதாசாரம் இல்லை யென்றாலும், இந்த அளவாவது கிடைத்ததே என்பதால் சிறிது தெம்பு வருகிறது, நமக்கு.

கனிபறிக்கச் சென்றவனைக் கழுகு கொத்திட அதனால் கீழே விழுந்தும், அடிபடாமல் தப்பினான் என்றால், கனிகிடைக்கவில்லையே என்ற வருத்தம் எழும்பவா, செய்யும்?

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அடுத்தபடியாக, பின்னணி வகுப்பாருக்கென நூற்றுக்கு 25 இடங்கள், ஒதுக்கப்பட்டுள்ளன, புதுத் திட்டமூலம்.

இந்த மாற்றமும், எதிர்பார்த்ததைவிட அதிகமாகத்தான் தோன்றும்.

ஏனெனில் பழைய கம்யூனல் ஜி. ஓ. படி, பின்னணி வகுப்பாருக்கென நூற்றுக்கு 14 இடங்கள்தான் தரப்பட்டிருந்தது.

முன்பு 14; இப்போது 25! இது, அதிகமாகக் காட்சி தந்தாலும், ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது.

பின்னணி வகுப்பு எவை யெவை என்று, இந்தப் புதுத் திட்டத்தில் சர்க்கார் வரையறுத்துச் சொல்லவில்லை. ஆனால், முன்பு வரையறுத்து வைக்கப்பட்டிருப்பதை வைத்தே, எவையெவை, பின்னணி வகுப்பினர் என்று, சர்க்கார் தெரிந்து எடுத்துக்கொள்ளும்.

அப்படிப் பார்த்தால் சென்னை மாநிலத்திலுள்ள பின்னணி வகுப்புகளின் Backward Class) பட்டியல் 156 வரை, செல்கிறது.

156-பிரிவுகள்! ஆனால், அவைகளுக்கு ஒதுக்கப்படும் இடம் 25.

பழைய உத்திரவு மூலம் 156 பிரிவுகள் நிரம்பிய பின்னணி வகுப்பாருக்கு நூற்றுக்கு 14 இடங்களே ஒதுக்கப்பட்டிருந்தன.

இதைப்பற்றி பல முறை, சென்னை சட்டசபையில், தேசிய உறுப்பினர்களாலேயே கேள்விகளும் கண்டனமும் எழும்பியதுண்டு.

இருந்தும், குறைந்த அளவிலேயே, பின்னணி வகுப்புக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்ல, சர்க்காரின் புது உத்திரவு மூலம் பின்னணி வகுப்பு என்கிற ஜாபிதாவில், லப்பை, மாப்பளா, தாகுகுலா போன்ற முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஆதித்திராவிடர்களும், மலை சாதியினரும் சேர்க்கப்படுகிறார்கள். இருந்தும், அதிகமாக்கி உத்திரவிட்டிருப்பது 25 இடங்கள்தான்.

பிற்பட்ட மக்களின் தொகையையும், இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்களையும் ஒப்பிட்டால், மகிழ்ச்சி அரும்பாது. ஏனெனில் அதிகத் தொகையும், பிரிவுகளும் நிரம்பியோருக்கு, நூற்றுக்கு 25 இடங்கள் என்று ஒதுக்குவது—ஓடையில் பெருங்காயம் கரைப்பது போலத்தான் ஆகும்.

புதுத்திட்டம், பார்ப்பனர்களுக்கு பரந்த ஒரு சந்தர்ப்பச் சோலையைத் தந்திருக்கிறது.

மீதம் 60-இடங்கள் என்று சர்க்கார் குறிப்பிட்டிருப்பதுதான், அந்தச் சோலை.

பழைய உத்திரவின்படி, பின்னணி வகுப்பினருக்கு நூற்றுக்கு 14 இடங்கள் என்பது தவிர, பார்ப்பனரல்லாத மக்களுக்கென இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இப்போதோ, அந்த இடங்கள் பறிமுதலாகிவிட்டன.

புது உத்திரவில், நமது நெஞ்சைக் கலக்கும் கட்டம் இதுதான்.

இந்த 43 இடங்களையும், இப்போது பார்ப்பனர் தமது 'தகுதி திறமை' கொண்டு வேட்டையாடும்படி விட்டு விட்டனர்—சர்க்கார்.

பழைய உத்திரவுபோல, இனி பார்ப்பனரல்லாதோருக்கு, சலுகை கிடைக்க, இனி வழியில்லை.

தாழ்த்தப்பட்டோருக்கும் பின்னணி வகுப்பினருக்குமாக மொத்தம் 40 போக மீதமாகும் 60 இடங்களில் பார்ப்பனருடன் போட்டியிட்டே, பார்ப்பனரல்லாத மாணவர்கள் இடம் பெறவேண்டும்.

இனி, பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கென சலுகை பெற எவ்வித வசதியுமில்லை.

இந்த 60 இடங்களிலும், தகுதி திறமையை வைத்து, பார்ப்பனர், பின்னணி வகுப்பினர், பார்ப்பனரல்லாதார், தாழ்த்தப்பட்டோர், முஸ்லீம், கிருஸ்துவர், ஆகியோரெல்லாம், வேட்டையாடலாம்.

இந்தவேட்டையில் எவர் வெலிப்பர் என்பது தெரியாத விஷயமல்ல.

தகுதிதிறமை பேசிய கும்பலுக்கு தலை வணங்கிவிட்டது, புதுத்திட்டம்.

தகுதியையும் திறமையையும் எடைபோட, மாணவர்களுடைய மார்க்குகள், சரியான எடைப் பொருள் அல்ல.

இருந்தும், இதில் ஏனோ விட்டுக் கொடுத்திருக்கின்றனர், சென்னை சர்க்கார்.

ஆனால், இதற்கு சமாதானம் கூறுவதுபோல், 60 இடங்களுக்கும் மாணவர்களைத்தேர்ந்தெடுக்க கமிட்டிகள் வேலை செய்யும் — அவை நேரில் பார்த்தே மாணவர்களைச் சேர்க்குமென சர்க்காரின் தகவல் கூறுகிறது.

பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் பொறுப்பிலே இக்கமிட்டி இருக்குமென்றாலும், பாதிக்கப்பட்ட சமுதாயத்தைச்சேர்ந்தோரே எப்போதும் துணைவேந்தர்களாயிருப்பர் என்பது என்ன நிச்சயம்!

இன்றுள்ளோர் மாறி, அந்த இடத்தில் 'அவர்கள்' வந்தால், நாம் பேசும் பரந்த மனோபாவம், அங்கே காணவாமுடியும்? தற்போதைய ரயில்வே இலாகாவைப் பார்த்தாலே, விளங்குகிறதே!

எனவே, இந்த ஏற்பாடுமூலம் நிரந்தர பலன், பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களுக்கு ஏற்படும் வழியில்லை.

சிலர் கூறலாம், "பார்ப்பனப் பையன்கள்மட்டுமா கெட்டிக்காரர்கள். நமது பையன்களும் கெட்டிக்காரர்கள்தான். வேண்டுமானால் போட்டி போடட்டும், இருவரும். எப்போது பார்த்தாலும் படிப்பு வரும் இனம் பார்ப்பனருடையதே, என்று சொல்வதால் என்னபிரயோஜனம்? ஏனிந்த தாழ்வு மனப்பான்மை?" என்பதாக.

இந்த விளக்கம், நமது வீம்பைத்தான் காட்டுமே யொழிய, உண்மையைக்காட்டாது.

ஏனெனில், நூற்றுக்கு மூவரான பார்ப்பனர், இதுவரை 14 இடங்களை பெற்று போக போக்கியங்களிலே மூழ்கித்திளைப்பவர்கள். அதோடு, அவர்களது வாழ்க்கை முறையும், சிறுவர்கள் படிப்பதற்குள்ள வசதிகளும் எவரும் அறியாததல்ல. ஏழைப்பார்ப்பனராயிருந்தாலும், அவர் வீட்டுப்பெண், எழுத்துக் கூட்டுமளவாவது படிக்காததாயிருக்காது? ஆனால், பார்ப்பனரல்லாத குடும்பங்கள் அப்படியல்ல.

இது சமுதாயத்திலே, அமைந்து போன கோணல்.

எப்படி இந்தக் கோணல் அமைந்தது?

இந்தக்கேள்வி, பலவிஷயங்களைக் கிளறச் செய்யும். எனவே, இங்கு, விளக்கம் தேவையில்லை.

ஆனால் ஒன்றுமட்டும் உண்மை.

சமுதாய விருட்சத்தின் மீது படர்ந்த கொடிகள் உச்சிக்கிளைக்குப் போய்விட்டன — தாவித்தாவி இந்நிலையில் வேரும், கிளையும் என்ன செய்யமுடியும், கொடி சென்றிருக்கும் இடம்வரை உயர?

ஆகவே, சமுதாயத்திலே ஏற்பட்டுவிட்ட இந்த 'பரம்பரை மாசு' போக, வீம்பு பயன் தராது.

தகுதிதிறமை பேசி, ஏர் பிடிப்போன் மகனும், வேதமோதியின் குழந்தையையும் மோதவிடுகிறது— சர்க்கார்.

கவலை நிரம்பிய குலத்திலே வந்தவன், 'கல்வியே கருந்தனம்' என உருப்போடும் கூட்டத்தோடு மோதி வெற்றி பெறுவது இலேசானதல்ல!

மேல்தளத்தில் நிற்கிறது—பார்ப்பனசமுதாயம். கீழே கிடக்கிறது பார்ப்பனரல்லாத இனம்.

எப்படி, போட்டியில் ஜெயம் காணமுடியும்?

இதைக் காணும்போதுதான், புதுத்திட்டம் — நாம் எதிர்பார்த்த அளவு பூரிப்பைத் தரவில்லையே என்ற துக்கம் வருகிறது.

* * *

சமநீதி உரிமை கிடைக்க வேண்டுமென்பதில் சண்டமாருதமெனச் சுழன்றோர், கடைசியில், கலங்கிப்போயிருப்பதாகவே, தென்படுகிறது புதுத்திட்டத்தைக் காணும்போது.

அரசியலமைப்பு திருத்தப்படி, தமது கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ள, நல்லதோர் சந்தர்ப்பம் கிடைத்தும், குட்டையை குழப்பியேவிட்டிருக்கிறார்கள்.

துணிவோடு தமது இனத்துக்கான நன்மைகளைச் செய்வர் என்று நம்போன்றோர் கொண்டிருந்த நம்பிக்கையில் — துளிவிஷத்தைத் தூவி விட்டிருக்கிறார்கள்.

மாற்றாருக்கு நல்லபிள்ளைகளாகக் காட்டிக்கொள்ளும் மனோபாவம் காரணமாக இருக்கலாம்.

ஆனால் அதைவிட, இனத்துரோகம், மீளாபழியையல்லவா சுமத்தும்.

ஆனால் அந்த "இழிநிலை" இந்த விஷயத்திலும் தொடராது— துணிவோடு எதையும் செய்வர் என்று நம்பினோம்—அவர்களை மதித்து.

ஆனால் அவர்கள், ஏனோ தவறி விட்டார்கள்! நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டார்கள்!

சமூக நீதியைச் சாய்த்தோருக்கும் நன்மைகாட்ட வேண்டுமென்ற நினைப்பில், புதுத் திட்டத்தில், பொத்தல்களை வைத்துவிட்டார்கள்.

நல்ல சந்தர்ப்பத்தை, சர்ப்பக் குகைக்குள்ளே, தள்ளிவிட்டிருக்கின்றனர்.

இதனால் ஏற்படும் பழியும் இழிவும் என்றென்றைக்கும் மாறாது.

---

## செங்கற்பட்டு மாவட்ட
## தி. மு. க.
## செயற்குழுக் கூட்டம்

24—6—51 ஞாயிறு காலை $10\frac{1}{2}$ மணிக்கு, காஞ்சிபுரம் 'திராவிட நாடு' நிலயத்தில், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

மாநில மாநாடு குறித்தும், மாவட்ட இயக்க வேலைகளைப்பற்றிய முக்கிய விஷயங்கள் குறித்தும் ஆலோசிக்கப்படும்.

பகல் உணவு வசதியும் செய்யப்பட்டிருக்கிறது.

மாவட்ட உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வர வேண்டுகிறேன்.

சி. வி. எம். அண்ணாமலை.
செயலாளர்.

---



4-ம் பக்கத் தொடர்ச்சி

றம் வளர்கிறது என்று கண்டுபிடிப்பது என்பது முறையாக்கப்பட்டால், விதியாக அமைந்தால் தான் [illegible] முடப்படும்.

[illegible] சமூகம் ஏற்படும்.

[illegible] களியும் காணமுடியாத மலர்த் தோட்டம் காண முடியும்.

தென்றல் மட்டும் உலவி, வாடைக் காற்றின் ஜாடை கூட இல்லாத நிலை பிறக்கும்.

நாம் குற்றபுரியிலே இருந்து கொண்டு குற்றங்களைக் கண்டு பிடிக்கிறோம்.

* * *

எட்டிலிருப்பதை யெல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஆராய வேண்டும்.

தெய்வ ஏடானாலும், அதில் குறிப்பிடுபவை யெல்லாம் உண்மையென்று எடுத்துக் கொள்ளக்கூடாது.

தாண்டன் போதிக்கிறார். இந்த முறை பன்னெடுங்காலமாக வந்திருந்தால் இந்தப் பாழ்நிலை வந்திருக்காது!

சட்டமியற்றியும், சர்க்காரால் அடக்கமுடியாதபடி குற்றம் வளராது!

மக்கள் சகாயத்தை, போலீஸ் சகாயம் தேடிடும் நிலை பிறக்காது!

குற்றத்தைக் குறைத்திட, மக்கள் மனதிலே மண்டிக்கிடக்கும் குற்ற எண்ணங்களைமறைத்திடவேண்டும்.

அப்பொழுது குற்றம் புரியாதீர் என்று கூவிடத்தேவையில்லை. குற்றமே எது என்று கூறினால்தான் மக்களுக்குத் தெரியும்!

குற்றங்கள் மலைபோலக் குவிகின்றன. ஆனாலும் அடக்க முடியவில்லை.

எவரும், எந்தத் துறையிலிருப்பவரானாலும் குற்றம் புரியத் தயங்கவில்லை.

தராசு பிடிக்கும் கரமும், 'போனை' எடுக்கும் கையும் செய்கிறது திருட்டு!

சட்டம் பேசும் வாயும், சாஸ்திரம் படிக்கும் வாயும் பேசுகின்றன பொய்!

அழகு மாளிகையிலே; ஆனந்த கீதம் பாடி ஆடி மகிழ்வோரும், ஆபாசத் திருவிளையாடல் புரிகின்றனர்.

செய்யாத பாவம், கூறாத பாதகம் எதுவுமில்லை.

இதற்கெல்லாம் காரணம், அந்தப் பாபகாரியங்களுக்குக் காரணம், அந்தக் குற்றத்தின் கொடுமையைப் படம் பிடிக்கும் எண்ணம் வளரவில்லை அவர்களின் இதயங்களில்!

குற்றங்களை செய்யத் தூண்டுவது மட்டுமல்ல, அவைகளைச் செய்த பிறகு அவைகளுக்குப் பரிகாரமும் காட்டப்பட்டுள்ளன, நமது பழங்கால ஏற்பாடுகளில்!

ஆகவே துணிந்து செய்கிறான் குற்றங்களை!

ஏழையை வதைப்பான்—கோயிலில் பாலாபிஷேகம் செய்துவிட்டால், அவன் பாவம் தீர்ந்துவிடுமே!

கொள்ளை வட்டி வாங்குவான்— ஆனால், வெள்ளி ரிஷபம், செய்துவிட்டால், அவன் பக்திமான் என்று பாராட்டப் படுவான்!

ஒரு அபிஷேகம், பாவியை, புண்ணிய சாலியாக்கும்!

கும்பாபிஷேகம், கொடுமைக்காரனை குணாளனாக்கும்!

பெரிய பாவங்களானால், யாத்திரை—புண்ணிய தீர்த்த முழுக்கு என்று காட்டிவிட்டனர்!

இல்லாவிட்டால், ஆண்டவனுக்குப் பலி கொடுக்கலாமா, பலி கொடுக்கக்கூடாதா என்ற பிரச்சினையில்; மூன்று பேர் பலியாகியிருப்பரா? சிறு நாடார் குடியிருப்பு கிராமத்தில் இந்தக் கொலை! ஆண்டவனுக்குப் பலி கொடுக்கப் போன பக்தர்கள் கதி இது!

கொலை, பக்தர்களுக்குப் பாதகமானச் செயலென்று தெரியாதா? ஏன் செய்தார்கள்?

குற்றத்தார், இருப்பதற்குக் காரணம், அடிப்படையைப் புரிந்து கொள்ளவேண்டும், பிறகுதான் குற்றத்தாரார் குறைவர்!

சட்டம் செய்தும், தீண்டாமையை நிலைநாட்ட முடியவில்லையே என்று, சர்க்காரையே நடத்துவிக்கும் கட்சியின், தலைவரே கூறுகிறார்!

குற்றத்தாரார் அவ்வளவு வளர்ந்துள்ளனர். அவர்கள் குறைந்திடத்தக்கமுறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். தாண்டனுக்கு இது தெரியவேண்டும்!

## அழிக்க முடியாதது!

அழிக்க முடியாத அவமானம்! துடைத்துவிடமுடியாத பெரும் பழி!

யாருக்கு? இந்த நாட்டோருக்குத்தான்! இந்த நாட்டில் [illegible] பெற்ற மக்கள் என்று உலவுவோருக்குத்தான்!

ஏன்?

இந்நாட்டோர், அயோக்கிய சிகாமணிகளாம்! அதனால்தான் இந்த அவமானத்திற்காளாக்கப்பட்டார்களாம்!

யாரால்? எப்படி?..!......என்று கேள்விமேல் கேள்வி வீசாதீர்கள்! துக்கம் தொண்டையை அடைக்கும்.

வாக்குரிமை பெற்றோர் தங்கள் வாக்குரிமையை நல்ல முறையில் உபயோகிக்கவேண்டும்.

ஆள்மாருட்டம் செய்யும் கெட்ட பழக்கத்தைக் கைவிட்டுவிடவேண்டும்.

இப்படி உபதேசம் புரிவதோடு விட்டிருந்தாலாவது விட்டுவிடலாம்! ஆனால் அதோடு நிறுத்தவில்லை.

அழிக்கமுடியாதமையினால், ஒவ்வொரு வோட்டர்மீதும் ஒரு அடையாளம் போடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தஅடையாளம்இரண்டு வாரங்கள்வரை அழியாதது.

இது அழிக்கமுடியாத அடையாளமா, அவமானமா-இப்பொழுது சொல்லுங்கள்!


காங்கிரஸ் ஆட்சியாளர்கள் நாட்டோரை எந்த அளவிற்கு மதிக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்.

தாங்கள் முகத்தில் கருமை பூசிக்கொள்ளப்போகிறார்கள் தேர்தலில் என்பதற்காக, வாக்குரிமை பெற்ற அனைவருக்கும் மை பூசுகிறார்கள்.

சென்னை லட்சுமிபுரயுவர்கள் சங்கத்தில் பேசிய நிதிமந்திரி கனம் கோபாலர் இப்படிக்கூறியுள்ளார்.

அழிக்கமுடியாத மையினால், அடையாளமா! அவர்களுக்கா, மக்களுக்கா என்பதை தேர்தல் சொல்லட்டும்.

ஆனால் நாட்டோருக்கு, இது அழிக்க முடியாத அவமானம்!



தொடர் கதை

# யாத்திரை

தில்லை-வில்லாளன்

## 2

லீலாவுக்கு

## மங்கை

[ஓடிய கதை:— சுந்தரம், தன் கல்லூரித் தோழி பத்மாவைக் காதலித்தான். அவள் பெற்றோரின் வற்புறுத்தலால் பார்த்திபன் என்ற வாலிபனை மணந்துகொண்டாள். காதல் தோற்றுவிட்டது. கடமை வென்றது. அந்தத் திருமணத்திற்கு வர முடியாது வாழ்த்து மட்டும் அனுப்பினுள் பத்மாவின் தங்கை லீலாவின் இளந்தோழி மங்கை அவள் வாழ்விலேயும் ஒரு புயல்... தெப்ப உற்சவம் பார்க்கச் சென்ற இடத்தில் தினகரனைச் சந்திக்கிறுள்.]

"என்னம்மா வேண்டும்......" என்றுன்.

"இந்தத் திண்ணையில் இரவு படுத்துறங்கலாமா..." என்றேன் கொஞ்சம் கூச்சம், கொஞ்சம் அச்சம் தொனிக்க!

"ஆகா, தாராளமாக..." என்றுன். அதற்குள் என் பெற்றோர்கள் என்னை வந்தடைந்து விட்டார்கள். அவர்களைப் பார்த்ததும் அவன் முகத்திலே விகாரம் குடியேறிவிட்டது. சிரிப்பால் திரை கட்டி மறைத்தான்.

"இருந்தாலும்......இங்கு வெளியில் படுப்பது அவ்வளவு நன்ருக இருக்காது. என்னேடு வாருங்கள், தக்க இடந் தருகிறேன்." என்றுன்.

"சரி..." என்று இழுத்தேன்.

இரு வாலிபர்கள் புறப்பட்டார்கள். ஒரு இருண்டவீட்டைத் திறந்தார்கள். இருட்டில் தடவியெடுத்து ஒரு விளக்கை எடுத்துக்கொளுத்தினுர்கள். ஒருவன் போய்விட்டான் தானுகவா, அல்லது அன்பர் 'அல்டாப்' அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கியா என்று எனக்குத் தெரியவில்லை இன்றுவரை!

"இது என்வீடு........"என்று தொடங்கினுன் பேச்சை. அதுவும் அந்த 'ஓசுமகாராசா' வின் பித்தலாட்டம் என்பதைப் பின்னுல் புரிந்துகொண்டேன்.

பிறகுஎன்னைப்பற்றிவிசாரித்தான். என்குடும்ப நிலவரங்களை அனுதாபத்தோடு கேட்பதாக நடித்தான். இடையிடையே என் பெற்றோர்களோடுபேசி அவர்களிடம் 'சபாஷ் நல்லபிள்ளை!' என்ற பெயரைப் பெற்றுவிட்டான். ஒரு மணிநேர உரையாடலில் என்னுல் அவன் எவ்வளவு திறமைசாலி 'குல்லாய் போடலில்' என்று நீங்களே முடிவு செய்யுங்கள்!

அவனது பக்குவப்பட்ட மூளை வகுத்துக்கொடுத்த இடத்தில் படுத்துக்கொண்டோம். என் மனம் அடிக்கடிச் சொல்லிக்கொண்டிருந்ததைப்போலவே நள்ளிரவில் நடந்துவிட்டது!

என்னைத் தொட்டான்......பிறகு நடந்ததை, லீலா, நீயே புரிந்துகொள். நீ புத்திசாலி!

விடிந்தது...அவன் எச்சில்படுத்திக்குடித்த 'கர்ப்பி'யைப் பருகுவதிலேகூட ஒரு தனியின்பம் இருப்பதாகக் கருதினேன் — ஏமாற்றப்படப்போகிற சித்தத்தின் நிலை தவறிய ஒருசிங்காரிதானே நான்! எதையெதையோ கூறி வண்டியேற்றிவிட்டான்.

என்னையும் தினகரனையும் இணைத்துவைத்து மகிழ்ச்சியூட்டிய பெருமை தபால்கார தம்புசெட்டி என்ற அந்த கிழவருக்குத்தான்! தினமும் தினகரனின் மடல்களைக் கொண்டுவந்து தருவார். அவர் 'கருணை' கிடைக்கவில்லையென்றுல் அன்று என்கண்கள் குளங்கள்! கடிதம் வரவில்லையென்றுல் தினகரன்மீதுகூட கோபம் வராது. தம்புசெட்டிமீது ஆத்திரம் ஆத்திரமாக வரும். அந்தக்கிழவர் பலே வேடிக்கைக்காரர்! இல்லையென்பதே அவர் பழக்கம் இல்லை. கடிதம்இருக்கிறதா என்று கேட்டால் உடனே பதில் சொல்வார். நிறைய இருக்கின்றன...என்று. ஆவலோடு விரைவினுல் உங்களுக்கு வரவில்லையே என்பார். சுத்தவம்புக்கார மனிதன்! அவர் கடிதங்கள்மட்டும் எனக்குக் கொடுப்பதோடுமட்டுமல்ல, எனக்கு அறிவுரைகளும் அடிக்கடி வழங்குவார்.

நான் அடிக்கடி வாரும் கண்ணளா......என்று அன்பு ஆணையிட்டுக்கொண்டே இருந்தேன் கடிதமூலம்! தினகரன் வருவதாக இல்லை. எனக்கு அப்போதே சந்தேகம் தோன்றிட ஆரம்பித்தது.

ஆனுல்........

திடீர்விஜயம்......ஆம், தினகரன் மதராஸ் கதம்பமணம் கம்மென்று வீச, ஒருபையும் பெட்டியுமுடன் வந்தான், வந்தேவிட்டான்! என் சாதாரண குரலிலே 'கோகிலகானம்' வந்து குந்திக்கிடந்தது... என்கால்கள் 'நாட்டியராணி'களாகிவிட்டன ஓடோடி வரவேற்றேன். உபசாரமொழிகள் ஆயிரம் சொல்லி அவனைத் திணறடித்தேன். என் தாயும் ஆர்வத்தோடு வரவேற்பு மடல் படித்தாள். என்தங்கையுடன் அவனை பேசத் தொடங்கிவிட்டான்.

இரண்டு நாட்களிலே என் இன்பக்கோட்டையிலே அவன் புகுந்து குறையாடினுன் அதுவும் என் அனுமதியோடு, ஒத்துழைப்போடு!...... இன்னும் இரண்டு வாரங்களில் திருமண ஏற்பாடுகளை முடித்துக் கொண்டு வருகிறேன் என்று கூறிப் போனுன். அதன்பிறகு அவன் திரும்பவில்லை.

தலைமை வகித்து நடந்த அந்தப் பக்கத்து தருமலிங்கம்......சொற்பொழிவாற்ற சரவணன், சுசீலன்... மோதிரம் செய்ய என் கழுத்தில் இருக்கிற தங்கத் தொங்கலிலிருந்து பொன் எடுத்துக்கொண்டால் போதும்... ஆர்ப்பாட்டம் வேண்டியதில்லை......உன் உறவினர்களுக்கு வேண்டுமானுல் சொல்லிக்கொள்



85536

எனக்குத் தேவையில்லை...இப்படிப் பேசிச் சென்ற அந்த 'ஹம்பக்' திரும்பிவரவே இல்லை.

நான் கடிதங்களை ஆயுதங்களாக மாற்றி, அஞ்சல் நிலையத்தை போர்க்கூடாரமாகப் பயன்படுத்தி வந்தேன். அவன் விடையெழுதுவதையும் குறைத்துக் கொண்டான். பிறகு நிறுத்திக்கொள்ளவும் தயங்கவில்லை.

என் வயிற்றிலே உன் குழந்தையடா...அட பழிகாரா...ஒரு பெண்ணின் வாழ்வைப் பாழ்செய்து விட்டாயே! நான் எப்படியோ ஒழிந்து போகிறேன். என் அவலட்சண உருவம் உனக்கு இன்ருவது தெரிந்ததே...அந்த அளவிற்குத் திருப்தி......உனக்கும் எனக்குமிருந்த தொடர்பை இன்ரோடு நிறுத்திக் கொள்வதே நல்லது. இனி என் கடிதங்கள் உன்னிடம் ஏன் இருக்க வேண்டும்? அவைகளைத் திருப்பியனுப்பிவிடு. அதுபோல் நீ எனக்கு எழுதித் தள்ளிய மடல்களைத் திருப்பிவிடுகிறேன்...ஆனுல் உன் துரோகத்திற்கு ஏற்ற பாடம் ஒரு நாள் கிடைக்கும்.....இப்படி எழுதினேன் என் கடைசி கடிதத்தில்! என் 'மகராசன்' அதற்கும் விடையெழுதவில்லை.

நான் ஆசிரியையாக இருந்த பள்ளியிலிருந்த ஒரு ஆசிரியர், மாதவன் என்ற அந்த உத்தம புத்திரனிடம் இதையெல்லாம் சொல்லியழுதேன். அவர் மணமானவர். அவரது மனைவி மரகதம் தங்கமான குணம் படைத்தவள். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை...வாடாமல்லி அந்தக் குழந்தையின் பெயர்! வாடாமல்லிகை எப்பொழுதும் என் இடுப்பிலேதான் குடியிருப்பாள். அவர் என்னைத் தன் சொந்த சகோதரி போலவே கருதி நடந்துவந்தார். அவர் எனக்காக திருச்சிக்கு மாற்றிக்கொண்டு போனுர். என் கதாநாயகன் ஸ்ரீமான் 'சுயபுராணம்' அவர்களைப்பற்றி முழு விவரங்களைத் திரட்டி வருவதாக உறுதிகூறிச் சென்றுர். அப்படியே அவனது படாடோபங்களை அலசி அலசிப் புரிந்துகொண்டார். அந்த 'பிட்நோட்டீஸ்' அவருக்கும் நண்பராகி விட்டானும்.

அவர் அவனைப்பற்றிப் பேசிய பொழுது என் கண்கள் ஒளிக்கதிர்களை வீசின......

வானத்திலே பார்...அடிவானம் செக்கச்சிவந்து அழகுக்கு அழகு இட்டுகிறது. லீலா, அதுதான் உன்னத இலட்சியம்! பத்மாவுக்கு வாய்த்த சுந்தர் போன்ற உண்மையான இலட்சியவாதிகள். அந்த முடிவிடத்தை நோக்கி ஓடுகிறுர்கள்—யாத்திரை போகிறுர்கள். அவர்கள் அதை அடைகிறுர்களோ, இல்லையோ, அது வேறு பிரச்சினை! அவர்கள் தங்கள் இலக்கை மாற்றிக்கொள்வதே இல்லை. என்னை ஏமாற்றினுனே தினகரன் என்று பெயர் படைத்த 'திருவாரூர் தீவட்டி' இலட்சியமில்லாத வாழ்க்கைப் பாதையில் ஓடுகிறுன் தெருவில் நாய்களைப்போல! குறியில்லாமல் கண்டவரைப் பார்த்துக் குலைத்துக் கொண்டு இங்கும் அங்கும் ஆட்டம் போடுவார்கள். அவர்களுக்கு அடிவானத்தைப் பற்றிய எண்ணம் இருப்பதில்லை அதன் இலட்சிய செந்நிறத் தோற்றத்தைக் கண்டு ரசிப்பதில்லை. யாத்திரை போக வேண்டும் — ஆனுல் போகுமிடத்தைப்பற்றிக் கவலையில்லை.

உலகத்தில் காதல், கடமை என்ற இரண்டும் பெரிய புரட்சி செய்கின்றன என்று எழுதிவிட்டாய் லீலா ......உண்மை. ஆனுல் கடமையும், கட்டுப்பாடும் எப்படி 'பாரதப் போர்' செய்கின்றன என்று கூறி விட்டேன்.

இதற்கெல்லாம்........

உலகில் இரண்டுவகை மனிதர்கள் வாழ்கிறுர்கள். இலட்சிய வாதிகள் ஒரு கூட்டம். காரியவாதிகள் என்று மற்றொரு வகையினர்! உலகில் சுந்தரமும் வாழ்கிறுன். தினகரனும் இருக்கிறுன். அதுகூட விசித்திரமில்லை. சுந்தரத்தை விடத் தன்னை உலகு மதிக்க வேண்டும் என்று புலிவேடம் போடுகிறுன், நரி உடல் மறைத்து! முடியுமா? முடிந்தால் தான் எத்தனை நாட்களுக்கு நீடிக்கும்?

இலட்சிய அடிவானத்திற்கு அப்பால் தான் பெருமை, புகழ், பாராட்டு...எல்லாம் இருக்கின்றன. இலட்சியப் பாதையை விட்டுவிட்டு, புகழையும், பெருமையையும் அடைய முயற்சி செய்கிறுர்கள். சந்தர்ப்பங்களை நண்பர்களாக்கிக் கொள்கிறுர்கள். சாகசங்களால் பிறரை ஏமாற்றி பெரிய மனிதராகப் பெரும் முயற்சி செய்கிறுர்கள். காரியவாதிகளுக்கு இலட்சியத் தூய்மை இருப்பதில்லை. சந்தர்ப்ப வாதத்தால் தங்களை [illegible] உயர்த்திக் கொள்ளலாம் என்று எண்ணுகிறுர்கள்.


சுந்தர்—தினகரன்......ஒட்டிக் கொள்ள முடியாத இரண்டு தத்துவ உருவங்கள்! மலையொன்று, மடுவொன்று! எரிமலை யொன்று, சமவெளியொன்று! இலட்சியம், அலட்சியம் ஒட்டி வாழ முடியுமா?

மாதவன் சொன்ன பயங்கர உண்மைகளைக்கேட்டால் திடுக்கிட்டு விடுவாய், லீலா, என்ன அவன் வலை வீசிப் பிடித்த பிறகு, பணத்திற்காக ஒரு பெண்ணை 'விலை பேசி' விட்டான். இன்னொரு பெண்ணுக்குப் 'பொருத்தம்' பார்த்தானும். இன்னொரு பெண்ணோடு 'இந்திர விளையாட்டு' போடத் திட்டமிட்டானும். இன்னும் இருட்டறையில் எத்தனையோ — யார் கண்டார்கள்? வெளியே அவன் பேசுவதைப் பார்த்தால், அவன் போடுகிற 'பெரிய மனித' வேடத்தைக் கண்டால்...நீ மிரண்டுதான் விடுவாய்.

மலைபோல வந்து பனிபோல போய்விடும் என்று சொல்வார்களே அதுபோலத்தான் என் துன்பமும் போய்விட்டது! என் வயிற்றிலே எழுந்த கருதானே சிதைந்து என் மானத்தைக் காப்பாற்றியது.

(தொடரும்)


## வெளி வந்து விட்டது!



விலை ரூ 1—8—0

திராவிடப் பண்ணை,

தெப்பக்குளம் திருச்சி.

# சமூக நீதி எழுத்துரிமை பேச்சுரிமை

# மாநாடுகள்

## ★ திருப்பத்தூர் ★

வி. எஸ். பழநிசாமி பந்தலில், சி. எம். சுப்பிரமணியம் அரங்கில்

**30—6—51**
**சனி**
**அன்று**

தலைவர்:

**க. அன்பழகன்** எம். ஏ.,

துவக்குபவர்

சென்னை. **வி. முனுசாமி**

காலை: கலைவாணர் என். எஸ். கே. குழுவினருடன்
வில்லுப்பாட்டு, திராவிடப்பண்

இரவு: சி. என். ஏ. கே. ஆர் ராமசாமி பங்குகொள்ளும்

## சந்திரமோகன்

**1—7—51**
**ஞாயிறு**
**அன்று**

தலைவர்:

**ஈ. வே. கி. சம்பத்**

துவக்குபவர்

**சி. வி. எம். அண்ணாமலை**

காலை: நாகூர் அனீபா, கே. ஆர். செல்லமுத்து
திருச்சி லோகநாதன் இன்னிசை.

இரவு: சி. என். ஏ. குழுவினர் நடிக்கும்

## நீதிதேவன் மயக்கம்

**இரண்டு நாட்களிலும்**

அறிஞர். கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி., நாரணதுரைக்கண்ணன், இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன் பி. ஏ., என். ஜீவரத்தினம், கே. மனோகரன், காஞ்சி கலியாணசுந்தரம், என். எஸ். இளங்கோ, ப. உ. சண்முகம், கோபி ஜி. என். ராஜு, ஏ. கே. வேலன், சி. பி. சிற்றரசு, கண்ணதாசன், இராமாமிர்தம்மையார், மா. இளஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்), என். வி. நடராசன், ஏ. சித்தையன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, அரங்கண்ணல், தில்லை. வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஆகியோர் பேசுவர்.

**தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை பங்கு கொள்வார்.**

வரவேற்புக்குழு— தி. மு. க. வடார்க்காடு மாவட்டம்.



Edited Printed & Published by C. N. Annadurai M. A. at DravidaNadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram